# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


12 JUL 1973
V 1968



சிங்காரவேலர்
சிக்கல், நாகப்பட்டினம்.

மாலை 11] கீலக - ஐப்பசி - நவம்பர், 1968 [மணி 2

சென்னை அரசாங்க அறநிலையப்



திருத்தணிகை மலைப்பாதைத் திறப்பு விழாவில்,
தமிழக முதல் அமைச்சர் மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை M. A
அவர்கள், கலந்து கொண்டு சிறப்பித்து, உரை நிகழ்த்துதல். (31—8—68).

## பொருளடக்கம்


1. சேக்கிழாரும், சைவசித்தாந்தமும்
2. பாண்டிய நாட்டுத் தலங்கள்
3. வியர்வை சிந்தும் வேலவன்
4. வாழ்த்துச் செய்திகள்
5. அபிராமி அந்தாதி
6. இந்தியப் பெருந்தத்துவ ஞானிகள்
7. ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்
8. தஞ்சைப் பெரிய கோயில்
9. மகாபாரதம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 11] கீலக - ஐப்பசி - நவம்பர், 1968 [மணி 2


# சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்

முன்னுரை ;

**சைவசித்தாந்தம் :**

"சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியத்தமிழ் மக்களுடைய பேரறிவின் பெரும் பயனாகும்.

இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிலும், சைவசமயமே மிகவிரிந்ததும், பெரும்பான்மையான மக்களால் தழுவப் பெற்றதும், ஐயத்திற்கு இடனின்றி உண்மையிலேயே பெருஞ்சிறப்பு வாய்ந்ததும் ஆகும். தமிழ் மக்களின் உள்ளங்களை அதுபெரிதும் கவர்ந்து அரசு வீற்றிருக்கின்றது" [1].

"பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும்விட, சைவசித்தாந்தமானது சில சிறப்பியற் பண்புகளைத் தனக்கெனப் பெற்றொளிர்கின்றது. அதுபெரிதும் பழமை வாய்ந்ததாய், அப்பழமையினாலேயே பெருமைகளை எல்லாம் பெற்றுவிளங்குகின்றது. சைவசித்தாந்த தத்துவக் கொள்கை, தமிழ்மொழிக்கும் தமிழ்மக்களுக்குமே சிறப்பாக உரியது. சமய உலகில், தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரும் பழமையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம், சைவசமயமே நேரிதின் உரிமைத்தொடர்புடையதாகும்."

"தமிழ் மக்களின் சமயமாகிய அதனை நோக்க, அடுத்துள்ள ஏனையன பிறவெல்லாம், ஒப்பியல் முறைமையிற்காணின், அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றியனவுமேயாகும். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றை உணர்த்தும் முறையிலும், மிகமிகச் சிறந்ததொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது, சைவசித்தாந்தமே எனலாம்." [2]

இங்ஙனம், மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் போற்றிப் பாராட்டும் சீரும் சிறப்பும் பெற்றது, நமது தமிழகத்துச் சைவசித்தாந்தம். இத்தகைய சைவசித்தாந்தக் கொள்கைத் துறையில், சேக்கிழார் பெருமானுக்கு உரிய சிறப்பியல்புத் தொடர்பு நலம் குறித்து, ஆராய்ந்துஉணர முயலுதல், அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாகும்.

"கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிர முகத்தாற் கண்டார்"

எனச் சேக்கிழார் பெருமான், திருஞான

1. Dr. G. U. Pope

2. The Rev. Mr. Goudie

சம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடுதல்போல, நாமும் சேக்கிழார் பெருமானைக் குறித்து 'ஆயிரமுகத்தாற் கண்டு' ஆராய்ந்துணர முற்படுதல், நம்மனோர்க்குப் பெருநலம் பயக்கும்.

பொதுவாகப் பெரியபுராண வரலாறு களை மட்டுமே, கற்றும் கேட்டும் வருவது நம்மனோர் இயல்பு. எனவே, 'சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்' என்னும் தலைப்பு ஒரு வகையிற் புதுமையும், மிகவும் கடினமும், அருமையும் வாய்ந்த சிறந்த பெரும் பொருளாகும். சித்தாந்த நூல்களையும் பெரியபுராணத்தினையும், முழுவதாகப் பலகால் கற்று ஆராய்ந்து ஒப்பிட்டு உணர்ந்த, பண்பட்ட சிறந்த அறிஞர் பெருமக்களே, இவ்வரிய இனிய பொருள் பற்றிப் பேசுதற்கு, மிகவும் உரிமையும் தகுதியும் உடையவராவர்.

**கவிதையும் தத்துவமும் :**

கவிதைக்கும், தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. கவிதை யானது வாழ்க்கையின் அநுபவத்தி லிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது; வாழ்க்கைக்கு உரியதாக விளங்கிகுன்றது; வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக் கோள் கொண்டது ; வாழ்க்கையின் குறை நிறைகளை ஆராய்ந்து உணர்த்தித் திருத் திச் செம்மைப்படுத்துகின்றது! [3]. தத் துவம் என்பதும் இத்தகைய ஒன்றேயாகும். தத்துவமும் வாழ்க்கை அநுபவங்களி லிருந்தே தோன்றுகின்றது. வாழ்க்கை யைப் பற்றியதாக, வாழ்க்கையினின்று தோன்றுவதாக, வாழ்க்கையை வளப் படுத்தும் குறிக்கோள் உடையதாக, தத்து வமும் விளங்குகின்றது. வாழ்வின் குறை நிறைகளை உணர்ந்து, உய்ய முயலும் உயரிய உணர்வே, தத்துவஞானம் எனப் படுகின்றது. இவ்வாற்ருல் கவிதைக்கும், மெய்யுணர்வு ஆகிய தத்துவஞானத்திற் கும் இடையே உள்ள, இயைபு ஒப்புமை களை யாவரும் இனிது உணரலாம்.

"சிறந்த தத்துவஞானி யல்லாத எவ ரும், ஒருபெரும் சிறந்த கவிஞராக விளங் கியதில்லை"[4] என்று, கோல்ரிட்ஜ் என்னும் அறிஞர் கூறுகின்ருர். "ஓர் உயர்ந்த உண்மைத் தத்துவத்தை, எவ்வாற்ரு லேனும் விளக்காத கவிதையினை இயற்றும் ஆசிரியர் எவரையும்,யான்மதிப்பதில்லை"[5] என்று, ஜேம்ஸ்லோவல் என்னும் அறிஞர் இயம்புகின்ருர். "தத்துவத்திற்கே முத லிடம்; அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்"[6] என்று, ராபர்ட் பிரவுனிங் என்னும் கவிஞர் குறிப் பிடுகின்ருர். "தத்துவ மனப்பான்மை யைத் தூண்டுவித்துத் தோற்றும் அள வைப் பொறுத்தே கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன"[7] என்று எமர்சன் என்னும் பேரறிஞர் கூறுகின்ருர். இங்ஙனம், கவிதைக் கலைக்கும் தத்துவக் கலைக்கும் இடையேயுள்ள மிக நெருங்கிய தொடர்பினை, அறிஞர்கள் பலரும் வலி யுறுத்திக் கூறுதலின், "சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்" என்னும் சிறந்த பொருள் பற்றி, ஈண்டு இயன்றபெற்றி ஒரு சிறிது ஆராயமுயலுவோம்.

**சேக்கிழாரும், சித்தாந்த நூல்களும் :**

சேக்கிழார் பெருமான், திருமுறையாசிரி யர்கள் பலருள் ஒருவர். சைவ சித்தாந்தம்

3. " Poetry is made out of life, belongs to life, exists for life. It is important, therefore, to hold fast to this that poetry is bottom at a criticism of life; that the greatness of a poet lies in his powerful and beautiful application of ideas to life - to the question: How to live."

—Matthew Anold.

4. "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher".

—S. T. Coleridge.

5. "No poem ever makes me respect its author which does not in someway convey a truth of philosophy".

—James Lowell.

6. "Philosophy first, and poetry which is its highest outcome afterwards".

—Robert Browning.

7. "The great poets are judged by the frame of mind they induce".

—R. W. Emerson.

என்பது, மெய்கண்டார் முதலிய சந்தானாசிரியர்களால் விளக்கப் பெற்ற சிவநெறிக் கொள்கை. திருமுறைகள் பன்னிரண்டு என்றும், சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என்றும், தனித்தனியாகவே பிரித்துக் குறிப்பிடப் பெறுகின்றன. சேக்கிழார் பெருமான் சிவனடியார்களாகிய அறுபான் மும்மை நாயன்மார்களின் வரலாறுகளைப் பாடியவர். அவர் தமது திருத்தொண்டர் புராணத்துள் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நிரலே கிளந்தெடுத்துக் கொண்டு வரையறை செய்து, வகுத்துரைத்து விளக்கத் தலைப்பட்டிலர்.[8]

'சைவ சித்தாந்தம்' என்னும் பெயரால் சிவநெறிக் கொள்கைகளை வரையறை செய்து, அறிவியல் முறைப்படி தடைவிடைகள் அமையவும், தருக்க நெறிமுறைகளுக்கு ஏற்பவும், செவ்விதின் அமைத்துச் சிறப்புற விளக்கியருளிய பெருமக்கள், ஆசிரியர் மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார், உமாபதி சிவனார் என்பவர்களேயாவர். சேக்கிழார் பெருமான் காலத்தில் சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாத்திரங்களுள் எதுவும் தோன்றிற்றிலது.

அவைகளெல்லாம் சேக்கிழார் பெருமான் காலத்திற்குச் சிறிது பின்னரே தோன்றலாயின. இந்நிலையில், சேக்கிழார் பெருமான் தமது நூலில் ஏதேனும் சைவ சித்தாந்தக் கருத்தினையோ, அல்லது அதற்குரிய குறியீட்டுச் சொற்களையோ, சொற்றொடர்களையோ (Technical terms) வழங்கியிருக்கின்றனரா? என ஆராய்ந்தறிய முற்படுதல், நம் அறிவிற்குப் பெரு விருந்தாக அமையும்.

**சித்தாந்தக் குறியீடுகள் :**

சேக்கிழார் சுவாமிகள் "சித்தாந்த சாத்திரங்கள்" தோன்றுதற்கு முன்னரே வாழ்ந்திருந்தவராயினும்,

பதி — பசு — பாசம்
இருவினை — மும்மலம்
பெத்தம் — முத்தி
சரியை — கிரியை — யோகம் — ஞானம்
இருவினையொப்பு — மலபரிபாகம்
சத்திநிபாதம் — தீக்கை
திருவைந்தெழுத்து

என்பன போன்ற பல சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களையும், அவற்றோடு தொடர்புடைய பலவகைக் கருத்துக்களையும், ஆங்காங்கே தமது நூலில் ஏற்றபெற்றி குறிப்பிட்டுச் செல்கின்றார். அவற்றுள் ஒரு சில முதன்மையான செய்யுட்களை மட்டும், ஈண்டுக் காண்போம்.

பொடியார்க்கும் திருமேனிப்
புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியவர்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அற்புதமோ? —1375

இருவினைப் பாசமும்
மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ்
மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து
அரசை இக்கடல்
ஒருகல்மேற் ஏற்றிடல்
உரைக்க வேண்டுமோ? —1399

"பந்தம் வீடு தரும்பரமன் கழல்" —300

எனவரும் பாடல்களில் பதி பசு பாசம், பசுபதி, இருவினை, மும்மலம், பந்தம் (பெத்தம்), வீடு (முத்தி), என்னும் சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்கள், பயின்று வந்திருத்தல் காணலாம்.

"நிலவியஇரு வினைவலையிடை
நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமனன் இடைதடைசெய்த
பொறிகளின் அளவுளவே" —734

"நிலைப்பட்ட மெய்யுணர்வு
நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற்
குற்றம்போல் ஆயினார்" —634

---

8. "Poetry, we feel, should not argue or analyse, but reveal : it should 'whisper r esults."

—A. D. Selincourt.

போதநிலை முடிந்தவழிப்
புக்குஒன்றி உடன்ஆனார்" —1253

"ஞானம்முதல் நான்கும்மலர்
நற்றிருமந் திரமாலை" —3594

"நலஞ்சிறந்த ஞானயோகக்
கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூலதேவர்" —3596

எனவரும் பாடல்களில்,

இருவினை
பொறி — புலன் — மனம்
மெய்யுணர்வு நேர்படுதல்
ஒன்றி உடனுதல்
ஞானம்—யோகம்—கிரியை—சரியை

என்பனவற்றைப் பற்றிச், சேக்கிழார் சுவாமிகள் பின்வரும் பாடல்களிற் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்.

"நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ பானம்ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
நேர்படச் செல்லும் போதில்" —752

"முன்னைவல் வினையும் நீங்கி
முதல்வனை அறியும் தன்மை
துன்னினன் வினைகள் ஒத்துத்
துலைஎன நிற்ற லாலே" —2722

"இந்தவெப் படைய நீங்க
எனக்கருள் புரிவீர் என்று
சிந்தையால் தொழுது சொன்னன்
செல்கதிக்கு அணியன் ஆனன்"— 2672

என்னும் பாடலில், தத்துவங்கள் சக்தி சிவம் இருவினையொப்பு மலபரிபாகம் ஆகியவைபற்றிய சைவசித்தாந்த நுண் பொருட் கருத்துக்கள், தக்காங்கு அமைந் திருக்கும் திறம், அறிந்தின்புறத் தக்கது.

"திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கப்
பொங்கிய ஒளியின் நீழற்
பொருவில் அன்பு உருவம் ஆனர்"
—753

எனச் சந்திநிபாதத் தன்மை பற்றியும்,

"காணுத அருவினுக்கும்
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்" —3648

எனச் சிவலிங்கத்தின்சிறப்புப் பற்றியும்,

"தோற்றும் மன்னுயிர்
கட்கெலாம் தூய்மையே
சாற்றும் இன்பமும்
தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டம்
எலாம்பரந்து அண்ணல் வெண்
நீற்றின் பேரொளி
போன்றது நீள்நிலா" —308

எனத் திருநீற்றினைப் பற்றியும்,

"பஞ்சின் மெல்லடிப்
பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம்
வல்வினை யும்பரன்
அஞ்செ ழுத்தும்
உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன
இருண் டது நீண்டவான்" —305

"ஆதி மந்திரம் அஞ்செழுத்து
ஓதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றை
மந்திரவிதி வருமே?" —2601

எனத் திருவைந்தெழுத்தினைப் பற்றியும், ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லும் பெரிய புராணப் பாடல்கள் பலவற்றில், சேக்கிழார்சுவாமிகள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் கூறும் செம்பொருட் கருத் துக்கள் பலவற்றிற்கும், அடிப்படை யமைத்து வைத்திருத்தல் அறிந்து மகிழ் தற்குரியது.

"ஓதிய எழுத்தாம் அஞ்சும்
உறுபிணி வரத்தாம் அஞ்சும்" —84

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



ஸ்ரீ கன்னிகா பரமேசுவரி

அன்பளிப்பு :
ஸ்ரீ கன்னிகா பரமேசுவரி கோயில்
சென்னை-1

எனத் திருவைந் தெழுத்தின் சிறப்பையும் பயனையும் விளக்கும் நிலையிற் போதரும் அரிய இனிய அழகிய பெரிய புராண வரி ஒன்றே, அறிஞர்களுக் கெல்லாம் ஆராப் பெருவிருந்தாக அமையும் அன்றோ? கற்பார் நெஞ்சம் களிதுளும்பச் செய்யும் இத்தகைய பொருள் பொதிந்த சிறந்த வரிகள், போற்றற் பாலனவாம்.

**சேக்கிழாரும், உமாபதிசிவமும் :**

இங்ஙனம், சேக்கிழார் பெருமான் தமது பாடல்களிற் குறிப்பிட்டுள்ள சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்கள் சொற்றொடர்கள் கருத்துக்கள் என்பனவற்றை மட்டுமே யன்றி, இனி வேறொரு வகையிலும் இப்பொருளை ஆராயலாம். சேக்கிழாரின் பெரிய புராண வரலாறுகள், சைவ சித்தாந்த நூல்களில் எவ்வகையிலேனும் இடம் பெற்றுள்ளனவா? சைவ சித்தாந்த சாத்திரங்களை அருளிச் செய்த சந்தான ஆசிரியர்கள், சேக்கிழாரின் பெரிய புராணத்தின்பால் மிக ஈடுபாடு கொண்டு மதித்துப் போற்றினர் என்பதற்கு ,ஏதேனும் சான்றுகள் உண்டா? என்பன போன்ற செய்திகளை ஆராய்தலும், ஈண்டுப் பொருந்துவதாகும்.

சேக்கிழார் பெருமான் 'அநபாயன்' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1123—1148) காலத்தவர் என்பது, பெரும்பாலான ஆராய்ச்சியாளர்களின் துணிபு. சந்தான ஆசிரியர்களின் காலம் இதற்கு முன்னையதோ? பின்னையதோ! என்பதைத் தெரிந்து தெளிந்து கொள்ளுதல், ஈண்டைக்கு இன்றியமையாததாகும். சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களின் வரிசையில் நான்காமவராக விளங்குபவர் உமாபதி சிவாசாரியர். அவர்வாழ்ந்தருளிய காலம் கி. பி. 1313 ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்னும் பின்னும் ஆகும் என்பது, அவர் இயற்றியருளிய 'சங்கற்ப நிராகரணம்' என்னும் நூலின்கண்,

"ஏழஞ் சிருநூறு எடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்ப"

எனப் போதரும் வரிகளாற் பெறப்படுகின்றது. ஆதலின் அவர் சேக்கிழாரின் காலத்திற்குப் பெரிதும் பிற்பட்டவர் என்பது தேற்றம். அவர், சேக்கிழார் பெருமான் வாழ்ந்து, பெரிய புராணம் இயற்றிய தில்லைக்கு அணித்தாக உள்ள "கொற்றவன் குடி"யில், (இந்நாளைய அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் சூழலில்), வாழ்ந்தவர். ஆதலின், அவர் சேக்கிழார் பால் ஈடுபாடு கொண்டவராய்ப் பெரிய புராணத்தினைப் போற்றி மகிழ்ந்திருப்பார் எனக் கொள்ளுதலில் தடையில்லை. "சேக்கிழார் புராணம்" "திருமுறைகண்ட புராணம்" என்பன உமாபதிசிவத்தின் பெயரால் வழங்குதலும் ஈண்டுக் கருதுதற்குரியது.

**சங்கற்ப நிராகரணம் :**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணம் என்னும் நூலின்கண், சிவசம வாதியை மறுக்கும் பகுதியில்,

"ஐந்தொழில் உயிரும்
தந்திடல் தகுமே?
ஆவதென்? முன்நாள்
நாவலர் பெருமான்
பண்டொரு முதலை
யுண்டமைந் தனைவர
அழைத்தனன் என்றாய்!
பிழைப்பிலது அதூஉம்!
தந்திட வேண்டும்
என்றனர் அன்றே?"

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகள் முதலை யுண்ட மைந்தனை வரவழைத்துத் தந்தருளியதும்; ஈசுர அவிகார வாதியை மறுக்கும் பகுதியில்;

"காழி மாநகர்க்
கவுணியர் கடவுள்
ஞானம் ஆகிய
நற்பதி கங்கள்
எழுதுறும் அன்பர்தம்
இன்புறு மொழியால்
களிறென அணைந்த
கல்மனப் புத்தன்
முருட்டுச் சிரம்ஒன்று
உருட்டினர், அன்றி
வாய்ந்த வாள் ஒன்று
ஏந்தினர் இலரே!"

எனச் சம்பந்த சரணலயர் என்பவர், போதிமங்கைப் புத்தநந்தியின் தலையுருளச் செய்ததும்; ஆகிய பெரிய புராண வரலாற்று நிகழ்ச்சிகளை, உமாபதி சிவாசாரிய சுவாமிகள் எடுத்துக் காட்டியருளியுள்ளார். அன்றியும் சைவவாதி மறுப்பில்,

"ஒருபணி செய்யாச்
 சிரபுரச் சிறுவரும்
அரச ராகிய
 தருணத் தலைவரும்
முதிர்பர சமயத்
 திதமுறும் அரசரும்
ஞானம் பெற்ற
 நன்மையினாலும்"

எனத் திருஞான சம்பந்தர், சேரமான் பெருமாள், திருநாவுக்கரசர் ஆகிய நாயன்மார்களையும், முறையே உமாபதி சிவம் குறிப்பிட்டுள்ளார்.

**போற்றிப் பஃறொடை :**

இம்மட்டோ! போற்றிப் பஃறொடை என்னும் சாத்திர நூலில், இறைவனின் அறக்கருணை மறக்கருணைகளைக் குறித்து விளக்குங்கால், பெரிய புராணத்தின் தொடக்கத்தில் சேக்கிழார் சுவாமிகளாற் சிறப்புறச் செவ்விதிற் பாடப் பெற்றுள்ள **மனு நீதிச் சோழன்** வரலாற்றைத் தக்க முறையில் எடுத்துக் காட்டாகப் பயன்படுத்தியுள்ளார்.

"ஓடியதே ரின்கீழ்
 உயிர்போன கன்றாலே
நீடுபெறும் பாவம்இன்றே
 நீங்கும்என—நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன்
 வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை
 நமன் தூதர்—வெஞ்சினத்தால்
அல்லல் உறுத்தும்
 அருநரகம் கண்டுநிற்க
வல்ல கருணை
 மறம் போற்றி"

இன்னோரன்ன செய்திகளெல்லாம், சேக்கிழார்க்கும் சைவ சித்தாந்த நூல்களுக்கும் உள்ள இயைபுகளைத் தெளிவுற விளக்குவனவாகும்.

**திருவருட் பயன் :**

இங்ஙனம் சேக்கிழாரிடத்தும், அவர் தம் நூலின் மாட்டும், உமாபதி சிவம் கொண்டிருந்த பேரீடுபாட்டையும், பெரும் பயிற்சியையும் விளக்கித் தெளிவுறுத்த, மேலும் பற்பல சான்றுகளை எடுத்துக் காட்டுதல் கூடும்.

"பார்வைஎன மக்களைமுன்
 பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக்காணர் புவி"

என வரும் திருவருட் பயன் செய்யுள், "கண்ணில் நீடு பார்வை ஒன்று கொண்டு காணும் அன்பர் முன், எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம்மருங்கும் ஏகினர்" (720) எனக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றில் வரும், பெரிய புராணச் செய்யுளை நினைப்பிப்பதாகும். இவ்வாறே,

"செய்வானும் செய்வினையும்
 சேர்பயனும் சேர்ப்பானும்
உய்வான் உளன்என்று உணர்"

எனவரும் திருவருட்பயன் செய்யுள்,

"செய்வினையும் செய்வானும்
 அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
 விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
 அல்லவற்றுக் கில்லைஎன
உய்வகையாற் பொருள்சிவன்என்
 றருளாலே உணர்ந்தறிந்தார்"

—3645

எனச் சாக்கிய நாயனாரின் வரலாற்றில் வரும், சேக்கிழார் திருமொழியின் எதிரொலியே யாகும் என்பதில் ஐயமில்லை.

**சிவப்பிரகாசம் :**

உமாபதி சிவம், சிவப்பிரகாசம் என்னும் தமது நூலில் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" எனவும், (7) "வேதத் தலைதரு பொருள்" (99) எனவும் அருளிச் செய்ததற்கு அடிப்படை, பெரிய புராணத்துள்,

"பண்ணின் பயனும் இன்னிசையும்
பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் இன்னிசையும்
வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின்
வளத்தின் பெருமை
வரம்புடைத்தோ? —1219

எனச் சண்டேசுர நாரனுர் வரலாற்றில் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்ததே யாகும்.

**சேக்கிழாரும், அருள்நந்தி சிவமும்:**

இக்கருத்தினே வலியுறுத்தும் வகையில் ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், "வேத நூல் சைவ நூல் என்றிரண்டே நூல்கள். வேறு, இவற்றின் விரிந்த நூல்கள். ஆதி, அனுதி; அமலன் தருநூல் இரண்டும். ஆரண நூல் பொது. சைவம் அருஞ் சிறப்பு நூலாம். நீதியினுல் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது. நீள் மறையின் ஒழி பொருள், வேதாந்தத் தீதில் பொருள், கொண்டு உரைக்கும் நூல் சைவம். பிற நூல் திகழ்பூர்வம். சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" (சித்தியார், சுபக்கம்: 267) என வரையறுத்து உரைத்தருளியதும், ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" எனத் திறம் தெரிந்து அருளிச் செய்த திருமொழியின் விரிவுரையே எனலாம்.

**இருபா இருபஃது:**

இஃதொன்றே! "சகலாகம பண்டிதர்" என விளங்கிய ஸ்ரீஅருள்நந்தி சிவாசாரியர், சேக்கிழார் பெருமானே மிகவும்போற்றி, அவர் அருளிய நூலேயும் சிறப்புறப் பயின்றிருப்பர் என்பதில் ஐயமில்லே. அதனே விளக்கும் சான்றுகள் பல உள்ளனவேனும், சுருக்கம் கருதி மிக முதன்மை வாய்ந்த ஒன்றிரண்டு சான்றுகளே மட்டும் ஈண்டுக் காண்டல் அமையும். அருள்நந்திசிவம் 'சிவஞான சித்தியார்' என்பதொன்றே யன்றி, இருபாஇருபஃது எனப் பிறிதொரு நூலும் இயற்றியுள்ளார். அதன்கண் அவர்,

"காண்பார் யார்கொல்
காட்டாக் கால்எனும்
மாண்புரை யுணர்ந்திலே.
மன்ற! பாண்டியன்
கேட்பக் கிளக்கும்
மெய்ஞ்ஞா னத்தின்
ஆட்பா லவர்க்கருள்
என்பதை அறியே"

எனப் போதரும் வரிகளில், திருஞானசம்பந்தர் அருளிய 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' எனும் திருப்பாசுரத்தினேப் 'பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்' எனப் புகழ்ந்து போற்றியுரைத்தருளுகின்ருர்! இறைவனேயோ- உலகுயிர்களேயோ — சமணர்களேயோ — கருதி இப்பாசுரம் பாடப் பெருமல், பாண்டியன் கேட்பதற்காகவே கிளக்கப்பெற்றது என அவர் விதந்தெடுத்துக் கூறியதற்குக் காரணம்.

"உலகியல் வேதநூல்
ஒழுக்கம் என்பதும்,
நிலவும்மெய்ந் நெறிசிவ
நெறிய தென்பதும்,
கலதிவாய் அமணர்
காண்கிலார்க ளாயினும்,
பலர்புகழ் தென்னவன்
அறியும் பான்மையால்" —2723

எனச் சேக்கிழார் பெருமான் கிளந்தெடுத்து மொழிந்தமையினே உட்கொண்டேயாகும். அன்றியும் "செம்பு இரத குளிகையினுற் களிம்பு அற்றுப் பொன்னுய்ச் செம்பொனுடன் சேரும்; மலம் சிதைந்தால் சீவன் நம்பனுடன் கூடும். நற்குளிகைபோல் அரன், நணுகும் மலம் போக்கி, அம்பொன் அடிக்கீழ் வைப்பன்" எனவரும் சிவஞான சித்தியார் (சுபக்கம்: 319) செய்யுட் பொருள்,

முன்புதிருக் காளத்தி
முதல்வனர் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு
பொன்னுற் போல்யாக்கை
தன்பரிசும் வினேயிரண்டும்
சாருமலம் மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவார்
அவர்கருத்தின் அளவினரோ? —796

எனக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றில் வரும், பெரிய புராணப் பாடலில் சேக்கிழார் சுவாமிகளால் அரிய முறையிற் சுட்டப்பட்டிருத்தல் காணலாம்.

**சித்தியார் பரபக்கம் :**

இனி வேறொன்றும் கருதற்பால துளது. அருள்நந்தி சிவனார்க்கும், அவர் தம் நூலுக்கும் தனிப்பெருஞ் சிறப்பைத் தருவது, சிவஞான சித்தியார் பரபக்கப் பகுதி. அருள்நந்தி சிவனார் உண்மையிலேயே "சகலாகம பண்டிதர்" தான் என்பதனை, மெய்ப்பித்து விளக்கி நிற்பது பரபக்கப் பகுதியே யாகும். இங்ஙனம் பரபக்கப் பகுதி ஒன்றினை இயற்றுதல் வேண்டும் என அருள்நந்தி சிவம் கருதுதற்கும், அஃது இயற்றும் நெறி இதுவென உணர்தற்கும், வழிகாட்டியவர் சேக்கிழார் சுவாமிகளே யாவர் எனலாம். பரபக்கப் பகுதியில் அருள்நந்திசிவம் விரிவாக மறுத்துரைத்திருப்பது, மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் நால்வகைப் பௌத்தர்களில் சௌத்திராந்திகர் என்னும் பிரிவினரையே யாகும்.

ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இக்கொள்கையினரையே, திருஞான சம்பந்தர் வரலாற்றில் (செய்யுள் 914 முதல் 921 வரை) 'சம்பந்தசரணாலயர்' எனப்படும். அன்பர் ஒருவரின் கூற்றில் வைத்துத் திட்ப நுட்பமும், சுருக்க விளக்கமும் அமையத் திறம்பட மறுத்துரைத்துள்ளார். இவ்விரு பகுதிகளையும் புடைபட வைத்து ஒப்பிட்டுக் காணவல்லார் "சகலாகம பண்டிதர்" ஆகிய அருள்நந்தி சிவனார், சேக்கிழார் பெருமானைப் போற்றியுள்ள திறம் உணர்ந்து, பெரிதும் மகிழ்வர் என்பது தேற்றம்.

சேக்கிழார் அடிகள் இயற்றிய பெரிய புராணத்திற்குக் காப்பியத் தலைவராகத் திகழ்பவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்! அவர் தம்மைத் தடுத்தாட் கொள்ளக் கிழவேதியர் வடிவில் வந்த இறைவனைப் பித்தா என்றும், பேயா என்றும் இகழ்ந்துரைத்து வன்மை பேசினார். ஆதலினால் அவருக்கு "வன்றொண்டர்" எனப் பெயர் வழங்குவதாயிற்று. "மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை" என்பது பெரிய புராணம். "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" எனச் சிவபெருமான் அருளிச் செய்தமையால் சுந்தரருக்குத் 'தம்பிரான் தோழர்' என்றும் ஒரு பெயருண்டு. சுந்தரர் பொருட்டு இறைவன் பரவையார் பால் ஒருமுறைக்கு இருமுறை நடந்து தூதுவனாகச் சென்றான். இறைவன் தன் அடியார்களுக்கு எங்ஙனமெல்லாம் எளியனாகத் தாழ்ந்து போந்து அருள்புரிகின்றான் என்பதனைச், சுந்தரரின் வரலாறு சுவைமிக இனிது விளக்குகின்றது.

சிவஞான சித்தியார் என்னும் சிறந்த சைவ சித்தாந்த நூலை இயற்றியருளிய, தத்துவஞானப் பெருஞ்சான்றோர் ஆகிய ஆசிரியர் அருள்நந்திசிவனார்க்குச், சேக்கிழாரின் பெரிய புராணத்தின் பாலும், சிறப்பாகக் காப்பியத் தலைவராகிய சுந்தரர் பாலும், அளவற்ற அன்பும் ஈடுபாடும் அமைந்திருந்தன. இவ்வுண்மை, சிவஞான சித்தியாரின் பரபக்கப் பகுதியில் உலகாயதக் கொள்கையினை மறுத்துரைத்து, உலகாயதனை நோக்கி உளம் இரங்கி, அறிவுரைகள் பகரும் முறையில் அமைந்துள்ள, பின்வரும் பாடலால் தெளியப்படும்.

> வேதன் நாரணன் ஆரணம் அறியா
> விழுப்பொருள், பேதைபால்
> தூதனாய் இருகால் நடந்திடு தோழன்
> வன்மைசெய் தொண்டனுக்கு;
> ஆதலால் அடியார் களுக்கு எளியான்
> அடிக்கமலங்கள் நீ
> காதலால் அணை; ஈண்டு வேண்டின
> இம்மையே தரும் கண்டிடே.

**சேக்கிழாரும், மெய்கண்டசிவமும் :**

இனி, மெய்கண்டார் பற்றி ஒரு சிறிது ஆராய்தல் வேண்டும். மெய்கண்ட தேவர் சேக்கிழார்க்குப் பிற்பட்டவர் என்பதே, திரு. கோபிநாதராவ் போன்ற வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் துணிபு. "திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்" எனத் திருவண்ணாமலைக் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று, இவரைக் குறிப்பிடுகின்றது. மெய்கண்ட தேவர் தமது கொள்கைகளைத் திறம்பட எடுத்து நிறுவ வல்லவராகத் திகழ்ந்த சிறப்புப் பற்றி "எடுத்தது வலிய வேளார்" எனப் பாராட்டி யுரைக்கப்

பெற்றனர் போலும்! இக் கல்வெட்டின் வாயிலாக மெய்கண்ட சிவத்தின் காலம் கி. பி. 1232 என்று ஐயுறவின்றித் துணியப்பட்டுள்ளது. ஆதலின், அக்காலத்தில் வாழ்ந்திருந்த ஆசிரியர் மெய்கண்ட தேவர், பெரிய புராணத்தினை உரிய முறையிற் போற்றி மகிழ்ந்திருப்பர் எனக் கொள்ளுதலில், இழுக்கொன்றும் இல்லை. "சான்றோர் சான்றோர் பாலர் ஆப" என்பது சான்றோர் கூறிய வாய்மை. "ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு ஞானத்தாய் உனைநானும் தொழுவனே" என நாவரசர் நவின்றிருப்பதும், இக் கருத்துக்கு அரண்செய்யும். இவ்வடிப் படையில் ஆராய்ந்தால், மெய்கண்ட தேவர் பெரிய புராணம் முழுவதன் தெளி பொருட் பெரும் பிழிவினையே வடித்தெடுத்து,

"செம்மலர் நோன்றாள்
சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ
அன்பரொடு மரீஇ
மாலற நேயம்
மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும்
அரனெனத் தொழுமே"

எனத் தமது 'சிவஞானபோதம்' என்னும் சைவ சித்தாந்தத் தலைமணி நூலின் கண், இறுதிச் சூத்திரமாக அமைத்துள்ளார் என்பதனை, ஐயுறவின்றி அனைவரும் உணர்வர்.

### சிவஞானபோதம் :

இதன்கண் சீவன்முத்தர்கள் எனப்படும் அணைந்தோர் தன்மை கூறப் பெறுகின்றது. சீவன் முத்தர்கள் குருலிங்க சங்கம வழிபாடு உடையவர்களாகத் திகழ்வார்கள் என்பதும், இதனால் வலியுறுத்தப் பெறுகின்றது. பெரிய புராணத்திற் சேக்கிழார் பெருமானாற் சிறந்தெடுத்து உரைக்கப் பெறுகின்ற, நாயன்மார்கள் அனைவரும் சீவன் முத்தர்களே என்பதும், அவர்களுள் குருவை வழிபட்டுப் பதினொருவரும், இலிங்கத்தை வழிபட்டு முப்பதின்மரும், சங்கமர் ஆகிய அடியார்களை வழிபட்டுப் பத்தொன்பதின்மரும் முத்தியடைந்தனர் என்பதும், ஈண்டு நாம் எண்ணியுணர்ந்து இன்புறுதற்கு உரியன.

கற்ற மனம்போற் கசிந்துகசிந் தேயுருகி
உற்றசான் லிங்கம் உயர்வேடம்—பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்

—உண்மை விளக்கம்

மேலும், சிவஞான போத நூலில் வரும் எட்டு — ஒன்பது — பத்து — பதினொன்று ஆகிய சூத்திரங்கள், முறையே, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நால்வகை ஞானத் திறங்களை உணர்த்துகின்றன என்பது, அறிஞர்கள் அறிந்ததொன்று.

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம்உணர்ந்தார் அந்நிலையில்

எனவரும் சேக்கிழார் திருவாக்கும், மேற் கூறிய நால்வகை ஞானத் திறங்களையே யுணர்த்துகின்றது என்பது, ஈண்டு உளங் கொளற்பாலது.

நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம்மைத் தடுத்தாட்கொள்ளப் போந்த சிவவேதியரின் பின் தொடர்ந்து, திருநாவலூரினின்று திருவெண்ணெய்நல்லூர்க்கு, வேதபாரகரின் மிக்கார் விளங்கு பேரவையை நோக்கிச் செல்லுதலைக் கூறலுறும் பகுதியில்,

"செல்லுமா மறையோன் தன்முன்
திரிமுகக்காந்தம் சேர்ந்த
வல்இரும்பு அணையு மாபோல்
வள்ளலும் கடிது சென்றார்" —196

எனச் சேக்கிழார் பெரிய புராணத்துட் பாடிய செய்யுளைத் தழுவியே, அதனை நினைப்பிக்கும் வகையில், "தாம் தம் உணர்வின் தமியருள் காந்தம்கண்ட பசாசத்தவையே" என்னும் சிவஞான போதச் சூத்திரப் பகுதி அமைந்திருத்தல் காணலாம்.

### திருவுந்தியார் :

இனி, மெய்கண்ட தேவரின் சிவஞான போதத்திற்கும் முற்பட்டனவாகக் கருதப் பெறுவன, திருவுந்தியார்–திருக்களிற்றுப் படியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். இவைகள் முறையே

திருவியலூர் உய்யவந்த தேவநாயனுர், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனுர் என்னும் சான்ருேர்களால் இயற்றப் பெற்றன. அருள்நந்தி சிவமும், உமாபதி சிவமும், தத்தம் நூல்களில் மெய்கண்ட தேவரைப் போற்றியிருத்தல் போல, இவர்கள் போற்றக் காணுமையினுல், இவ்விருவரும் மெய்கண்ட சிவத்திற்குப் பிற்பட்டவ ராகாமல், ஒரு சிறிது முற்பட்டவர்கள் ஆதல் வேண்டும். இருவரும் ஆசிரிய மாணவ முறையில் உடனுறைந்து ஒரே காலத்தினராகத் திகழ்ந்தவர்கள். திருக்களிற்றுப்படியாரில் சேந்தனுர் வரலாறு (53) குறிக்கப்படுதலின், அதனை இயற்றியருளிய ஆசிரியரின் மேலெல்லைக் காலம் கி. பி. 10ஆம் நூற்ருண்டுக்கு முற்பட்டதாகாது. கீழெல்லைக் காலம் யாதாக இருத்தல் கூடும் என ஆராயும் வழி, "ஊட்டி யறுத்தவர்க்கே ஊட்டி யறுத்த வரை நாட்டியுரை செய்வதென்னே நாம்?" என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் (20),

ஆட்கொளும் ஐயர் தாம் இங்கு
அமுதுசெய் திலர்கொல் என்னுப்
பூட்டிய அரிவாள் பற்றிப்
புரையற விரவும் அன்பு
காட்டிய நெறியின் உள்ளங்
தண்டறக் கழுத்தி னூடே
ஊட்டியும் அரியா நின்ருர்
உறுபிறப்பு அரிவார் ஒத்தார்" —924

என்னும் பெரிய புராணப் பாடலின் அடியொற்றி அமைந்திருத்தல் அறியப்படுகின்றது.

ஆதலின், மூல நூல் போலத் திகழும் திருவுந்தியாரும், அதற்கு ஓர் அழகிய உரைபோல அமைந்துள்ள திருக்களிற்றுப்படியாரும், பெரிய புராணத்திற்குப் பிற்பட்டதாதல் தெளியப்படும். இவற்றின் காலம் முறையே கி. பி. 1147 என்றும், கி. பி. 1177 என்றும் கொள்ளப்பட்டுள்ளது. "திருச்சிலம்போசை" "பெற்ற சிற்றின்பமே" என்னும் திருவுந்தியார் செய்யுட்கள் முறையே சேரமான் பெருமாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பவர்களை நினைவூட்டி நிற்கின்றன எனலாம்.

**திருக்களிற்றுப்படியார் :**

திருக்களிற்றுப் படியாரிலோ, பற்பல நாயன்மார் வரலாறுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்பவர்களே யன்றி, அதன்கண் சிறுத்தொண்டர் சண்டீசர் அரிவாட்டாயர் கண்ணப்பர் திருக்குறிப்புத் தொண்டர் கோட்புலியார் மூர்த்தியார் மூர்க்கநாயனுர் மங்கையர்க்கரசியார் என்பவர்களைச் சுட்டும் பாடல்கள் பலவும், திருக்களிற்றுப்படியாரில் இருக்கின்றன.

கல்லிற் சமரிற்
கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில்
வாதனையைச்—சொல்லும்
அகமார்க்கத் தால்அவர்கள்
மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தால்
அன்றே தான்.

மேலும், இந் நாயன்மார்களின் வரலாறுகளைப் பெரிய புராண வாயிலாக அறிந்து உணர்ந்த அரும்பெறற் பயன்போல, அவர் தம் செயல்களை யெல்லாம் மெல்வினை என்றும், வல்வினை என்றும் பாகுபாடு செய்து,

மெல்வினையே என்ன
வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்னவரும்
இரண்டும்-சொல்லில்
சிவகன்ம மாம். அவற்றிற்
சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி

எனப் பெரிய புராண வரலாறுகளிற் சிலர் கொள்ளும் ஐயம், பொருந்தா வகையையும் திறம் தெரிந்து உணர்த்தித் தெளிவித்திருக்கும் முறை, பெரிதும் வியந்து போற்றற் பாலது.

பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் (William James) என்னும் உளநூற் பேரறிஞர், மக்களையெல்லாம் 'மெல்லிய உள்ளத்தினர்' (Tender-minded) என்றும், 'கடின உள்ளத்தினர்' (Tough-minded) என்றும் இரு திறத்தினராகப் பிரித்து ஆராய்ந்திருப்பது, ஈண்டு இதனோடு ஒப்பிட்டுக் கருதி மகிழத் தகுவது. இவைகளெல்லாம், சந்தானுசிரியர்கள் சைவ சித்தாந்தக் கொள்கைகளை உருவாக்கித் தொகுத்துத் தருவதற்குச் சேக்கிழாரும், அவர்தம் பெரிய புராணமும் பயன்பட்ட திறனைத், தெள்ளிதின் விளக்கவல்ல சிறந்த சான்றுகள் எனலாம்.

**சித்தாந்த உள்ளுரைப் பொருள்:**

இனி, வேறொரு நெறியிலும் இப் பொருள் குறித்துப் பேசி விளக்குதல் கூடும். பெரிய புராண வரலாறுகள் உண்மையில் நடந்த நிகழ்ச்சிகளேயாகும். எனினும், அந்நிகழ்ச்சிகளைப் பாடும் முறையிற் சிற்சில வரலாறுகளில் சைவசித்தாந்த நுண்பொருட் கருத்துக்கள் பொலிந்து புலனாகும்படி, சேக்கிழார் தமது ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க புலமையினுற் செய்துள்ளனர். அவற்றை விளக்க விரும்பி விரிப்பிற்பெருகுமாயினும், ஈண்டு ஒரு சிறிது சுருங்கக் கூறி முடிப்போம்.

**எறிபத்தர் :**

எறிபத்தர் வரலாறு யாவரும் இனிதறிந்தது. அதன்கண் **கருவூர், உடல். ஆனிலை** என்னும் கோயில், புருவநடு. அங்குள்ள பசுபதி ஈசுவரர், சிவபிரான். சிவகாமியாண்டார், பக்குவம் எய்திய நல்லுயிர். பூக்குடலை, மனம். **பூக்கள்,** கொல்லாமை ஐம்பொறியடக்கம் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் எண்வகை நல்லெண்ண மலர்கள். சிவகாமியாண்டார் தமது மலர்க்கையில் கொண்டு சென்ற **தண்டு,** யோகப் பயிற்சிக்குரிய 'வீணாதண்டு' (Spinal cord). **யானை,** ஆணவமலம். பாகர் இருவரும், இருவினைகள். **பரிக்காரர்** மூவரும்: சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் என்னும் மூவகை மாயைகள். சோழ அரசன், திரோதானசத்தி. எறிபத்தர், ஞானசிரியர். அவர் தாங்கியிருந்த **பரசு,** ஞானம் என்னும் வாள் என, இங்ஙனமெல்லாம் உள்ளுறைப் பொருள் (Allegorical Suggestion) கொள்ளவும், பல குறிப்புக்கள் சேக்கிழார் சுவாமிகள் பாடலில் அமைந்துள்ளமை காணலாம்.

**கண்ணப்பர்:**

இங்ஙனமே, கண்ணப்பர் வரலாற்றிலும் சைவசித்தாந்த தத்துவ நுட்பங்கள் பல பல அமைந்துள்ளன. **நாகன்,** ஆணவம். **தத்தை,** மாயை. **காடன்,** கன்மம். **நாணன்,** மாயேயம். கண்ணப்பர், பக்குவம் பெற்ற சுத்தான்மா. காளத்தி முதல்வர் திருநோக்கம், சிவதீக்கை. **சிவகோசரியார்,** திரோதாயி என்னும் சத்தி. ஆறு நாட்கள் தொண்டியற்றல், வன்னம் பதம் மந்திரம் கலை தத்துவம் புவனம் என்னும் ஆறு அத்துவாக்களும் தூய்மையடைதல் என, நுண்பொருள்கள் பல கொள்ளத்தக்க குறிப்புக்கள் அமைந்திருந் திருத்தலும், ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.

**சேக்கிழாரின் சிவஞானனுபவங்கள் :**

சேக்கிழார் சுவாமிகள்,மிகச் சிறந்த ஒரு சைவ சித்தாந்த ஞானனுபவப் பெருஞ் செல்வர். 'கலையின்கண் மனிதன் தான் வெளியிட மேற்கொண்ட பொருள்களையன்றி, ஒரு வகையில் தன்னையே வெளிப்படுத்தி விடுகின்றுன்'[9] என்று, கலையாராய்ச்சி யறிஞர்கள் கட்டுரைப்பதுண்டு. அவ்வுண்மைக்கு ஏற்ப, நமது அருமைச் சேக்கிழார் பெருமானும், தமது சைவ சித்தாந்த ஞானனுபவத்தினையே, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைக்குச் சென்று கூத்தப் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்த தன்மையினை விளக்கும் பகுதியில்,

"ஐந்துபே ரறிவும்
கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே ஆகக்
குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான்
ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப
வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்
—252

தெண்ணிலா மலர்ந்த
வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த
பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த
அருவிநீர் சொரியக்

9. "In art, man reveals himself, and not his objects."

கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி
அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்

—253

எனவரும் பெரிய புராணப் பாடல்கள், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பக்திஞானனுபவ நலங்களை விளக்குவனவாகப் பாடப் பெற்றிருப்பினும், சேக்கிழார் பெருமானின் சிறந்த பக்தியுணர்வும் சிவஞானனுபவத் திறங்களும்கூட, ஒரு வகையில் இப்பாடல்களால் உணர்த்தப் பெறுதல் காணலாம்.

## முடிவுரை:

இன்னேரனைய செய்திகள் பலவும், சேக்கிழார்க்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள பல திற இயைபுகளை, நலமுறத் தெளிவிக்கும் சிறந்த சான்றுகள் ஆகும். இவை போல்வனவற்றை ஆராய்ந்துணர்தல், நம்மனேர் அறிவிற்குப் பெருவிருந்தாக அமைவதுடன், நம் ஆன்ம நலத்திற்கும் பெருந்துணை புரியும்.


"செப்ப லுற்ற
பொருளின் சிறப்பினல்
அப்பொ ருட்குரை
யாவரும் கொள்வரால்;
இப்பொ ருட்கென்
னுரைசிறி தாயினும்,
மெய்ப்பொ ருட்குரி
யார்கொள்வர் மேன்மையால்"

—சேக்கிழார்.

—(97)

[அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சார்பில், கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ணர் திருமடத்தில், சுவாமி விவேகானந்தர் வழிபாட்டு மண்டபத்தில், ஸ்ரீமத் ரங்கானந்த சுவாமிகள் அவர்களின் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (10—6—68).

— ஆசிரியர்.]



நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், M.A. அவர்கள், திருவண்ணாமலை ஸ்ரீ அருணசலேசுவரர் கோயிலுக்கு வருகை தந்தபோது, பெருமக்கள் பலரும் வரவேற்று மகிழ்தல்.

# பாண்டிய நாட்டுத் தலங்கள்

திரு ஆப்பனூர்:

திரு ஆப்பனூர் என்னும் சிவத்தலம், திரு ஆப்புடையார் கோயில் என்று வழங்குகின்றது. பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற பதினான்கு தலங்களில் இது ஒன்று. மதுரை இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஒருகல் தொலைவிலுள்ளது. வையையாற்றின் வடகரையில் அமைந்திருக்கிறது. இதனை 'அந்தண் புனல் வைகை அணி ஆப்பனூர்' என்பார் சம்பந்த மூர்த்திசுவாமிகள்.

திரு ஆப்பனூர்க் கோயில், அழகிய சிறு கோயில். ஒரே பிராகாரம்தான் இருக்கிறது. கிழக்கு நோக்கியுள்ளது. கோயிலில் எல்லா மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். நடராசர், சிவகாமியம்மை இவர்களின் திருவுருவங்கள், சிலையிலும் செம்பிலும் செய்யப்பட்டவை. மிக அழகானவை, அற்புதச் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்தவை.

திரு ஆப்புடையார், ஆப்பேசர், இடபபுரேசர் என்பன, இத்தலத்து இறைவனுடைய திருநாமங்கள். தேவியின் திருப்பெயர் 'குரவம் கமழ் குழலம்மை' என்பது. இப்பெயரைச் சம்பந்தப் பெருமான் தமது பதிகத்தில் ஒரு பாடலில் குறிக்கிறார். ஆற்று வெள்ளத்தால் தடைப்பட்ட சோழாந்தகன் என்னும் மன்னன் ஆப்பு ஒன்றை நிறுத்தி வழிபட, அது இலிங்கமாகத் தோன்றியருளியது. அதனாலேயே ஆப்பனூர், ஆப்புடையார் கோயில் என்ற பெயர்கள் ஏற்பட்டன. சைவ வேதியரான அருச்சகர் ஒருவர் வையையாற்றின் மணலை உலையிலிட, இறைவன் அதை அன்னம் ஆக்குவித்தார். அதனால் இப்பெருமானுக்கு 'அன்ன விநோதன்' என்ற பெயரும் உண்டு.

ஆளுடைய பிள்ளையார், இத்தலத்திற்குப் பதினொரு பாடல்களுடைய ஒரு பதிகம் ஓதியருளியுள்ளார். அதில் ஆப்பனூரானைப் போற்றும் மனமுடையார், பகரும் மனமுடையார், பாடும் மனமுடையார், பயிலும் மனமுடையார், பைய நினைந்தெழுவார் முதலியோர், வினைப் பற்றறுப்பார் என்று கூறுகிறார். இறைவனை 'அகர முதலான்', 'இயலும் இசையான்', 'எண்ணில் வினைகளைவான்', 'ஆடும் தொழிலான்' என்பர். இத்தலத்திற்குத் திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய தலபுராணமும் உலாவும் பிறவும் உண்டு.

இத்தலத்தின் தீர்த்தங்கள் வைகையாறு, இடப தீர்த்தம் என்பன. இடப தீர்த்தம் கோயிலுக்குள் பெரிய கிணறாக இருக்கிறது. இந்தத் தலத்தின் திருப்பதிகத்தில்,

> ''அகர முதலானை அணிஆப்ப னூரானைப்
> பகரும் மனமுடையார் வினைப்பற் றறுப்பாரே'',

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடற்பகுதியில், திருக்குறட் குறிப்பு வந்திருத்தல், அறிந்து மகிழற்பாலது.

## திருஏடகம்

இது, மதுரை மாவட்டத்தில், நிலக்கோட்டைப் பகுதியில் உள்ளது, மதுரையில் இருந்து நிலக்கோட்டைக்குச் செல்லும் சாலையில், பன்னிரண்டாவது கல்லில் இருக்கிறது. ''சோழ வந்தான்'' என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து, சுமார் 3 கல்தொலைவு. திருஞான சம்பந்தர் சமணர்களுடன் மதுரையில் வாது செய்த போது, ''வாழ்க அந்தணர்'' என்னும்

திருப்பதிகம் எழுதி, மதுரையில் வையை ஆற்றில்இட, அந்த ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. சம்பந்தப் பெருமான் ''வன்னியும் மத்தமும்'' என்று தொடங்கும் பதிகம் பாடியவுடன் இத்தலத்து அருகில் நின்றது. ஆற்றிலிட்ட ஏடு எதிரேறிச் சென்று தங்கிய இடமானபடியால் 'ஏடகம்' என்ற பெயர் உண்டாயிற்று. இதனைத் திருஞான சம்பந்தரே தமது தேவாரத்தில்,

''கோடு சந்தனம் அகில் கொண்டுஇழி
வைகை நேர் ஏடுசென்று அணைதரும்
ஏடகத்து ஒருவனே''

என்று கூறியருளியுள்ள தனுல் உணரலாம். இது வைகையாற்றின் வடகரையில் அமைந்திருப்பதனை ''வைகையின் வட கரை மருவிய ஏடகம்'' என்று தேவாரம் கூறுதல் கொண்டு உணர்கின்ருேம்.

கோயில் கிழக்கு நோக்கி இருக்கிறது. ஒரு பிராகாரம் மட்டுமே உள்ளது. அதற்குள்ளே சுவாமி சந்நிதி, அம்பாள் சந்நிதி இரண்டும் கிழக்கு நோக்கி இருக்கின்றன. ஒவ்வொன்றின் முன்வாயிலையும் ஐந்து நிலையுள்ள இரண்டு புதிய கோபுரங்கள் அழகு செய்கின்றன. வெளியே கிழக்கில் ஒரு இராய கோபுரமும், பின்புறம் ஒரு பழைய கோபுரமும் உள்ளன.

இத்தலத்து இறைவன் பெயர் ஏடகநாதர். ''பார்த்தப் பிரஹாரம்'' என்னும் அடையாள முள்ள இலிங்க மூர்த்தி. ''ஏலமார்தரு குழல் ஏழையோடு எழில் பெறும் கோலமார் தரு விடைக் குழகனுர்'' என்பது சம்பந்தர் தேவாரம். வில்வமரம் தலவிருட்சம். வைகை யாறு கோயிலுக்குப் பின்புறம், வடக்கே யிருந்து தெற்கு முகமாக (தட்சிண வாகினியாக) ஓடுகிறது. அம்பிகை சந்நிதிக்கு எதிரில் உள்ளது பிரம தீர்த்தம். அதில் நீராடி இறைவனை வழிபட்டால், சித்தப்பிரமை முதலிய நோய்கள் இப்போதும் நீங்குவதாகக் கூறுகின்றனர்.

இவ்வூரில் ''வாது வென்ற விநாயகர்'' கோயில் என்ற ஒன்றும் இருக்கிறது. இக்கோயிலின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள, கோபுரங்களின் வாயில்களிலும், மதிற் சுவர்களிலும் பல கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. ''பாகனுர்க் கூற்றத்துத் திருவேடகம்'' என்றும் ''திருவேடகம் உடைய நாயனுர்'' என்றும் குறிப்புக்கள் கல் வெட்டுக்களில் வருதல் அறியத்தக்கது.

## திருக்கொடுங்குன்றம்

''கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், 'மன்புகழ்ப் பாரி காரி என்று இசைவாது கூறி'' என்று அருணகிரிநாதரும் போற்றும் பாரி வாழ்ந்த இடமே, பிரான்மலை என வழங்கப் படுகின்ற திருக்கொடுங்குன்றம். இது பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற பதினுன்கு பதிகளில் ஒன்று. இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர்ப் பகுதியிலிருக்கின்றது. காரைக்குடியிலிருந்து 28 கல் தொலைவிலுள்ளது. மதுரையிலிருந்து 42 கல் தூரம். மதுரையிலிருந்தும், திருப்புத் தூரிலிருந்தும் பேருந்தூர்திகள் (Bus) செல்லுகின்றன.

பிரான்மலை, நாலா பக்கமும் நெடுந் தொலைவுக்கு நன்கு தெரியும். இதன் உயரம் 2450 அடி. மலையடிவாரத்திலுள்ள கோயில் தேவாரப் பாடல் பெற்றது. மலையின்மேல் வயிரவர் கோயிலும், சிவன் கோயிலும் இருக்கின்றன. அடிவாரத்திலுள்ள கோயிலுக்கு வெளிப்புறம் முன்னல் ஒரு ஆழமான திருக்குளம் இருக்கிறது. கோயிலுக்குள்ளே நுழைந்ததும், மற்ருெரு திருக்குளம் இருக்கிறது. இறைவன் சந்நிதிகிழக்கு நோக்கியுள்ளது. அவர் தம் திருப்பெயர்கள் கொடுங்குன்றீசர், கடுரகிரீசர், உக்கிரகிரீசர், பாரீசுவரம் உடைய நாயனுர் என்பன. அம்பிகைக்குக் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் தனிக்கோயில் இருக்கிறது. தேவிக்குக் குயிலமர்ந்த நாயகி, அமிர்தேசுவரி என்ற திருநாமங்கள் உண்டு. இத்தலத்தின் தேவாரத்தில் ''தேனிற்பொலிமொழியாள்'' என்று குறிக்கின்றனர் சம்பந்தப் பெருந்தகையார். அடிவாரக் கோயிலுக்குள்ளே இருக்கும் முருகன் சந்நிதி மிக்க சிறப்பு வாய்ந்தது. திருப்புகழ்ப்பாடல் பெற்றது. மேற்கு முகமாக வள்ளி, தெய்வயானையுடன் உள்ள குமாரக்கடவுளின் காட்சி, கண்கவர் வனப்புடையது. இந்தச் சந்நிதிக்கெதிரில் யானை உருவம் தனிச்சிறப்புடைய அழகிய சிற்பம்.

மலைமேல் கொஞ்ச தூரம் ஏறிச் சென்று, பிராகாரத்தை வலம் வரும்போது, வயிரவர் கோயில் இருக்கிறது. தெற்கு நோக்கிய சந்நிதி. இந்தக் கோயிலிலேயே, விசாலாட்சி, விசுவநாதர் சந்நிதிகளும், கிழக்கு நோக்கியிருக்கின்றன. (தொடரும்)

# வியர்வை சிந்தும் வேலவன்

(திரு. சி. சானகிராமன், தெற்கு வீதி, சிக்கல்.)

சோழ நாட்டுப் பாடல் பெற்ற சிவ தலங்களுள், **சிக்கல்** என்பது ஒன்று. திருஞான சம்பந்தர் இத்தலத்தினைப் பாடியுள்ளார். இது நாகப்பட்டினத்துக்கு, மேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. வசிட்ட முனிவர், காமதேனுவின் வெண்ணெயினால் சிவலிங்கம் அமைத்து, இங்கு வழிபட்டார். வழிபாடு முடிந்ததும், அச் சிவலிங்கத் திருவுருவினை எடுக்க முயன்ற போது, எடுக்க முடியாதபடி சிவலிங்கம் சிக்கிய காரணத்தால், இத்தலத்திற்குச் **சிக்கல்** என்றும், இங்குள்ள இறைவனுக்கு **வெண்ணெய்ப் பெருமான்** என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அம்பிகைக்கு **'வேல் நெடுங்கண்ணி'** என்பது பெயர்.

''அழகிய சிக்கற் சிங்கார வேலவ!
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்காரம் ஆடிய பெருமாளே''
—திருப்புகழ்

சிக்கல் என்னும் இந்தப் புகழ்மிக்க சிவத்தலம், மிகச் சிறந்த முருகத்தலமாகவும் விளங்குகின்றது. இங்குள்ள முருகன், சிங்காரவேலர் என்று சிறப்பிக்கப்படுவார். இக்கோயிலிற் கட்டுமலையாகச் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ள சந்நிதியில், சிங்கார வேலர், 'காணக் கண்கோடி வேண்டும்' என்னும்படி மிகவும் சிறப்புற எழுந்தருளி, நின்ற நிலையில் கம்பீரமாக விளங்குகின்றார். **'சிக்கல் சிங்கார வேலர்'** என்றாலே, முருக பக்தர்களின் சிந்தையெலாம் உருகிக் களித்து, இன்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும். இவரை அருணகிரி நாதர், தமது திருப்புகழிற் பாடித் துதித்துள்ளார்.

சிக்கலம்பதி மேவிய சிங்கார வேலவர், மிகவும் சக்தி வாய்ந்தவர். இவருக்கு இங்கு நிகழும் கந்தர் சஷ்டி விழா, மிகவும் பிரசித்தி பெற்றது. சூரபதுமன் தேவர்களைச் சிறையில் இட்டுத் துன்புறுத்திச் சித்திரவதை செய்து வந்தான். அவனது தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள், முருகனைச் சரண் அடைந்தார்கள். சரண் அடைந்த தேவர்களைப் பாதுகாக்க, முருகன் திருவுள்ளங் கொண்டான்; சூர பதுமன்மீது போருக்குச் செல்ல முற்படுகின்றான். அப்போது வேல்நெடுங்கண்ணியாகிய அம்பிகை, முருகனை ஆசீர்வதித்துச் சக்திவேல் தந்து வழியனுப்புகின்றாள். அம்பிகையிடம் சக்திவேல் பெற்று, முருகன் சூரபதுமனை அடக்கி வெற்றி கொள்ளத் திருச்செந்தூர்க்குப் புறப்படுகின்றான். சூரர்குலம் தொலைத்துத் தேவர் குலம் காக்க, முருகன் அம்பிகையிடம் வேல்வாங்கிக் கொண்டு புறப்பட்ட இடம், சிக்கலேயாகும். ''சிக்கலில் வேல்வாங்கித் திருச்செந்தூரில் சூரசம்மாரம்'' என்பது பழமொழி. ஆதலின் கந்தர் சஷ்டிவிழாவின்போது, இந்நிகழ்ச்சி சிக்கலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள், இவ் விழாவைத் தரிசித்து இன்புறுவர். ''கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'' என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் பாடியபடி, சூரசம்மாரத்திற்காகச் சிக்கல் சிங்கார வேலவர், அம்பிகையிடம் வேல் வாங்கும் காட்சி, கண்கொள்ளப் பேரழகுக் காட்சியாக விளங்கும்.

கந்தர் சஷ்டியின்போது, சூரசம்மாரத்துக்கு முன்தினம், **'வேல் வாங்கும் விழா'** நிகழும். அன்று காலையில் சிங்கார வேலர் தேர்மீது ஆரோகணித்துக் திருவீதிகளிற் பவனி வருவார். அன்று மாலை ஏழு மணிக்குத் தேரில் தீப ஆராதனை நிகழ்ந்தபின், அவர் ஒய்யாரமாக ஆடி ஆடி எழுந்

தருளும் காட்சி, கொள்ள மாளா இன்ப வெள்ளக் காட்சியாக விளங்கும். கோயிலுக்கு அருகேயுள்ள வேதபாடசாலை வரையில் மெதுவாகவந்து, அதுவரை மிக மெதுவாக ஆமை வேகத்தில் ஊர்ந்து வந்தவர், பின்னர் ஒரே ஓட்டமாகக் கண்மூடிக் கண்திறக்கும் நேரத்திற்குள், அம்பாள் சந்நிதியில் நிற்பார். அப்போது ஆயிரக்கணக்கான அடியார்கள் பக்திப் பரவசப்பட்டு, ஆனந்தக் கண்ணீர் சொரியும்படி, அம்பாள் முருகனுக்கு வேல் கொடுக்கும் நிகழ்ச்சி அமையும். அச்சமயத்தில், முருகனின் திருமுகம் மிகவும் செந் நிறமாய், மிக்க வீராவேசத்துடன் விளங்கும். வேல் வாங்கிக் கொண்டவுடனே ஓடோடிச் சென்று, சிங்கார வேலர், கட்டுமலைமீது ஏறிச் சோமாஸ்கந்தர் சந்நிதியில் அமருகின்றார். அமர்ந்ததும் அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

அப்போது சிங்கார வேலரின் திருவுருவத்தின்மீது, வியர்வைத் துளிகள் பெருகிக் காணப்படுகின்றன. ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரையில், முருகனின் திருமுகத்தில் வியர்வைத் துளிகள் பெருகி வழிந்துகொண்டே யிருக்கின்றன. இஃது ஓர் அற்புதக் காட்சியாகும். பக்தி யுணர்ச்சியும், பண்பட்ட இளகிய மனமும் உடையவர்கள், இதனைத் தரிசித்துப் பரவசப்பட்டு, மெய்ம்மயிர் சிலிர்த்து உருகி நிற்பர். அடியார்களுக்கு நேரும் துன்பங்களை, முருகன் தனக்கு நேர்ந்த துன்பங்களாகவே கருதுகின்றான். அடியார்களின் துன்பங்களைத் துடைத்து, இன்பங்களை அளிப்பதில் முருகன் விரைவும் பரிவும் துடிதுடிப்பும் உடையவனாகத் திகழ்கின்றான். அடியார்களின் இடர்களைக் கடிந்து களைந்தொழித்தல்லது, அவனது திருவுள்ளம் அமைதி கொள்ளுவதில்லை. இத்தகைய உண்மைகளை உணர்த்தும் வகையிலேயே, சிங்கார வேலரின் திருவுருவில் வியர்வைத் துளிகள் சிந்துகின்றன போலும்!

நமது கோயில்களில் வழிபடப் பெறும் இறைவனின் திருவுருவங்கள், வெறும் சடப்பொருள்கள் அல்ல; ஆற்றல்மிக்கவைகள்; அருள் நிறைந்தவைகள்; அடியார்கள் பொருட்டு இறைவன் அவற்றில் எழுந்தருளி விளங்கித் தன்னை வழிபடுவார்க்கெல்லாம், தனது அருளை வரையாது வாரி வழங்கி நலம் செய்கின்றான். இதனை நமது சமயப் பெரியோர்கள் அனைவரும், தமது அனுபவத்தில் மெய்ம்மையாகவே கண்டுணர்ந்து உய்ந்துள்ளனர். கந்தர் சஷ்டி விழாவில், சிக்கல் சிங்கார வேலர் வியர்வை சிந்தும் வியத்தகு காட்சியை, அன்பர்கள் அனைவரும் தரிசித்து, இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்ந்து மகிழலாம்.

—(ஆசிரியர், செப்பம் செய்தது).

## செய்திச் சுருக்கம்

**தஞ்சைப் பெரியகோயில் விழா :**

*தஞ்சைப் பெரிய கோயிலில், முதலாம் இராசராசனின் சதயத் திருநாள் விழா, அக்டோபர் 30. 31 தேதிகளிலும், நவம்பர் 1ஆம் தேதியும், சிறப்புடன் நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M,A.,B L., தஞ்சைத் துணை ஆணையர் திரு டி. என். சிங்காரவேல், B.A.,B.L., திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, திரு சா. கணேசன், M L A., அறநிலைய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு இரா நெடுஞ்செழியன், M.A., பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி, மாவட்ட ஆளுநர் திரு சி. ஜி. ரங்கபாஷ்யம் I.A.S., திரு. எஸ். எம். டயஸ், I.P.S., திரு எஸ். எம். கமாலுத்தீன் B.A.B.L., திரு பி. ஜி. கருத்திருமன், M.L.A., திரு நீ. கந்தசாமி பிள்ளை, B A.. திரு கே. ஆர். சௌந்தரராஜன், M A , திரு ஆர். நாகசாமி, M A., திரு கி. ஆ. பெ. விசுவநாதன், M.A., திரு கேப்டன் டி. முருகையன், M A. திரு கி. வா. ஜகந்நாதன், M.A.. முதலிய பெருமக்கள் பலர், கலந்து கொண்டு சிறப்பித்தனர். முதல் நாள் நிகழ்ந்த திருமுறை விழாவில், திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் முதலிய திருமடங்களின் சந்நிதானங்கள், கோயிலுக்கு எழுந்தருளி அருளுரைகள் வழங்கினர். திருமுறைகள் யானைமீது வீதி வலம் வந்தன. 48 ஓதுவார்கள் திருமுறைப் பண்ணிசை மிழற்றினர். சொற்பொழிவுகள், பட்டி மன்றம், கரகம், சிலம்பம், புரவியாட்டம் முதலிய கலைநிகழ்ச்சிகள் நிகழ்ந்தன, தஞ்சை அரண்மனைத் தேவஸ்தானப் பரம்பரை அறங்காவலர், ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகிப் அவர்கள், அமைச்சர்கட்கு வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தார்கள்.*

# வாழ்த்துச் செய்திகள்

['திருக்கோயில்' இதழ், 1958 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் தொடங்கப் பெற்றது. 1968 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்துடன், அது பத்தாண்டுகள் நிறைவு எய்தியது. 'திருக்கோயில்' இதழின் பத்தாண்டு நிறைவு குறித்துப் பெருமக்கள் பலர் அனுப்பியருளிய 'வாழ்த்துச் செய்திகள்' இங்குத் தொகுத்துத் தரப் பெறுகின்றன.

—ஆசிரியர்.]

## (1)

தருமையாதீன மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
தருமபுரம், மாயூரம்.

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

தமிழ் நாட்டின் தனிப்பண்பு திருக்கோயில்களின் சிறப்பே. மிகப் பழைய காலத்தே கோச்செங்கட்சோழன், எண்தோள் ஈசற்கு எழுபது கோயில்களை மாடக் கோயில்களாக எடுத்தான். பின் வந்த பல்லவர்கள் தமிழகத்தில் பல கோயில்களைக் கற்கோயில்களாக ஆக்கினார்கள். பிற்காலச் சோழர்கள் பெரும்பாலும் எல்லாக் கோயில்களையும், கற்கோயில்களாக ஆக்கும் பணியில் ஈடுபட்டனர்.

திருக்கோயில்களின் சிறப்பே, மக்கள் இனத்தின் மாண்புறு பயனுக்கு முதல் என்பதை உணர்ந்தே, தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் கோயில்களை மிகச் சிறப்புற வைத்துப் பாதுகாத்தனர். திருக்கோயில்கள் செம்மையாக இல்லையாயின், அது நாட்டின் நன்மைக்கு நலமாகாது என்பதைத் திருமூலர் நன்கு விளக்கியுள்ளார்.

முன்னவ னார்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள; வாரி வளங்குன்றும் ;
கன்னங் களவு மிகுந்திடும் காசினி ;
என்அருள் நந்தி எடுத்துரைத் தானே ;

என்பது அத்திருமந்திரம். எனவே நாட்டின் நன்மையைக் கருதும் நல்ல அரசாங்கம் எதுவும், திருக்கோயில்களுக்கு என்று பண்டைக்கால மன்னர்களும் பிறரும் ஏற்படுத்தியுள்ள அறக்கட்டளைகளைச் செவ்வனே பாதுகாப்பதில், தனது சிந்தனையைச் செலுத்துதல் இயல்பே.

நம் தமிழக அரசாங்கம், தனது அறநிலையப் பாதுகாப்புத்துறை வழியாகத் திருக்கோயில்களின் நலத்தைச் சிறப்பாகப் பேணி வருகின்றது. மற்றும் கோயில்களின், சிறப்பையும், நமது சமயத்தின் சிறப்பையும், மக்கட்கு நன்கு விளக்கத் 'திருக்கோயில்' என்னும் நல்லதொரு திங்கள் இதழையும் தொடங்கி நடத்தி வருகின்றது. நம்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமயத் துறையில் பெரும்பணியைச் செவ்வனே ஆற்றிவரும் 'திருக்கோயில்' இதழுக்குப் பத்தாண்டுகள் நிறைவெய்திப் பதினொன்ரும் ஆண்டு தொடங்குவதை அறிந்து மகிழ்ச்சி எய்துகின்ரேம்.

இத்திங்களிதழ், மேலும் வளர்ச்சியுற்றுத் தனது தொண்டினைச் சிறக்கச் செய்து வரவும், இதனை இனிது நடத்தி வரும் நம் தமிழக அரசு மேலும் தான் எண்ணியவற்றை எண்ணி யாங்கு முடித்துச் சிறப்பெய்தவும், இதழாசிரியரும், கட்டுரையாளர்களும், உறுப்பினர்களும், எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும், எங்கள் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்தித்து வழுத்துகின்ரேம்.

---

**(2)**

17—10—68

கேம்ப்: விஜயவாடா

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்,
ஸ்ரீ மடம், காஞ்சிபுரம்.

தமிழக அரசின், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பாக மாதந்தோறும் பிரசுரிக்கப்படுவதும், சைவ வைஷ்ணவ சமயங்கள், திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள், சமய தத்துவங்கள், பல்வேறு புராணங்களையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாய்க் கொண்ட தலவரலாற்றுக் குறிப்புகள் முதலிய, சிறந்த கட்டுரைகளை, ஏற்ற படங்களுடன் வெளியிட்டு வருவதுமான 'திருக்கோயில்' பத்திரிகைக்குப் பத்தாண்டுகள் பூர்த்தியாகிப் பதினொன்ருவது ஆண்டு ஆரம்பமாகிறது என்பதை, அறிந்து மகிழ்ச்சியடைகிரேம்.

தகுந்த ஆசிரியருடன் விளங்கும் இப்பத்திரிகை, ஆஸ்திகர்களின் ஆதரவுடன் மேன்மேலும் வளர்ச்சியடையட்டும்.

---

**(3)**

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி அவர்கள்,
ஆதீன கர்த்தர்,
திருவாவடுதுறை ஆதீனம்.

நமது தமிழக அரசின், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில், பத்து ஆண்டுகளாக நல்ல முறையில் வளர்ச்சியுற்று, வளம்பெற்றுவரும் 'திருக்கோயில்' என்னும் திங்கள் இதழ், மேலும் மேலும் வளம்பல பெற்றோங்கிச் சிறக்க, ஸ்ரீஞானமா நடராசர் திருவருளைச் சதா சிந்திக்கின்றோம்.

---

**(4)**

காசிவாசி
ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்,
தலைவர், காசிமடம்,
திருப்பனந்தாள்.

"கண்ணில் நிற்பர் மனத்திருக் கோயிலே
காசி யேயவர்க் கோர்திருக் கோயிலே"

என்பது காசிக்கலம்பகம்.

"கள்ளத் திருக்கோயில் காணலாம் கண்டீர்நம்
உள்ளத் திருக்கோயி லுள்"

என்பது மதுரைக்கலம்பகம்.

இவற்றுள் 'கள்ளத்திருக்கு' அல்லது 'மனத்திருக்கு' அதாவது 'மனமாறுபாடு' அல்லது 'மனவிருள்' நீங்கினால், இறைவன் நம் உள்ளமாகிய திருக்கோயிலுள் வந்து தங்கியருள்வர் என்று, ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் அருளியுள்ளார்கள். மனவிருள் நீங்கச் 'சிறப்பென்னும் செம்பொருள்' காணும் மெய்யறிவு பெறவேண்டும். மெய்யறிவு பெற ஞானநூற் பொருளை அறிதல் வேண்டும்.

ஞானநூற் பொருளைப் பெரும்பாலும் எளிமையாக, வாசகர்கள் மனங்கொள்ளுமாறு, எழுதப் பெற்ற கட்டுரைகள் தாங்கித், தமிழ்நாடெங்கணும் உலவித் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் எல்லாவற்றுள்ளும் தங்கி, நல்லறிவு பரப்புவதில்சிறந்து விளங்குவது 'திருக்கோயில்' என்னும் திங்களிதழாகும்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறையினரால் வெளியிடப்பெற்றுவரும் இத் திங்களிதழ், 'சகலகலை புராண வேத சாத்திரங்கள் சமயங்கள் பலவும்' செவ்விதின் உணர்த்தி, 'மேலாம் பதிபசு பாசம் தெரித்துப் பரசிவனைக் காட்டும் நன்மார்க்க ஞானத்தைப்' பல்லாற்றானும் பரப்புவதாக! செந்திலாண்டவன் துணைநிற்க.

—சிவசிவ.

---

## (5)

திருவருள் தவயோக
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
மதுரை ஆதீனம், மதுரை.

1958-அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பெற்ற 'திருக்கோயில்' தமிழ் மாத இதழுக்கு, இம்மாதத்தோடு 10 ஆண்டுகள் பூர்த்தியாவதை அறிந்து மகிழ்கின்றோம்.

அதில் வெளியாகின்ற கட்டுரைகளும், ஆசிரியரது ஆராய்ச்சிகளும், இந்துசமயத்திற்கும், செந்தமிழ்மொழிக்கும், அரிய பெரிய சிறப்புக்களைத் தந்துகொண்டிருக்கின்றன என்பதை, அவற்றைக் கருத்தூன்றி வாசிக்கின்ற அன்பர்கள் நன்கு உணர்வார்கள்.

'திருக்கோயில்' வெளியீடு இன்னும் பலதுறைகளிலும் சிறந்தோங்கி வளர்ந்து திகழவும், அதில் வெளிவரும் ஆராய்ச்சிகளும், நிருபணங்களும், மேன்மையான நமது சைவ நீதியை இவ்வுலகத்திலுள்ள யாவரும் உணர்ந்து ஒத்துக்கொள்ளச் செய்யவும், திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

—ஸ்ரீஞானசம்பந்த தேசிகர்.

## (6)

குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம்.

இந்து அறநிலையங்களின் ஆட்சித்துறை அலுவலகத்துத் திங்களிதழ் 'திருக்கோயில்' நாடெங்கும் உலவி நிலவி, நலம் பல விளைவித்துவரும் பெருமையை யாவரும் அறிவர்.

அதன் ஆசிரியராகப் பணியாற்றும் புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A.M.OL. அவர்கள், பல யாண்டாக அதனை மிகச் சிறந்த வகையில் நடத்திவருவதும், உலகம் அறிந்ததே.

அத் 'திருக்கோயில்' தமிழிலக்கியம் இலக்கணம், சைவம் வைணவம், முதலியவற்றைக் குறித்த கட்டுரைகளையும், வேறுபல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கொண்டு, வெளிவருகின்ற உண்மையை, ஏதேனும் ஓரிதழ் கண்டாரும் உணர்வர். இக்காலத்தில் எவ்விதழும் இத்திருக்கோயிலிதழுக்கு ஒப்பாதல் இல்லை.

இதழாசிரியர், புலவரும் பாவலரும் நாவலரும் ஆக இருத்தலொடு, மிகச் சிறந்த எழுத்தாளராயும் விளங்குவதே, அவ்விதழின் ஏற்றத்திற்கு முக்கிய காரணம்! அவர் இருமொழி வல்லாராயும், ஒய்வில்லாது கற்பாராயும், பெரிதும் உழைப்பவராயும், இருப்பதும் குறித்தற்பாலது.

ஆணையாளர் முதலோர் தக்கதுணை செய்து, இத்திங்கள் வெளியீட்டைப் போற்றிக் காத்தல், யாவராலும் மிகப் பாராட்டற்குரியது. இதைத் தோற்றிய சான்றோர்களும், நடாத்துகின்ற அறிஞர்களும், இதழாசிரியரும் இனிது வாழ்க !

—சிவம்.

## (7)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்,
திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

தமிழ், தெய்வத் தமிழ். 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' என்று சேக்கிழார் சிந்தையினிக்கப் பாடுகின்றார். 'என்னை நன்றாகப் படைத்தனன் தமிழ் செய்யுமாறே' என்று திருமூலரும் பாடினார். பூதத்தாழ்வார் அரங்கமா நகருளானுக்குத் தமிழ்மாலை இயற்றிச் சாத்தி மகிழ்ந்து, இந்தப் பேறு பெற்றமையை 'யானே தவமுடையேன்' என்று வியந்து பாராட்டிக் கொள்கின்றார். இங்ஙனம் தமிழ், இறை நலத்தோடு இணைந்து வளர்ந்த மொழி. தமிழ் நாகரிகத்தின் சிறந்த பகுதியாகிய சமயநெறி, போற்றுதலுக்குரிய நெறி. தமிழ்ச் சமுதாயத்தின் அகவாழ்க்கை புறவாழ்க்கை ஆகிய இரண்டுமே, சமய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டும், திருக்கோயிலை மையமாகக் கொண்டும், வளர்ந்தவையாகும்.

திருக்கோயில் கண்ணுக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்ட பரம்பொருள், வான் பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் திருவுள்ளத்துடன் எழுந்தருளும் இடமாகும். திருக்கோயில் ஆன்மாக்களின் இன்ப வைப்பு நிலையம்; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பினை வழங்கும் நிலையம். திருக்கோயிலின் சூழல் இறைவன் உயிர்கள் துய்த்து, துவர்த்து, விடுதலை பெற வழங்கியருளும் பொன் பொருள் போகங்களை வழங்கும் நிலையமாகவும் காட்சியளித்தது. திருக்கோயிலை மையமாகக் கொண்டே இறைவன் உயிர்களை ஆட்கொள்ளுகின்றான். தன்கருணை வெள்ளத் தழுத்தி மகிழ்விக்கின்றான். அதனாலன்றோ நால்வர் பெருமக்கள், திருத்தலங்கள் தோறும் சென்று பாடிப்பரவி வழிபட்டனர்; மற்றவர்களையும் வழிபடத் தூண்டினர். தமிழக வரலாறு திருக்கோயிலோ டிணைந்தது. தமிழர் வாழ்க்கை திருவருளோ டிணைந்தது.

இத்தகு சிறந்த சமய வாழ்க்கையினை மேலும் தூண்டி வளர்க்க 'திருக்கோயில்' பிறந்தது. தத்துவ விளக்கங்களை, சமயக் கோட்பாடுகளை, இனிய எளிய முறையில் விளக்குவதில், திருக்கோயில் கடந்த பத்தாண்டுகளாகப், பாராட்டத்தக்க வகையில் திருப்பணி செய்திருக்கிறது.

திருக்கோயில் வளர்ச்சியில் கருத்துடைய ஆணையர் திருமிகு. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நமது பாராட்டுக்கள்! சிவநெறியிலும் செந்தமிழிலும் ஆழ்ந்த பற்றும் அறிவுத்திறனும் உடைய அன்பர் ந. ரா. முருகவேள், 'திருக்கோயில்' ஆசிரியராக இருந்து பணிசெய்தல், மகிழ்ச்சியைத் தருகிறது. மானுடச் சாதியின் உள்ளங்களிலெல்லாம் திருவருள் விளக்கம் காண்கிற வகையில் 'திருக்கோயில்' திருப்பணி மேலும் வளர்வதாக! நமது வாழ்த்துக்கள்!

—தெய்வசிகாமணி.

---

## (8)

வித்துவான், தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
முதல்வர்,
தவத்திரு சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி
பேரூர் ஆதீனம், கோவை-10.

தெய்வ நலத்தால் தமிழ்த்திறத்தால் சிறந்து விளங்கும் கோயில்பல
உய்வைத் தருஉம் மெய்யடியார்கள் உள்ளம் உவப்பச் செந்தமிழ்ப்பா
மெய்ம்மை புணரத் தந்தமுத விளைவுந் தந்த சிறப்பாலே
சைவத் துடனே மற்றுமுள சமய நெறியும் தழைத்ததுவே ! (1)

பண்ணார் தமிழைத் தேன்சொட்டப் பாடும் புலவர் கலைக்கோயில்
தண்ணார் அமுத நலம்தோயத் தழைக்கும் அன்பு தவழ்கோயில்
மண்ணாட் டவரை விண்ணாடும் மதிக்க விளங்கும் அருட்கோயில்
உண்ணா டிடுவார் மனக்கோயிற் கொப்பாம் கோயில் பலஉண்டோ ! (2)

காலங் கடந்த முழுமுதலைக் கண்ணாற் காணும் வடிவமைத்துக்
கோலம் பலவும் செய்தன்பால் குழையும் உள்ளத் தினிதிருத்தி
ஞாலம் புகழ்செந் தமிழ்நவின்ற ஞான வீரர் பலர்பணிந்த
தூல லிங்கக் கோபுரம்சேர் தூய கோயிற் செய்திபல !

ஏற்றுத் திகழும் 'திருக்கோயில்' என்னும் மாத இதழ் இன்று
ஆற்றும் பணிபத் தாண்டினுக்கு அப்பால் வளர்தல், சமயநெறி
போற்று வோர்க்கு மகிழ்வளிக்கும் ; எனினும் மேலும் இளைஞருளம்
தேற்றும் வகையில் தெய்வநெறிச் சிறப்பை வடிக்க வாழ்த்துகின்றோம் ! (4)

தண்ணார் தமிழ்ப்பாக்கள் தந்தவருட் கோயில்களைத்
கண்ணாகப் போற்றும் கருத்துடனே—மன்னா
தரவுடைய நந்தம் திருக்கோயில் தக்க
உரமுடனே ஓங்குகநா ளும்.

—சாந்தலிங்கராமசாமிஅடிகள்.

---

## (௯)

தவத்திரு சுந்தரசுவாமி அடிகளார்,
ஆதினகர்த்தர்,
ஸ்ரீகௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோயம்புத்தூர்-6.

(நேரிசை வெண்பாக்கள்)

செந்தமிழ்நாட் டிற்சமயச் செந்நெறியைக் காத்துவரும்
இந்து சமய இயலாட்சித்—தந்துறையார்,
திங்கள் வெளியீடு திருக்கோயில் பத்திரிகை
எங்கும் பரவுதகைத் தே. (1)

இந்துமதத் தேற்றம், இசைசைவ வைணவநூல்,
சந்தத் திருமுறைகள், சாத்திரங்கள்,—நந்தணியும்
கைத்திருமால் தொண்டர் கவியாம் பிரபந்தம்,
மெத்தஉரை, ஆதிவரு மே. (2)

சமயநெறித் தத்துவங்கள், தக்கதிருக் கோயில்
அமையும் வரலாற் றமைப்புத்—தமைவிளக்கும்
கல்வெட்டா ராய்ச்சி, கவிதை, இலக்கியங்கள்,
பல்வகையாக் கொள்ளல்சிறப் பாம். (3)

இந்தியநாட் டேற்றம் இசையும் நகரங்கள்
சந்தத் தமிழன்பர் தாம்வாழும்—நந்தலிலாச்
சிங்கப்பூர், பர்மாவும், தென்னுப்பிரிக்கா, முதலாம்
எங்கெங்கும் செல்லுதகைத் தே. (3)

சமயத் திருத்தொண்டர், தக்கதமிழ் ஆர்வம்
அமையும் புலமையுளார் யாரும்,—இமயம்வரைக்
கற்கும்வணம் தூண்டும் கவினுர் திருக்கோயில்
பொற்புடனே வாழ்க பொலிந்து. (5)

பத்தாண்டுக் காலம் பணிசெய் திருக்கோயில்
புத்தகமாம் பத்திரிகை பொற்புடனே—இத்தரையில்
வீறு நலத்துடனே மேவி விளங்கும்வணம்
ஆறு முகற்பணிகு வாம். (6)

(வேறு)

திருக்கமல மலரெனவே தெய்வநெறி சிறக்கமலர்
திருக்கோயிற் பத்திரிகை சிறப்போடு வாழியவே! (1)

பொருப்பிமய வல்லிமகன் பொன்வேலன் றன்அருளால்
திருக்கோயில் பத்திரிகை சிறப்போடு வாழியவே! (2)

கருத்தில்எழும் நாதவெள்ளைக் கலைவாணித் தாயருளால்
திருக்கோயிற் பத்திரிகை சிறப்போடு வாழியவே. (3)

—சுந்தர சுவாமிகள்.

---

## (10)

திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள்,
முன்னாள் முதலமைச்சர்.

'மல்லிகா'
15, வாரன் சாலை,
சென்னை-4.

திருக்கோயில் பத்தாண்டுகள் இனியதொண்டு புரிந்து, நம் நாட்டிலும் அப்பாலுமுள்ள தமிழர்களின் நன் மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. இந்த இதழ்களில் வரும் படங்கள் கண்ணைக் கவர்வதோடு, கட்டுரைகள் மனதைக் கவர்கின்றன. நம் நாட்டு ஸ்தலங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுவது, தமிழர்களின் வரலாற்றையும் உணர்ந்து கொள்ளுவதாகும். ஆசிரியரின் ஆற்றலையும், பற்றையும், நான் பெரிதும் பாராட்டுகிறேன். திருக்கோயிலுக்கு என் நல்வாழ்த்துக்கள்!

—எம். பக்தவத்சலம்.

---

## (11)

மாண்புமிகு
மு. கருணாநிதி அவர்கள்,
பொதுப்பணி அமைச்சர்.

தமிழக அரசு
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

அன்புடையீர்,

'திருக்கோயில்' திங்கள் இதழுக்கு, பத்து ஆண்டுகள் நிறைவுற்று, பதினோராவது ஆண்டு தொடங்குவது அறிந்து, மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தனக்குரிய பணியில், இவ்விதழ் சிறந்து வளர என் வாழ்த்துக்கள்!

அன்புள்ள,
மு. கருணாநிதி.

---

## (12)

புரிசை நடாதூர்
ஸ்ரீ கிருஷ்ணமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
சம்பாதகர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா,
ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.

சென்னை இந்து சமயப் பாதுகாப்புத்துறையினரால், வெளியிடப்பட்டுவரும் திருக்கோயில் பத்திரிகையை, ஐந்தாறு வருஷங்களாக, விடாமல் மாதந்தோறும் படித்து வருகின்றோம்.

இந்தியாவில் இந்து ஒவ்வொருவருவனும், கோயிலுக்குச் சென்று தெய்வவழிபாடு செய்ய வேண்டும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார் ஔவை மூதாட்டியார். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனப் பெரியோர் பணிப்பர். இவ்விதம் புநிதமான திருக்கோயிலின் பெயரைத்தாங்கி வெளிவரும் மாதப் பத்திரிகை கைக்குக் கிடைத்ததும், மனம் மகிழ்ச்சியடைகிறது.

சைவம் வைணவம் இரண்டையும் ஆதரிக்கும், சமதர்ம மாதப்பத்திரிகை இது! பிற சமயத் துவேஷத்தைத் தூண்டாமல், சமயப்பற்றைப் பாதுகாக்கும் கட்டுரைகளை மட்டும் வெளியிட்டுவருவது, மிகவும் போற்றத்தக்கதாகும்.

இப்பத்திரிகையில் வெளிவரும் வினாவிடை, ரசிக்கத்தக்கதாக உள்ளது. கடவுளிடம் பக்தியுள்ள அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வரும் இப்பத்திரிகையின் பத்தாவது ஆண்டு, பூர்த்தியடைவதைக் கண்டு களிக்கிறோம்.

நமது நாட்டில் திருக்கோயில்களும், அதன் வழிபாடுகளும் இருக்கும்வரை, இப்பத்திரிகை நிலைத்து நின்று, சமயப்பற்றை முன்னிலும் சீரிய முறையில் வளர்த்துவர, பகவான் அருள்புரிய வேண்டுகிறோம்.

—புரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரியர்,
சிரோமணி.

---

## (13)

'பத்மபூஷண்'
ஜகதாசாரிய சிம்மாசனாதிபதி
உபயவேதாந்த மகாவித்துவான்
பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீமத் அண்ணங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்,
காஞ்சிபுரம்-3

இவ்வுலகின்கண் நிலவும் பாஷைகளிலெல்லாம் தினசரிப் பத்திரிகை முதலாக, மாதப்பத்திரிகையீறாக வெளிவரும் பத்திரிகைகள், எண்ணிலடங்கா. பல பத்திரிகைகள், விஷயங்களின் மகுடங்களை மட்டும் வாசித்து, விடுக்கவேண்டியிருக்கும். சில பத்திரிகைகள் ஒருகால் வாசித்துவிட்டு, உள்ளே அடுக்க வேண்டியிருக்கும்.

விஷய கௌரவத்தினால் ஒருவரியும் விடாது வாசித்து, அடிக்கடி எடுத்துப் பார்க்கவும், விருப்பத்தை விளைவிக்கும் பத்திரிகைகளுள் 'திருக்கோயில்' தலைநிற்பதாம். பத்திரிகை கிடைக்க வேண்டிய நாளைக்குச் சில நாட்கள் முன்னமே பிடித்து ஆவலோடு எதிர்பார்க்கக்கூடிய தன்றோ இது!

மதக்கோட்பாடுகளில் சமநிலைதாங்கும் விசாலமனமுடையவரும், மெச்சத்தக்க மேதையுடையவருமான பத்திராதிபரின் பாண்டித்தியச் சிறப்பே, இப்பத்திரிகையின் பெருமைக்கு முக்கிய காரணம் என்னத் தட்டில்லை. இப்பத்திரிகை இறைவனருளினால் நீடுழிவாழ்வதோடு, மேன்மேலுமோங்குக!

—பி. ப. அண்ணங்கராசாரியர்.

---

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

ஆனந்த மாய்என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான்அந்த மான வடிவுடை யாள், மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணா ர விந்தம், தவளநிறக்
கானம்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே.

(பொழிப்புரை) எனக்குப் பேரின்ப நுகர்ச்சியாகவும், அறிவின் பயனாகவும், நிரம்பிய அமிழ்தத்தின் சுவையாகவும் விளங்குகின்ற, மண்முதல் வானம் ஈறாக உள்ள ஐம்பெரும் பூதங்களையும் தனக்கு வடிவமாகக் கொண்டுள்ள அபிராமியம்மையினது, நான்கு வேதங்களுக்கும் தானே முடிவாகத் திகழ்கின்ற திருவடித் தாமரை மலர், வெண்மை நிறம் பொருந்திய சுடுகாட்டைத் தமது நடனம் ஆடுகின்ற அரங்கமாகக் கொள்ளுகின்ற, எங்கள் இறைவன் ஆகிய சிவபெருமானின், திருமுடிக்குரிய மாலையாகச் சிறக்கின்றது.

(குறிப்புரை) அம்பிகை, சத்து சித்து ஆனந்தம் என்னும் உண்மை அறிவு இன்ப வடிவினளாகத் திகழ்தலின், 'ஆனந்தமாய், அறிவாய், அமுதமுமாய்' எனப் புகழ்ந்தார். 'நிறைந்த' என்னும் அடைமொழியை, ஆனந்தம் அறிவு என்பன வற்றிற்கும் இயைக்கலாம். ''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்'' எனப்படுமாதலின், இவ்வுலகத்தைத் தோற்றி இயக்கி நிற்கும் அம்பிகையை 'வான் அந்தம் ஆன வடிவுடையாள்' என்றார். வான் அந்தம் எனவே, மண் ஆதி என்பது உணரப்பெறும். அம்பிகையின் திருவடி, மறைநான்கினுக்கும் அந்தமானது என்றும், தாமரைமலர் போன்றது என்றும், சிறப்பிக்கப் பெற்றது. சரணம் - திருவடி. அரவிந்தம் - தாமரை. யாவரும் எவையும் நீறுபட்ட இடமாதலின், ஊழி முடிவின் பெருவெளியாகிய சுடுகாட்டைத் ''தவளநிறக் கானம்'' என்றார். தவளம் - வெண்மை. கானம் - காடு. ஆதலின் திருவெண்காடு என்னும் தலமாகவும் இங்குக் கொள்ளலாம். சிவபெருமான் திருவெண்காட்டில் அகோர வீரபத்திர வடிவம் கொண்டு, காளி காணுமாறு அகோர நடனம் ஆடினர் என்பது வரலாறு.

'' மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய ''

என்பதற்கு ஏற்ப, ஊடற்காலத்து அம்பிகையின் திருவடிகளைச் சிவபிரான் தமது தலையிற் பணிந்து ஏற்றுக்கொள்ளுவர் என்பது பற்றிச் 'சரணாரவிந்தம் எம்பிரான் முடிக் கண்ணியது' என்றார். உலகியலை இறைவன்மீது ஏற்றி இலக்கியச் சுவை தோன்றப் பாடித் துதித்தபடி. (11)

கண்ணிய துன்புகழ்; கற்பதுன் நாமம்; கசிந்துபத்தி
பண்ணிய துன்இரு பாதாம் புயத்தில்; பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து; நான்முன்செய்த
புண்ணியம் ஏது?என் அம் மே!புவி ஏழையும் பூத்தவளே!

(பொழிப்புரை) என்னுடைய தாயே! உலகங்கள் ஏழினையும் பொலிவுறத் தோற்றுவித்தவளே! யான் இப்பிறவியில் இடையறாது நினைத்தது உன்னுடைய புகழையே; இடைவிடாமற் கற்று உரைப்பது உன் திருப்பெயரையே; நெஞ்சம் நெகிழ்ந்து உருகிப் பக்தி செய்து வழிபட்டது, உன்னுடைய இரண்டு திருவடிகள் ஆகிய தாமரை மலர்களிலேயே; பகலிலும் இரவிலும் எப்போதும் சார்ந்து ஒழுகியது, உன்னை விரும்புபவர் ஆகிய அடியவர்களின் திருக்கூட்டத்திலேயே; இத்தகைய பெறலரும் பேறுகளைப் பெறுவதற்கு, நான் முற்பிறவிகளிற்செய்த புண்ணியம் யாதோ?

(குறிப்புரை) அம்பிகையின் புகழை நினைத்தல், அவளது திருநாமத்தைக் கற்று உரைத்தல், அவளுடைய திருவடிகளைப் பக்தியுடன் வழிபடுதல், எப்போதும் அவளது அடியார்களின் திருக்கூட்டத்திற் சார்ந்து ஒழுகுதல் என்பன, அம்பிகையின் அருட் பேற்றுக்குரிய சிறந்த வாயில்கள் ஆகும் என, உலகுக்கு அறிவுறுத்தியபடி. 'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீர்உண்டு' என்றாற்போல, இச்செயல்களும் முன்னைப் பிறவி களின் புண்ணியப் பயனாகவே நண்ணுவன ஆதலானும், ''முன்வழுத்தார் பின் வணங்கார்'' ஆதலானும், ''நான் முன்செய்த புண்ணியம் ஏது?'' என வினவி வியந்து மகிழ்ந்தார். (12)

பூத்தவளே!புவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளே!பின் கரந்த ளே!கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவ ளே!உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே!

(பொழிப்புரை) உலகங்கள் பதினான்கையும் பொலிவுறத் தோற்றுவித்தவளே! தோற்றுவித்ததற்கு ஏற்ப, அவற்றைக் காப்பாற்றுபவளே! பின்னர் அவற்றை உரிய காலத்தில் ஒடுக்கம்பெறச் செய்பவளே! நஞ்சின் கறைபொருந்திய மிடற்றையுடைய சதாசிவ மூர்த்திக்கு ஒரு வகையில் முன்தோன்றியவளே! எக்காலத்தும் முதுமை அடையாத, திருமாலுக்குத் தங்கையே! பெருமை மிக்கவளே! உன்னை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தை வழிபடுவது முறையோ?

(குறிப்புரை) உலகத்தை இயல்பாகவும் இனிதாகவும் எளிதாகவும் தோற்று வித்த திறம்பற்றி, ஈன்றவள் பெற்றவள் பயந்தவள் என்பவற்றினும், சிறந்த சொல்லால் 'பூத்தவள்' என்றார். ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழிலும் நிகழ்தற்கு அம்பிகையே காரணமாதலை வியந்து புகழ்ந்தார். சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலின் 'கறைக்கண்டனுக்கு மூத்தவளே' என்றும், அம்பிகையைத் திருமாலின் தங்கையாகக் கூறுவராதலின் 'முகுந்தற்கு இளையவளே' என்றும் குறிப்பிட்டார். 'என்றும் மூவா' என்னும் அடைமொழித் தொடர் 'இளையவளே' என்பதனோடு இயையும். மாத்தவள் - பெருமையுடையவள். மாத்து - பெருமை; 'தலைமகற்கு உரியளாய் நிற்றலான் உண்டாகிய வரிசை' என்பர் பேராசிரியர். (திருக்கோவை: 373). மகளிர்க்குச் சிறந்த கணவனைப் பெறுதலினும், மிக்க பேறும் பெருமையும் வேறில்லை. சிவபிரான் ஆகிய தன்னிகரற்ற கணவனை அடையும் சிறந்த பேறும் பெருமையும், பெண்ணினல்லாள் ஆகிய அபிராமியம்மைக்கு இயல்பாக வாய்த்தன என்பார் 'மாத்தவள்' எனப் புகழ்ந்து போற்றினர். (13)

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்;
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர்; பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

(பொழிப்புரை) எங்கள் பெருமாட்டியே! உன்னை வழிபடுபவர் தேவர் அசுரர் ஆகியோர்; நினைத்துத் தியானிப்பவர் நல்ல திசைமுகனும் நாராயணனும் ஆகிய பலர்; மனத்தின்கண் அன்பினாற் கட்டிவைப்பவர், அழிவில்லாத மேலான அருளின்பத்தை நுகரும் சிவயோகிகள்; உலகத்தின் தலங்கள் தோறும் சென்று நின்னைத் தரிசிப் பவர்க்கு, நின்னுடைய குளிர்ந்த திருவருள் எளிதாகக் கிடைக்கும்.

(குறிப்புரை) அம்பிகையை வழிபடும் வகைகளையும், வழிபடுபவரின் திறங்களையும் குறிப்பிட்டபடி. வந்தித்தல் - வழிபடுதல். வானவர் - தேவர். தானவர் - அசுரர். பதமுத்தி பெற்றிருப்போர் பலராதலின் 'திசைமுகர் நாரணர்' எனப் பன்மையிற் கூறினர். 'பரமானந்தர்' என்பது, இன்பவடிவினராகிய சிவபெருமானையும் குறிக்கும். ''பாரில் உன்னைச் சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே'' என்றதனால், தலயாத்திரை செய்தலின் சிறப்பும் பயனும் விளங்கும். (14)

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்; மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே!

(பொழிப்புரை) பண்களுக்கும் இனிமையைக் கொடுக்கும் மிக இனிய சொற்களையும், இயற்கை நறுமணத்தையும் உடைய, யாமளை என்னும் பச்சைக்கிளி போன்ற அபிராமி அம்மையே! நின்னுடைய திருவருளைப் பெறுவதற்கென்றே முற்பிறவிகளில் பல கோடி வகையான தவங்களைச் செய்த அடியார்கள், இம்மையில் இம்மண்ணுலகத்தைக் காத்து ஆளும் அரசச் செல்வம் ஒன்றை மட்டுமா பெறுவார்கள்? மறுமையில், மதிக்கத்தக்க தேவர்களின் விண்ணுலகத்தைக் காத்து ஆளும் பெருஞ் செல்வத்தையும், அழியாத பேரின்ப வீட்டையும்கூட அன்றோ பெறுவார்கள்!

(குறிப்புரை) அம்பிகையை வழிபடுபவர்கள், இம்மை மறுமை நலங்களையும், வீடுபேற்றின்பத்யையும் ஒருங்கே பெறுவர் என்பது கருத்து. யாமளை - யாமளம் என்னும் சாக்தமத நூல்களாற் புகழ்ந்து போற்றப் பெறுபவள்; 'ச்யாமளா' எனினும் ஆம். (15)

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிட மே! எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவள விற்கள வானது அதிசயமே!

(பொழிப்புரை) கிளியைப் போன்ற நிறமும் மொழியும் அழகும் உடையவளே! அன்பர்கள் ஆகிய உறவினரின் மனத்தே நிலைபெற்றுச் சிறந்து விளங்கும் ஞானப் பேரொளியே! உலகுக்கு ஒளியைத் தரும் ஒளிகளுக்கெல்லாம் புகலிடமாகத் திகழும் பொருளே! நினைத்துப் பார்க்கலுறின், உலகத்துப் பொருள்களுள் நினக்குஉவமையாவது ஒன்றும் இல்லாத பரவெளிப்பொருளே! வான், காற்று, தீ, நீர், மண் என்னும் ஐம்பூதங்கள் ஆகி, இவ்வுலகமாக விரிந்து திகழும் அம்மையே! நின் அருளுக்குரிய எளியேனின், சிற்றறிவின் எல்லைக்கு உட்பட்டுப் போந்து, நீ காட்சி அளித்தது, எவரும் வியக்கத் தக்க செயலாகும்.

(குறிப்புரை) ''நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து, நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'' என்றபடி, தனக்கு இனிய உறவினர் ஆகிய அடியார்களின் உள்ளத்தில் எழுந்தருளி நின்று யாவும் உணர்த்தி வருதலின், ''கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும் ஒளி'' என அம்பிகையைப் புகழ்ந்தார். சூரியன் சந்திரன் அக்கினி முதலிய ஒளியுடைப் பொருள்களுக்கெல்லாம் தானே ஒளியை அளித்து இயக்கி நிற்றலின், ''ஒளிரும் ஒளிக்கு இடமே'' எனப் புகழ்ந்தார். எல்லையற்று விரிந்து நிற்கும் பராசக்தியாகிய அம்பிகை ஓர் எல்லைக்கு உட்பட்டுச் சுருங்கி வந்து, காட்சியளித்தருளிய அரும் பெருஞ் செயலை 'அதிசயம்' எனப் புகழ்ந்து போற்றினர். (16)

அதிசய மான வடிவுடை யாள்!அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி! துணைஇரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோவாம பாகத்தை வவ்வியதே.

(பொழிப்புரை) **வியப்பினை விளைவிக்கும் அழகுமிக்க திருமேனியையுடையவளும், தாமரை மலர்கள் எல்லாம் துதிக்கின்ற வெற்றிப்பாடு மிக்க திருமுகத்தையுடைய அழகிய பூங்கொடி போல்பவளும், ஆகிய அபிராமியம்மையே! தனக்குத் தானே அழகிற்கு ஒப்பு உடையவள் ஆகிய இரதிதேவியின், கணவன் ஆகிய மன்மதனின் வெற்றியானது தோல்வியுறும்படி, முன் ஒரு காலத்தில் நெற்றிக் கண்ணால் விழித்துப் பார்த்தவர் ஆகிய சிவபெருமானின் பேரறிவை, வெற்றி கொள்ள அன்றோ, நீ அவருடைய இடப்பாகத்தைக் கவர்ந்து கொண்டருளியது!**

(குறிப்புரை) **'அண்டகோடிகள் எலாம் ஈன்றும், பின்னையும் கன்னி என மறை பேசும் ஆனந்த ரூபம் ஆன மயில்' ஆதலின், 'அதிசயமான வடிவுடையாள்' என்றார். அம்பிகையின் திருவடியும் திருமுகமும் பிறவும், தாமரை மலரையும் வெற்றி கொண்டு, அவற்றால் போற்றித் துதிக்கப்பெறும் பேரழகு வாய்ந்தன எனற்கு, 'அரவிந்தம் எல்லாம் துதிசய ஆனன சுந்தர வல்லி' என்றார். அரவிந்தம் - தாமரை மலர். ஆனனம் - முகம். வல்லி - கொடி. இரதிபதி - மன்மதன். அபசயம் - தோல்வி. எவரையும் தன் மலர் அம்புகளால் எய்து மோகமுறுவித்து வெற்றி கொள்ளும் மன்மதன், சிவபெருமானை அங்ஙனம் தன் மலர் அம்புகளை எய்து வெற்றி கொள்ள மாட்டாமல், அவர் தம் நெற்றிக் கண்ணின் பார்வையால் எரியுண்டு வீழ்ந்து அழிந்தனன் ஆதலின், 'இரதிபதி சயம் அபசயம் ஆக முன் பார்த்தவர்' என்றார். எவரும் வெல்லுதற்கு அரிய மன்மதனையும் வெற்றி கொண்ட பரமயோகியாகிய சிவபிரானைத் தனது காதல் வயப்படுத்தி மோகம் உறுவித்து, அவர்தம் இடப் பாகத்தைத் தனக்குரியதாகப் பெற்றுக்கொண்ட அம்பிகையின் சிறந்த வெற்றித் திறனை, 'முன் பார்த்தவர்தம் மதி சயமாக அன்றோ வாம பாகத்தை வவ்வியதே' எனப் புகழ்ந்தார்.** (17)

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

(பொழிப்புரை) அபிராமி அம்மையே! நின்னால் கவர்ந்து கொள்ளப்பட்ட இடப் பாகத்தையுடைய சிவபெருமானும், நீயும் இணைந்து மகிழ்ச்சியுடன் இருக்கின்ற காட்சியின் அழகும், உங்களுடைய திருமணக் கோலம் ஆகிய வடிவழகும், மனத்தின் கண்ணேயுள்ள செருக்கு ஆகிய கோணலைப் போக்கி என்னை ஆட்கொண்டருளிய பொன் போன்ற திருவடிகளும் கொண்டு, நீவிர் இருவீரும் எழுந்தருளிப் போந்து, கொடிய கூற்றுவன் என்மேல் எதிர்த்து வரும் இறப்பு வேளையில் வெளிப்பட்டு நின்று, என்னைக் காத்தருள்வீராக!

(குறிப்புரை) உலகத்துத் தாயும் தந்தையும் ஒருங்கு சேர்ந்து மகிழ்ந்திருத்தல், அவர்தம் மக்கட்கெல்லம் மகிழ்வும் நலமும் விளைவித்தல் போல, இறைவனும் இறைவியும் இணைந்து மகிழ்ந்திருக்கும் அர்த்தநாரீசுவர நிலை, உலகுயிர்கள் அனைத் திற்கும் பெருநலம் விளைவித்தலின், அதனை ''இறைவனும் நீயும் மகிழ்ந்திருக்கும் செவ்வி'' எனப் புகழ்ந்தார். காணத்தகும் இறையருட் காட்சிகள் பலவற்றுள், அம்பிகையும் இறைவனும் மணந்துகொண்டருளிய எழிற்காட்சி மிக்க சிறப்புடைய தாதலின், அதனை ''உங்கள் திருமணக் கோலம்'' எனக் குறிப்பிட்டார். ''ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே'' என்றபடி, உயிர்களின் அறியாமையும் செருக்கும் பற்றும் ஆகிய குற்றங்களைப் போக்கி ஆட்கொண்டு அருள் புரிவன, இறைவன் இறைவியரின் திருவடிகளே ஆதலின், அவற்றைச் ''சிந்தை யுள்ளே அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதம்'' எனச் சிறப்பித்தார். வவ்விய - கவர்ந்து கொண்ட. செவ்வி - அழகு. அவ்வியம் - கோணல், குற்றம், வஞ்சனை. வெவ்விய - கொடிய. துன்பங்களுள் மிகக் கொடியதாகிய இறப்புத் துன்பத்தினை நீக்கியருள்க என்பார், ''வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளி

நிற்க'' என வேண்டினர். இப்பாடல் யாவரும் இடையருது ஓதி வழுத்துதற் குரியது. (18)

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை; கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது; என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே!

(பொழிப்புரை) தெய்விக ஒளி நிறைந்து விளங்குகின்ற ஒன்பது கோணங்களிலும் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற அபிராமி யம்மையே! என் வேண்டுகோட்கு இரங்கி என்னைக் காத்தருளுதற் பொருட்டு வெளிப்பட்டு நின்ற, நின்னுடைய திருவுருவத் தினைத் தரிசித்து, என் கண்ணிலும் நெஞ்சத்திலும் களிப்பு மிக்கதனல் பெருக்கெடுத்த இன்ப வெள்ளத்திற்கு, ஓர் அளவு காணப்படவில்லை. என் உள்ளத்தின் உள்ளே தெளிவு ஏற்படுதற்குக் காரணமாக நிலைபெற்ற மெய்யுணர்வு, மேலும் மேலும் பெருகிச் சிறந்து விளங்குகின்றது. எளியேன்பால் நீ இத்தகைய பேரருளைப் பொழிவதற்கு நின் திருவுளக் குறிப்பு யாதோ?

(குறிப்புரை) சாக்த மத வழிபாட்டு முறைகளுள், மந்திரங்கள்போல யந்திரம் எனப்படும் சக்கரங்கள் (கோணங்கள்) தாமும், சிறப்புடையன வாகலின், அச்சிறப்பை விதந்து, அம்பிகையினை ''ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவள்'' எனக் குறிப்பிட்டார். காணவும் கருதவும் இயலாத அருவமாகிய கடவுட்பொருளை, எளிதிற் காணவும் கருதவும் இயலும்படி, உருவமாக வெளிப்படச் செய்து காட்டி உய்விப்பன ஆதலின், அம்பிகையின் திருவுருவம் ஆகிய விக்கிரகத்தினை 'வெளிநின்ற திருமேனி' எனச் சிறப்பித்தார். திருக்கோயில்களில் உள்ள தெய்வத் திருவுருவங்கள், பக்தியுணர்வின் மிக்குப் பண்பட்டுயர்ந்த மெய்யடியவர்களின் கட்புலனுக்கும் மனப் புலனுக்கும், ''பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடல்'' எனும்படி, பேரின்பத்தினை விளைவித்தலின், ''நின் திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும் களிநின்ற வெள்ளம் கரைகண்டது இல்லை'' என்ருர். ''மாசுபடும் மலமாயை அருங்கன்மம் அனைத்தும் அரன்அடியை உணரும்போது அகலும்'' என்றபடி, அம்பிகையின் திருவுருவக் காட்சியால் தமது மனமாசுகள் நீங்கிப் பெருந் தெளிவு பெற்றதனல் ''கருத்தினுள்ளே தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது'' என்ருர். தமது முயற்சியின்றியும், தகுதிக்கு மேற்பட்டும், இன்பவெள்ளமும் ஞான வெள்ளமும் தமது விழியிலும் நெஞ்சிலும் பெருக்கெடுத்துநிற்றலின், 'என்ன திருவுளமோ?' என்று அம்பிகையின் அளவற்ற பெருங்கருணைத் திறத்தினை வியந்து புகழ்ந்தார். திருவுருவ வழிபாட்டின் சிறப்பினையும், இன்ப அநுபவ நிலையினையும், இப்பாடல் இனிது விளக்குகின்றது. (19)

உறைகின்ற நின்திருக் கோயில், நின் கேள்வர் ஒருபக்கமோ!
அறைகின்ற நான்மறை யின்அடி யோ முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோ?கஞ்ச மோ?என்றன் நெஞ்சகமோ!
மறைகின்ற வாரிதி யோ?பூர ணாசல மங்கலையே!

(பொழிப்புரை) முழு நிறைவுடைய, நிலைமாறுதல் இல்லாத, மங்கல வடிவாகத் திகழுகின்ற அபிராமியம்மையே! நீ தங்கி வாழ்கின்ற திருக்கோயில் ஆகிய சிறந்த இடம், நின்னுடைய கணவர் ஆகிய சிவபிரானின் ஒரு பக்கமாகிய இடப்பக்கமோ? அல்லது நின் புகழைப் பெரிதும் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நான்கு வேதங்களின் மூலமாகிய பகுதியோ? அல்லது அவற்றின் முடிபோன்ற பகுதியோ?

அல்லது உலகுயிர்களை வாழ்விக்கின்ற, அமுதகலை நிறைந்து விளங்குகின்ற, வெண்மையான சந்திர மண்டிலமோ? அழகிய சிறந்த தாமரை மலரோ? இந்திரனின் செல்வங்களெல்லாம் முன்னொருகால் மறையப் பெற்ற திருப்பாற் கடலோ? அல்லது எளியேனுடைய நெஞ்சின் உள்ளிடமோ? இவற்றுள் நீ உறைகின்ற திருக்கோயில் யாது? என்பதனைக் கூறியருள்வாயாக.

(குறிப்புரை) சிவபிரானின் இடப்பாகம், நான்மறையின் அடிமுடிகள், சந்திர மண்டிலம், தாமரைமலர், திருப்பாற்கடல் என்னும் இடங்கள் பலவற்றிலும், நீ எழுந்தருளித் தங்கியிருப்பாய்; ஆயினும், எளியேனின் நெஞ்சகமே நினக்குச் சிறந்த திருக்கோயில் ஆயிற்றுப் போலும்! என வியந்துரைத்துத் துதித்து மகிழ்ந்தபடி. 'இராமன் இருக்கும் இடம் எதுவும் அயோத்தி' எனற்கு ஏற்புடையதாதல் போல, அம்பிகை யுறைகின்ற இடம் எதுவும் தன்னிகரில்லாச் சிறப்பை யடையப் பெறுதலின், அதனைத் 'திருக்கோயில்' என்றார். சிறப்புடைய பிற இடங்கள் பல இருப்பவும், ஒரு சிறப்பும் இன்றி இழிவும் மிக்க தமது நெஞ்சத்தினை விரும்பி எழுந்தளிப் போந்து, இறைவி அதன்கண் உறைய முற்பட்டது, மிக்க வியப்பும் விம்மிதமும் விளைவித்து நிற்றலின், 'என்றன் நெஞ்சகமோ, உறைகின்ற நின் திருக்கோயில்?' என்றார். அடியார்களின் அன்புள்ளத்தினையே இறைவி பெரிதும் விரும்பி நிற்பாள் என்பது கருத்து. கேள்வர் - கணவர். கஞ்சம் - தாமரை. வாரிதி - கடல். பூரணம் - முழு நிறைவு. அசலம் - மலை. மங்கலை - சுமங்கலி. (20)

(தொடரும்) — ஆசிரியர்.

# பாவை விழா.

வரப்போகும் மார்கழி மாதத்தில், சிறுவர் சிறுமியர்கள் திருப்பாவை திருவெம்பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்து பாடி, பாவை நோன்பு நோற்று, நல் வாழ்க்கையில் திகழ, வழக்கம்போல ஊக்கம் எடுத்துக்கொண்டு, தங்கள் தங்களுக்குப் பக்கத்திலுள்ள கிராம, நகரத்துப் பள்ளிகளிலுள்ள குழந்தைகள், இந்தத் தெய்விகத் தமிழ்ப் பாடல்களை மனப்பாடம் செய்யவும், பாவைப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பெறவும், நம் இளம் குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்குத் தொண்டு புரியுமாறு, அன்பர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். அதற்காகப் பாவைப் பாடல்களை அச்சிட்டுக் கொடுக்க வசதியில்லாதவர்கள், பின்வரும் முகவரிக்குக் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் :-

"திருப்பாவை–திருவெம்பாவை மத்தியக் குழு"
19, பெரியகடைத் தெரு,
மாயூரம்.

# இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்

## நிம்பார்க்கர் (கி. பி. 11ஆம் நூற்றுண்டு) :

இவர் ஆந்திர நாட்டில், தைலங் பிராம்மண குலத்திற் பிறந்தவர். இராமாநுசருக்குப் பின்னர், கி. பி. பதினென்ரும் நூற்றுண்டில் வாழ்ந்தவராகக் கருதப்பெறுகின்ருர். பிரம்மம் சித்து அசித்து என்னும் முப்பொருள்களும் இவருக்கு உடன்பாடு. பிரமத்தை, இவர் கிருஷ்ணன் அல்லது அரி என்னும் சிறப்புச் சொற்களால் வழங்குகின்ருர். பிரம்மம் உலகத்திற்கு உபாதான காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்குகின்றது என்பது, இவருடைய கொள்கை. ஏனைய வைஷ்ணவ வேதாந்திகளைப் போன்று, இவரும் பிரம்மமே உலகமாகப் பரிணமிக்கின்றது என்கின்ருர். கடவுள் தமக்கு ஒரு லீலையாகவே உலகத்தைப் படைக்கின்ருர்; ஆனந்தமயனுகிய கடவுளிடம் இருந்தே நமது நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை அடைகின்றன. பற்றற்ற செயல்களினுல், உயிர்கள் துன்பங்களினின்று விடுபடுகின்றன. பிரம்மம் என்பது நிர்க்குணப் பொருள் அன்று; பேரறிவு பேராற்றல் பேரழகு பேரருள் பேரின்பம் முதலிய பல சிறந்த குணநலங்களை யுடையது.

பிரம்மம் ஆகிய பொருளை நாம் நமது கட்புலனுலும் கருதலளவையாலும் அறிதல் இயலாது. இறைவனும் ஞானிகளும் அருளிச் செய்துள்ள நூல்களாகிய வேத ஆகமப் பிரமாணம் கொண்டே பிரம்மப் பொருளை அறிதல்கூடும். உயிர்கள் எண்ணற்றன; அணு பரிமாணம் உடையன. முத்தி நிலையிலும் உயிர்கள் தனித்தன்மையுடையனவாய், இறைவனேடு ஒன்ருகாமல், வேறுபட்டே நிற்கும். இறைவனை அடைவதற்குக் கருமம்-ஞானம்-பக்தி-பிரபத்தி-குருஉபசத்தி என்னும் ஐந்து சாதனங்கள், மிகவும் இன்றியமையாதவை. உலகத்துப் பொருள்கள் பிராகிருதம், அப்பிராகிருதம், காலம் என மூன்று வகைப்படும்.

சங்கரரின் கேவலாத்துவைத வாதம், சைதன்யரின் அசிந்திய பேதவாதம் என்பவற்றின் வேருக, நிம்பார்க்கரின் கொள்கைக்குப் பேதாபேத வாதம் என்னும் பெயர் வழங்கப்பெறும். பிரமத்தோடு உலகமும் உயிரும், காரணமும் காரியமும் போல ஒரு வகையில் வேறுபட்டும், ஒருவகையில் வேறுபடாமலும் விளங்குகின்றன என்பது, நிம்பார்க்கரின் பேதாபேதவாதத்தின் முடிவு. இதனைச் 'சுவபாவிக பேதம்' என்றும் கூறுவர். இவரது 'சக்திவாதம்' சமயத்துறையிற் பல சிக்கல்களை விடுவிக்கின்றது. இறைவன்பால் அவனது ஐசுவரியப் பிரதானம் பற்றிய பக்தி செலுத்துதலைவிட, மாதுர்யப் பிரதானம் பற்றிய பக்தி செலுத்துதலையே, நிம்பார்க்கர் பெரிதும் வற்புறுத்துகின்ருர். இல்லற நெறி நின்றும் இறைவனை அடையலாம் என்பது இவர் கொள்கை.

பிரம்மசூத்திரத்திற்கு இவர் வகுத்த பேருரை நூல் ஆகிய வேதாந்த பாரிசாத சௌரபம், தசசுலோகி, மந்திர ரகசிய சோடசி, பிரபந்ந கல்பவல்லி, கிருஷ்ணுஷ்டகம், இராதாஷ்டகம், இராதா ஸ்மரண ஸ்தோத்திரம் முதலியன, நிம்பார்க்கர் இயற்றிய நூல்கள். ஸ்ரீநிவாசர் என்பவர், இவரது சீடர்களுள் முதன்மையானவர். பிரம்மசூத்திரத்திற்கு அவர் வேதாந்த கௌஸ்துபம் என்னும் உரைநூலை இயற்றியுள்ளார்.

## குருநானக் (கி. பி. 1469—1538) :

இவர், இந்தியாவின் வடமேற்குப் பகுதியில், முதன்மையாகப் பஞ்சாப் மாநிலத்தில், மிகுதியாகப் பரவியுள்ள 'சீக்கியம்' என்னும் மதத்தினை நிறுவியவர் ஆவர். சீக்கியமதம் கடவுளைக் குருவாகக் கொண்டு போற்றும். சிக்கியம் என்னும் சொல் சிஷ்யநெறி எனப் பொருள்படும். கி. பி. 1469ஆம் ஆண்டில், ரவிநதிக்கரையில், லாகூர்க்கு அருகேயுள்ள தால்வண்டி என்னும் இடத்தில், க்ஷத்திரிய குலத்தில், குருநானக் பிறந்தார். தந்தையார் ஓர் இந்து; அவர் ஓர் இசுலாமியரிடம் வேலை செய்து வந்தார். இந்து சமயக் கூறுகளும், இசுலாமியக் கூறுகளும், சீக்கிய மதத்தில் கலந்து சிறந்து விளங்குதற்கு, இஃதும்

ஓர் அடிப்படையாக அமைந்தது போலும்! இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே, இறைவழிபாட்டில் ஈடுபாடுமிகவும் ஏற்பட்டிருந்தது. இவர் எப்போதும் துறவிகள், தூயோர்கள் ஆகியோரின் சூழலேயும், நட்பையுமே நாடி நின்றார். இளமையிற் சிலகாலம் உறவினர் வற்புறுத்தியதனுல், இல்லறவாழ்வில் இருந்தார். இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஆயினும் இவரது உள்ளம் இறையருளேயே நாடிவிழைந்து நின்றது.

ஒருநாள் இவர் காட்டிற்கு ஓடி மறைந்தார். அங்கே தியானத்தில் இருந்தபோது கடவுட் காட்சி கிடைத்தது. "நாம செபம்செய், தருமம் புரி, வழிபாடு இயற்று, தியானத்தில் அழுந்து, அனேவருக்கும் இறையருளேப் பரப்பு, குருவாக விளங்கு" என இறைவன் தமக்கு ஆணே பிறப்பித்ததாக இவர் உணர்ந்தார், துறவறம் மேற்கொண்டார். நெற்றியில் குங்குமம் அணிந்து, தலேயில் ஒரு தலேப்பாகை தரித்து, அரையில் எளிய ஆடை உடுத்து, எங்கணும் சென்று இறையருளின் திறனேப் பரப்ப முற்பட்டார். மர்த்தனர் என்னும் இசுலாமிய இசைவாணர் ஒருவர் இவருடன் சேர்ந்து, மாணவரானுர். நானக் தமது கருத்துக்களேச் செய்யுட்களாகப் பாடுவார். மர்த்தனர் அவற்றை இன்னிசைக் கருவியில் இனிதாக இசைப்பார். இங்ஙனம் இறைவனின் அருள்நலனே, 'நாளும் இன்னிசையாற் பரப்பும்' நற்பணியில், நானக் ஈடுபட்டு வந்தார். காசியில் இருந்து மெக்கா வரையிலும், காச்மீரத்திலிருந்து இலங்கை வரையிலும், பல இடங்களுக்கும் நானக் பயணம் புரிந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் தமது இறுதிக் காலத்தைக் கர்த்தார்பூர் என்னும் இடத்திற் கழித்தார். கி.பி. 1538-இல் மறைந்தார்.

சாதி சமய வேறுபாடுகள் பொருளற்றவை என்றும்; எல்லாருக்கும் ஈசன் ஒருவனே என்றும்; அவனே வாயினுற் பாடி, மனத்தினுல் சிந்தித்து வழிபட்டு, அவனருள் பெற்று அவனே அடைவதே மனிதப் பிறவியின் பயன் என்றும்; நானக் தாம் சென்ற இடமெல்லாம் நன்கு விளக்கினுர். "பிரம்மம் பரப்பிரம்மம் பரமேசுவரன் நாராயணன் கோவிந்தன் அரி அல்லா முதலிய பெயர்கள் யாவும் வேறுபாடின்றி, ஒரே கடவுளேயே சுட்டுவனவாகும். வீடுபேறு அடையச் சடங்குகளும் யாகங்களும் செய்யத் தேவையில்லே. கடவுள் உருவம் அற்றவர். அவரை அறிவதற்கு ஆசிரியர் (குரு), மிகவும் இன்றியமையாத துணே ஆவார். உலக வாழ்வு நிலேயற்றது, பயனில்லாதது, வெறும் பொய்யாய்க் கனவாய்ப் போவது. மனிதன் தனக்கென ஓர் ஆற்றலும் துணேயும் உடையவன் அல்லன். உயிர்களின் வாழ்வை உருவாக்கி இயக்கும் ஊழ் என்னும் இயற்கை நியதி ஒன்று உண்டு. கடவுள்பாற் செய்யும் பக்தியினுல் மட்டுமே, மனிதன் உய்தி பெற முடியும்" என்றெல்லாம், குருநானக் யாவருக்கும் எடுத்துரைத்தார்.

சீக்கிய வேதம், 'கிரந்த சாகிப்' எனப்படும். அது 29480 செய்யுட்கள் கொண்டது; வெவ்வேருக அமைந்த செய்யுள் வகைகளே யுடையது. இதன்கண் கபீர்தாசர், நாமதேவர், இராமாநந்தர் போன்ற பல சிறந்த பெரியார்களின் பாடல்களும் உண்டு. இந்துக்களும் இசுலாமியரும் ஆகமொத்தம் 37 பெரியார்களின் பாடல்கள், இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ளன. பிற மதங்களின் வேதங்கள், அவ்வவற்றுக்குரிய ஒரு மொழியிலேயே பெரும்பாலும் அமைந்திருக்கும். சீக்கியமதத்தின் வேதமோ, பஞ்சாபி மூல்ட்டானி பாரசீகம் பிராகிருதம் இந்தி மராத்தி ஆகிய ஆறுமொழிகளில் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது. அமிர்தசரஸ் என்னும் இடத்திலுள்ள பொற்கோயிலின் கருவறையில், சீக்கியர்களின் வேதம் ஆகிய 'கிரந்த சாகிப்' என்பது, உருவம் கொண்ட ஒரு கடவுள்போல் வைத்துப் பெரிதும் போற்றப்படுகின்றது. அவ்வேதம், நாள்தோறும் காலேயில் சரிகை பின்னிய பட்டு ஆடைகளால் அணி செய்யவும், விலேயுயர்ந்த அணிகலன்கள் பதித்த விதானத்தின்கீழ் அமர்த்தவும், இரவில் பொற்கட்டிலில் ஓய்வு கொள்ளுமாறு உபசரிக்கவும் பெறுகின்றது. நாள் திங்கள் பருவம் ஆண்டு என்னும் எல்லாக் காலத்திலும், இரவு பகல் என்னும் வேறுபாடு இன்றி, அமிர்தசரஸ் நகரிலுள்ள பொற்கோயிலின் ஒருபுறத்தில், அவ்வேதம் இடையருது தொடர்ந்து ஓதப் பெற்று வருகின்றது.

குருநானக் நிறுவிய சீக்கியமதம், அவருக்குப் பின்னர்ப் பலரால் மேலும் தொடர்ந்து வளர்க்கப்பெற்றது. குரு அங்கதர் (கி. பி. 1538—1552) என்பவர், பஞ்சாப் மொழிக்குரிய 'குருமுகி' என்னும் எழுத்து வரிசை (Alphabet) முறையினேத் திருத்தியமைத்து ஒழுங்குபடுத்தினுர். குரு அமரதாசர் (கி. பி. 1552—1574) சீக்கிய சமூகத்தினேத் திரட்டி ஒன்றுபடுத்தி வலிமைப்படுத்தினுர். குருராமதாசர் (கி. பி. 1574—1581) என்பவரே, அமிர்தசரஸ் என்னும் நகரத்தையும், அங்குள்ள புகழ்மிக்க பொற்கோயிலேயும் தோற்றுவித்தார். குருஅருச்சுனர் (கி. பி. 1581—1606),

'கிரந்த சாகிப்' என்னும் சீக்கிய மத வேதத்தை முதன்முதலில் தொகுத்தார். டெல்லி அரசனுடன் ஏற்பட்ட போரில் மாண்டார். குரு அரிகோவிந்தர் (1606—1638) தமது தலைமையின் அடையாளமாகக் கூர்வாள் இலச்சினையை (Badge) மேற்கொண்டார். சீக்கியர்களை வீரமும் போர்த்திறனும் மிக்க இனத்தினராக விளங்கும்படி செய்தருளினர். குரு அரிதாசர் (1638—1660), அவுரங்கசீப் என்னும் மொகலாய மன்னனுடன் போர் புரிந்தார். குரு அரிகிருஷ்ணர் (கி. பி. 1660—1664), பலபோர்களில் அஞ்சாமற் கலந்து கொண்டு, சீக்கிய மதத்தையும் இனத்தையும் காக்கப் பெரும்பணி புரிந்தார். குருதேஜ்பகதூர் (கி. பி. 1664—1673) என்பவரும், மொகலாயருடன் இடையருது போர்புரிந்து ஒரு சிறந்த வீரராக விளங்கினர். இவரது பாடல்கள் பல, சீக்கிய வேதத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. குரு கோவிந்தசிங் (கி. பி. 1675—1708) என்பவரே, சீக்கிய மதத்தின் பத்தாம் குருவும், இறுதிக் குருவும் ஆவார். சீக்கிய மதத்தை வீரம் செறிந்ததொரு சிறந்த மதமாக (Militant theocracy) விளங்கும்படி செய்வித்தவர் இவரே. 'சிங்' (சிங்கம்) என்னும் பட்டத்தினை முதன்முதலில் தாம் சூடிக்கொண்டு, அதனை எல்லாச் சீக்கியர்களும் தங்கள் பெயருடன் சேர்த்து வழங்கிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி, அங்ஙனம் வழங்குவித்தவர் இவரேயாவர். சீக்கிய மதத்தின் தலைமையைத் தமக்குப் பின்னர்த் தனி ஒருவருக்கென இல்லாமல், 'கிரந்த் சாகிப்' என்னும் வேதநூலுக்கே உரியதாக மாற்றினர். குரு பதவிக்குப் பதிலாக, கல்சா (Khalsa) என்னும் பெயரில், சான்றோர்களின் பேரவையினை இவரே நிறுவினர்.

சாக்த மதத்தில் வழங்கப்படும் 'பஞ்ச மகாரங்கள்' போல, இவரும் சீக்கிய மதத்திற்குரியனவாக 'பஞ்ச ககாரங்கள்' என்பவற்றை விதித்தார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளரவேண்டிய பண்புநலன்களுக்குரிய வெளியடையாளங்களாகச் சிலவற்றைச் சீக்கியர்கள் அனைவரும் தரிக்க வேண்டுமென, இவர் பணித்தருளினர். அவற்றின் பெயர்கள் "க" என்னும் எழுத்தின் இனத்தில் தொடங்குவதாலும், ஐந்து என்னும் எண்ணிக்கையின் அளவில் அமைந்ததனுலும், அவை 'பஞ்ச ககாரங்கள்' எனப்படும். சீக்கியர் ஒவ்வொருவரும், தூய்மையைக் குறிப்பதாகிய கங்கம் (சீப்பு), நேர்மையைச் சுட்டுகிற கரம் (கைவளையம்), புலனடக்கத்தை உணர்த்தும் கச்சம் (இடுப்புத்துணி), ஆன்மிக ஆற்றலை அறிவிக்கும் கிர்பான் (கத்தி), தியாகவுணர்வைத் தெரிவிக்கும் கேசம் (நீண்டதலைமுடி) என்னும் ஐந்தையும், தமக்குரிய அணிகலன்களாகக் கொண்டு, சிங்கத்தைப்போல அஞ்சா நெஞ்சுடன், கடவுளின் ஊழியராக வாழ வேண்டும் என்று, குரு கோவிந்தசிங் விதித்தார். கலியுகத்தில் இறையருளையும் வீடுபேற்றையும், எய்துவதற்குரிய எளிய இனிய வழி, இறைவனின் திருப்பெயர்களை இடையருது ஓதும் நாமசெபமேயாகும் என்பதே, குருநானக் அவர்கள் நிறுவிய சீக்கியமதத்தின் சிறந்த சாரமான போதனையாகும்.

## பசவேசுவரர் (கி. பி. 1125—1165) :

இவர், இலிங்காயதம் என்னும் வீரசைவ மதத்தைப் பரப்பியருளிய சான்றோர். கன்னட நாட்டில், பீசப்பூர் மாவட்டத்தில் இங்குளாபுரம் பாகேவாடி என்னும் ஊரில், பிராம்மண குலத்திற் பிறந்தவர். தந்தை மாடிராசன், தாய் மாடாம்பாள். மேலைச் சாளுக்கிய மரபைச் சார்ந்த மூன்ரும் சோமேசுவர மன்னரின் பின்வந்த இரண்டாம் சகதேகமல்லர், மூன்ரும் தைலபன் ஆகியோரின் கீழ்இருந்த சிற்றரசனும், கலாசூரி மரபைச் சேர்ந்தவனும் கல்யாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவனுமான, விச்சலன் (கி. பி. 1156—1167) என்னும் சமண அரசனுக்கு அமைச்சராகவும், தலைமைக் கணக்கராகவும் விளங்கியவர். அவ்வரசனின் படைத்தலைவராகப் பணியாற்றியவரும், தமது தாய்மாமனும் ஆன, பலதேவர் என்பவரின் மகள் கங்காம்பிகையை மணந்துகொண்டார். பீசப்பூர் மாவட்டத்தில் உள்ள கூடலசங்கமம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டு, அவரால் இலிங்கதீட்சை பெற்ருர். கல்யாணபுரத்தில் 'அனுபூதி மண்டபம்' என்னும் சமய சங்கம் நிறுவினர். இதனல் இலிங்காயத இயக்கம் பெரிதும் பரவத் தலைப்பட்டது. பசவேசுவரரைத் திருநந்திதேவரின் அவதாரமாக இலிங்காயத மதத்தைப் பின்பற்றும் வீரசைவமக்கள் போற்றுகின்றனர்.

அல்லமாப் பிரபுவினல் ஆட்கொள்ளப் பெற்றவர், சித்தராமர் என்பவர். அவர் சாமளாதேவி என்னும் அரசியால் ஆளப் பெற்று வந்த சோலாப்பூர் என்னும் இடத்தில் சுக்கவே மாதையன் என்பவரின் புதல்வராகப் பிறந்தவர். இரேவண சித்தரின் அருள்வாழ்த்துப் பெற்றவர். இளமையிலேயே துறவுநெறி மேற்கொண்டு, காவளர்த்தல் குளம்தொடுதல் போன்ற பல சமூகநலப் பணிகள் செய்து வந்தார். ஒரு சமயம் அல்லமாப் பிரபு சோலாப்பூர் சென்றபோது, இவர் குளம்

வெட்டிக்கொண்டிருத்தலைக் கண்டார். "வழுக்கைத் தலை அழுக்கற்ற மனத்தைக் காட்டாது. உடலாகிய குளத்திற்கு மனமாகிய கரையைக்கட்டு; நல்லொழுக்கமாகிய படிக்கட்டுகளை அமை; இறையருளின்பம் ஆகிய நீரை நிரப்பு; ஞானம் ஆகிய அருள் வெள்ளத்தின் பெருக்கமாக அந்த நீர் அமைவதாகுக. புறத்தே செய்யப் பெறும் மூர்த்தி பூசை, பொதுமக்களுக்குரியது. நீ யோகியாகவிளங்கி இறைவனை உள்ளத்திலே வழிபடுக" என்று உபதேசித்துச் சித்தராமரை ஆட்கொண்டார்.

பசுவேசுவரரின் சமகாலத்தில் விளங்கியவர் அல்லமாப் பிரபு என்னும் வீரசைவச் சான்றோர். அவர் சிமோகா மாவட்டத்தில், பெல்காவி என்னும் இடத்தில் பிறந்தவர். மிருதங்கம் வாசிப்பதில் மிக்க தேர்ச்சி பெற்றவர். பெல்காவியில் உள்ள யோகேசுவரர் கோயிலில், கமலதேவி என்னும் அழகிய நங்கையைச் சந்தித்துக் காதலித்து மணந்தார். எதிர்பாராதநிலையில் அவள் சில ஆண்டுகளில் இறந்துவிடவே, வாழ்க்கையை வெறுத்துத் துறவுநெறி மேற்கொண்டார். குகேசுவரர் என்னும் இஷ்டலிங்கத்தை வழிபட்டார். சீவன் முத்தராகவும், நிர்விகல்ப சாதகராகவும் திகழ்ந்தார்.

பசவேசுவரரின் சகோதரியாகிய நாகலாம்பாள் என்பவரின் புதல்வர் சென்னபசவர். கல்யாணி நகரத்தில் அமைந்திருந்த 'அனுபூதி மண்டபம்' என்னும் சமயசங்கத்திற் சிறந்து விளங்கி வந்த சான்றோர் பெருமக்கள் ஆகிய பசவர் அல்லமர் சித்தராமர் என்னும் மூவரையும் அன்புடன் போற்றிப் பின்பற்றியவர் இவர். வீரசைவத்திற் பெரிதும் போற்றப்படும் '**ஷட்ஸ்தலம்**' என்னும் சிறந்த சமுதாய அடிப்படைக் கொள்கையினைப் போதித்துப் பரப்பியவர் சென்னபசவரே யாவர். சாதி வேறுபாடுகளைக் கடிந்து, மக்களிடையில் உயர்வு தாழ்வற்ற சமய உணர்வினை வளர்க்க, இவர் பெரிதும் முயன்றார். "மக்களுள் ஆயிரத்தில் ஒருவனே சத்தியன்; இலட்சத்தில் ஒருவனே பக்தன்; கோடியில் ஒருவனே சரணன் (அடியவன்) ஆவான்" என்பது, இவர் தம் அருளுரைகளில் ஒன்று.

கடவுள் ஒருவரே என்பது, வீரசைவத்தின் கொள்கை. இலிங்கத்தைச் சிவபிரானின் சிறப்பு அடையாளமாகக் கொண்டு, அதனை உடலிற் பிரிவற அணிந்துகொண்டு அன்புடன் வழிபடும் முறையினை வற்புறுத்துவதனால், இதற்கு இலிங்காயதம் எனவும் பெயர் வழங்கும். "உலகம் உள்பொருளே. பிறர் சிலர் சொல்வது போல, வெறும் பொய்த்தோற்றம் அன்று. பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் வருணபேதங்களும், பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரம பேதங்களும், அவ்வவற்றிற்கெனத் தனித்தனியே வகுக்கப்பட்டுள்ள கடமைகளும் பிறவும், ஞானமோட்ச சாதனங்கள் அல்ல. மக்கள் அனைவரும் உடன்பிறப்பாளர், இறைவனே உயிர்களுக்கெல்லாம் தந்தை. எவ்வுயிர்க்கும் ஊறுசெய்யாது, இரக்கம்காட்டிப் போற்றுதல் அனைவர்க்கும் கடமை" என்பது வீரசைவக் கொள்கை.

இலிங்கதாரண சந்திரிகை, வேதாந்தசாரம், வீரசைவ சிந்தாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்கலீலை முதலியன, வீரசைவப் பெருநூல்கள் ஆகும். பக்திக்குப் பசவரும், வைராக்கியத்திற்கு அல்லமரும், ஞானயோகத்திற்குச் சென்னபசவரும், கருமயோகத்திற்குச் சித்தராமரும், சிறந்த எடுத்துக்காட்டுகளாவர் எனலாம். வீரசைவ மகளிருள், அக்கமாதேவி நீலாம்பிகை மகாதேவியம்மை இலக்கம்மை முத்தாயியம்மை என்பவர்கள், மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள் ஆவர்.

(தொடரும்) —**ஆசிரியர்.**

## செய்திச் சுருக்கம்

### சித்த வைத்திய சாலை :

வீரவநல்லூர் ஸ்ரீ பூமிநாத சுவாமி கோயிலின் சார்பில் நடைபெறும் சித்த வைத்திய சாலையின் இரண்டாவது ஆண்டுவிழா, சிறப்புற நடைபெற்றது, மதுரைத் துணையாணையர் திரு. **பி. ஆர். பக்கிரிசங்கர்,** எம்.ஏ., பி.எல்., அவர்களும், உதவி ஆணையர் திரு. **எம். வீரபாகு,** பி.ஏ., பி.எல்., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிர்வாக அதிகாரி திரு. ஏ. குமாரசுவாமி ஆண்டறிக்கை வாசித்தார். அறங்காவலர்களுள் திரு. வி. எம். துரைசாமித் தேவர் மாலை சூட்டினர். திரு. பி. சங்கர சுப்பிரமணிய பிள்ளை உரை நிகழ்த்தினர். திரு. எஸ். இசக்கிமுத்துச் செட்டியார் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர். திரு. பரமநாயக தேசிகர். கடவுள் வாழ்த்துப் பாடினர். *(27—10—68)*

# ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்

மகாவித்துவான். ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்
(காஞ்சிபுரம்.)

பதின்மூன்றும் வினா:

ஆத்மவான் யார்? என்கிற பன்னிரண்டாம் வினா கீழே விவரிக்கப்பட்டது; இனி கோபத்தை வென்றவன் யாவன்? என்கிற பதின்மூன்றும் வினா விவரிக்கப்படவேண்டும். ஆனால், அது போர்க்களத்தில் எவனுடைய கோபத்தைப் பார்த்துத் தேவர்களும் அஞ்சி நடுங்குவார்கள்? என்கிற பதினாறும் வினாவோடு சேர்த்து விவரிக்கப் படவேண்டியதாகையாலே, இப்போது விடுக்கப்படுகிறது. பதின்மூன்றும் வினாவையும், பதினாறும் வினாவையும் பொருந்த வைத்து ஒருங்கே விவரிப்போம்; இப்போது தியுதிமான் யார்? என்கிற பதினான்காம் வினாவை விவரிக்கின்றோம்.

இராமசூரியன்:

தியுதியாவது ஒளி; ஒளியை யுடையவன் யாவன்? என்று கேட்கிறபடி. உலகில் சூரியனை ஒளியுள்ளவனாகக் காண்கிறோம்; சிறந்த இரத்தினத்தை ஒளியுள்ளதாகக் காண்கிறோம். அப்படி, இராமனைச் சூரியனாகவும் இரத்தினமாகவும் வழங்கி வருகின்றார்கள். ஸ்ரீராமாயணத்திலே, சுந்தர காண்டத்திலே, ''ராமதிவாகர:'' என்றுள்ளதனால், இராமன் சூரியனென்பது ஸ்ரீராமாயண சித்தமாயிற்று. இராமரத்தினம் என்று பலரும் பெயர் வைத்துக்கொள்ளுகிறபடியாலும், ஆழ்வார்கள் ''மணியே மணி மாணிக்கமே'' என்று இரத்தினமாக விளிக்கின்றபடியாலும், இராமன் இரத்தினமென்பது விளங்கிற்று. சூரியனுக்கும் இரத்தினத்திற்கும் ஒளியினால் பெருமை; இந்த இராம சூரியனுக்கும், இராம இரத்தினத்திற்கும் ஒளியினால் பெருமை; இந்த இராமசூரியனுக்கும் இராமரத்தினத்திற்கும் பெருமையை விளைவிக்கின்ற ஒளி எதுவென்னில்; சீதா பிராட்டியை ஒளியாக ஸ்ரீராமாயணமே நன்கு காட்டித் தருகின்றது. எங்ஙனேயென்னில்; பிராட்டி இராவணனை நோக்கிச் சொல்லி வருகையில்,

> ''அநந்யா ராகவேணாஹம்
> பாஸ்கரேண ப்ரபா யதா''

என்கிறாள். 'சூர்யனுக்கு ஒளிபோலே இராமனுக்கு நான்' என்றாளாயிற்று. இவ்விஷயமே இராமபிரானது திருவாக்கிலும் ஒரு சமயம் வெளிவருகிறது.

> ''அநந்யா ஹி மயா ஸீதா
> பாஸ்கரேண ப்ரபா யதா''

என்று. சூரியனுக்கு 'ஒளி போலே எனக்குச் சீதை' என்றதாயிற்று. பிரபாவனை சூரியனும் பிரபையும் விட்டுப் பிரியாமலே யிருப்பதுபோலப் பகவானும் பிராட்டியும் விட்டுப் பிரியாமலே யிருப்பவர்கள் என்கிற தாற்பரியம் முன்னம் உணரத்தக்கது. அவதாரங்களில் சீதாபிராட்டியோடு ஒரு கால விசேடத்திலே சேர்ந்ததாகவும், மற்றொரு கால விசேடத்திலே அவளை விட்டுப் பிரிந்ததாகவும், மறுபடியும் அவளோடு சேர்ந்ததாகவும், பிரிந்ததாகவும் கதைப் போக்கில் தெரியவந்தாலும், இவ்விரண்டு தத்துவங்களும் பரஸ்பரம்விட்டுப் பிரியாத தத்துவங்களாம்.

பிராட்டியின் பிரிவற்ற தன்மை:

திருமந்திரார்த்தத்திலே ''அவன்மார்பை விட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது'' என்றருளிச் செய்திருப்பது காணலாம். ''நித்யாநபாயிநீ'' என்னப் படுகிறாள் பிராட்டி. பகவான் தேவேந்திரனுடைய வேண்டுகோளுக்கிரங்கி மாவலி

விடத்து இரப்பானனுயச் சென்றபோது, பிரமசாரியாய்ச் சென்ருனென்பது பிரசித்தம். மனைவியில்லாதவனுக்குப் பிரமசாரியென்று பெயர். அத்தகைய பிரமசாரியாச்சிரமத்திலுங்கூட, ஸ்ரீ மகாலட்சுமியானவள் திருமார்பைவிட்டுப் பிரியவில்லையென்று புராணம் கூறுகின்றது;

"க்ருஷ்ணஜிநேந ஸம்வ்ருண்வந்
ச்ரியம் வக்ஷஸ்தல ஸ்திதாம்"

என்பது புராண வசனம். திருமார்பிலே திகழ்கின்ற பிராட்டியைக் குறட்பிரமசாரியான பகவான், மான் தோலினல் மறைத்துக்கொண்டு சென்றதாகச் சொல்லிற்று. இதனை வேதாந்ததேசிகனும் திருக்கோவலூர் உலகளந்த பெருமாள் விடயமாக அருளிச் செய்த தேகளீச ஸ்துதியில்

"பிக்ஷாசிதம் ப்ரகடயந்
ப்ரதமாச்ரமத்வம் க்ருஷ்ணஜிநம்
யவநிகாம் க்ருதவாந்
ப்ரியாயா :"

என்னும் ஸ்ரீசூக்தியினல் வெளியிட்டு அருளினர்.

### சில முரண்பாடு நீக்கல் :

அப்படியானல் மிதிலையிற்சென்று சீதா விவாகம் செய்து கொள்வானேன்? பஞ்சவடியில் பிராட்டியை இராவணன் அபகரித்ததாகவும், அதனல் பிரிவு விளைந்ததாகவும், அப்போது பெருமாள் கதறியழுததாகவும் சொல்லுவானேன்? இதெல்லாம் பொய்தானே? என்று சிலர் கேட்கக்கூடும். நாரத மகரிஷியின் உபதேசங்கொண்டும், நான்முகக் கடவுளின் அநுக்கிரகங்கொண்டும், வான்மீகி முனிவர் இயற்றிய ஸ்ரீராமாயணத்திற்கு,

"ந தே வாக் அந்ருதா காவ்யே
காசித் அத்ர பவிஷ்யதி"

'இதில் பொய்யான பேச்சு ஒன்றுகூட அமையாது' என்கிற தேவதாபிரஸாதம் பிரசித்தமாதலால், இராமாயண கதைகளில் பொய்ம்மையுளதாக நெஞ்சாலும் நினைக்க வொண்ணுது.

"ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம்
தசரதாத்மஜம்"

என்று இராவணவதத்திற்குப் பிறகு, தேவர்களை நோக்கி இராமபிரான் தானே பணித்தபடி தான் ஏற்றுக்கொண்ட மனித பாவனைக்குச் சேர நடந்து கொண்டவிதம் இதிகாச புராணங்களிலுள்ளது. ஸ்ரீமந் நாராயணனுன தன்மைக்குச் சேர்ந்த தத்துவங்கள் தனிப்பட்டவை; மனித பாவனை கொண்டு இராமனுகப் பிறந்து நடித்த நடனத்திற்குச் சேர்ந்த தத்துவங்கள் தனிப்பட்டவை. இதைக்கொண்டு அதை நலியவோ, அதைக் கொண்டு இதை நலியவோ கூடாது. ஒன்று திவ்வியாத்ம சுவ ரூபத்தைப் பற்றியது; மற்றென்று திவ்வியமங்கள விக்கிரகத்தைப் பற்றியது என்று கொண்டாலும் குறையில்லை.

வான்மீகி முனிவர் நாரதமுனிவரை நோக்கிக் கேட்குங் கேள்விகளில் இரண்டும் கலசியே யுள்ளதனல், இருவகைப் பட்ட தத்துவங்களையுமே ஆங்காங்கு நாம் விவரித்து வருகிருேம். பிள்ளைலோகாசாரியர் முமுட்சுப்படியில் "இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை" என்று ஒரு புறத்தில் அருளிச் செய்தும்; மற்ருெரு புறத்தில் "இவள் சந்நிதியாலே காகம் தலை பெற்றது. அதில்லாமையாலே இராவணன் முடிந்தான்" என்றருளிச் செய்தும், ஸ்ரீவசன பூஷணத்தில் "பிராட்டி முற்படப் பிரிந்தது...நடுவிற் பிரிந்தது... அனந்தரம் பிரிந்தது" என்றருளிச் செய்தும் போந்தவை, மேலெழுப்பார்வையில் விருத்தம்போல் தோன்றும்; விருத்தங்களல்ல. ஆலயங்களில் எம்பெருமான்களுடைய திருமேனியிலேயே திருமார்பு நாச்சியார் விளங்கா நிற்கவும், தனிக் கோயில் நாச்சியாரும் தனிப்பட விளங்கிப் பெருமானைத் தனியே சேவிப்பதாகவும், பிராட்டியைத் தனியே சேவிப்பதாகவும், சில காலங்களில் இருவருமான சேர்த்தியிலே சேவிப்பதாகவும் வழங்கி வருகிருேம்.

ஆக, "அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல் மங்கை உறை மார்பா!" என்று ஆழ்வாருளிச் செய்தபடி ஒருவரையொருவர் விட்டுப் பிரியாத நிலையொன்று உண்டாதலால், அதை நெஞ்சிற்கொண்டு ஒளியுடையவன் யாவன்? என்ற வினு எழுந்தது. சூரியன் பிரபையை விட்டுப் பிரியாதவாறு போலே, எம்பெருமானும் நித்திய சித்தமான லட்சுமி சம்பந்தத்தை உடையனுயிருப்பன் என்றதாயிற்று என்க.

### பிராட்டியே ஒளி :

இனி, இரத்தினமானது ஒளியினுலேயே மதிப்புப் பெறுமாபோலே, எம்பெருமானும்

பிராட்டியினாலேயே மதிப்புப் பெறுகிறானென்பதும், இங்கு உணரத்தக்கதாகும். "பொல்லாத தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்ற திருமழிசைப் பிரான் பாசுரங் கொண்டும்,

> "வேதாந்தாஸ் தத்வசிந்தாம் முரபிதுரஸி
> யத்பாத சிஹ்நைஸ் தரந்தி"
> "த்வ ஸ்பர்சாதீசம் ஸ்ப்ருசதி கமலே!
> மங்களபதம்"

என்ற பட்டர் ஸ்ரீசூக்திகள் கொண்டும்,

> "பூர்ணம் தேஜ : ஸ்புரதி
> பவதீபாதலாக்ஷாரஸாங்கம்"

என்ற வேதாந்தவாசிரியர் சூக்திகொண்டும் இதனை யுணர்க. கீழே தர்மவான் யார்? என்ற மூன்றாம் வினாவை விவரிக்குமிடத்து, ஸ்ரீராமாயண கதைகளிலிருந்தே இதனை விரிவாக விளக்கியுள்ளோம். அங்கே கண்டுகொள்வது.

### திருக்குணங்கள் ஒளி :

ஆக, ஒளியின் இடத்திலே பிராட்டியை வைத்து இவ்வளவும் விவரித்தோம். இனி ஒளியின் இடத்திலே திருக்குணங்களை வைத்து நிர்வகிப்பதும் உண்டு. இதைப் பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் "தோஷோபதாவதி" என்று தொடங்கியுள்ள சுலோகத்தில்,

> "ஜ்ஞாநைச்வரீசகநவீர்ய
> பலார்ச்சிஷஸ் த்வாம் ரங்கேச!
> பாஸ இவ ரத்நமநர்க்கயந்தி"

என்றருளிச் செய்தது இவ்விடத்திற்கு மிகப் பொருந்தும். இந்தச் சுலோகத்தின் கருத்தாவது ; "ஒளியானது இரத்தினத்தை விலை பெறுத்துமாபோலே ரங்கநாதா! உனது திருக்கல்யாண குணங்கள் உன்னை விலை பெறுத்துகின்றன" என்பதாம். இதனால் எம்பெருமான் பிராட்டியினாலே ஏற்றம் பெறுமாபோலே திருக்குணங்களினாலும் ஏற்றம் பெறுகிறானென்பது பெறப்பட்டது. நாரதமுனிவரை நோக்கி வான்மீகி முனிவர் செய்யும் பதினாறு கேள்விகளும், திருக்குணங்களைப் பற்றியவையேயானாலும், வியக்தமாகச் சொன்ன குணங்கள்போக மிகுந்த குணங்கள் யாவும் ஒளியுடையவன் யார்? என்கிற இந்த வினாவிலேயடங்கும். பரமபதத்திலே விலை செல்ல மாட்டாத திருக்குணங்களை விலை செலுத்துதற்காகவே இந்நாட்டில் வந்து திருவவதாரங்கள் செய்தனனென்பது பரமார்த்தம் ஆதலாலும், ஸ்ரீராமாயணத்திற் காணும் கதைகளெல்லாம் திருக்குணங்களையே விளங்கக் காட்டவிளைந்தவை யாதலாலும், ஸ்ரீராமாயணத்திற்குத் திருக்குணங்களே ஜீவநாடியாகும். சகல கல்யாண குணங்களையுமுடையவன் யாவன்? என்று கேட்டபடியாயிற்று. தமிழில் இரட்டுற மொழிதல் என்று ஒன்றுண்டே? அந்த வகையில் நிரந்தரமான லட்சுமீ ஸம்பந்தத்தை உடையவன் யாவன்? திருக்குணங்களினால் விளங்குபவன் யாவன்? என்று இரண்டு வினாக்களும், ஒரு வினாவிலே அடங்கியுள்ளனவாகக் கொள்ளலாம்.

### பிராட்டியும் குணங்களும்:

முமுட்சுப்படி துவயப்பிரகரணத்தில் "புருஷகாரபலத்தாலே சுவாதந்தர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்" என்று பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்தபடியே, லட்சுமீசம்பந்தம் அடியாகவே திருக்குணங்கள் தலையெடுப்பனவாதலால், இரண்டும் ஒரு வினாவிலே அமைந்து விளங்குவதும் அழகியதே.

### இராமகுண அனுபவங்கள்:

இனி இந்தப் பிரசங்கத்தில் ஸ்ரீராமகுண விசேஷங்களைச் சிறிது அநுபவிக்கலாகின்றது. வான்மீகி முனிவர் இராமன் திருவவதரித்தான் என்ற கதையைப் பாலகாண்டம் 18ஆம் சர்க்கத்திலே எழுதி, அந்த சர்க்கத்திலேயே விசுவாமித்திர முனிவன் வந்தான் என்பதையும் எழுதி வைத்தார். அக்காலம் தொடங்கியே நமக்கு இராமகதைகள் தெரியவருகின்றன. இராமன் விசுவாமித்திர முனிவர் பின்னாற் செல்லும்போது அவன் பன்னிரண்டு பிராயமுடையவனென்று அறுதியிடப்பட்டிருக்கிறது. ஆகவே பன்னிரண்டு வயது வரையில் இராமபிரான் காட்டின திருக்குணங்கள் நமக்குத் தெரியவருதற்குப் பிரமேயம் இல்லாமலிருக்கிறது. ஆயினும் நம்பிள்ளை போல்வாரான ஆசாரியர்களின் பேருளால், ஒரு திருக்குணம் சிறப்பாகத் தெரியவருகின்றது. இளையோனாகிய இலட்சுமணனைப் பற்றிச் சொல்லும்போது,

> "பால்யாத் ப்ரப்ருதி சுஸ்நிக்த:"

என்றார் வான்மீகிமுனிவர்; 'இளமை முதற் கொண்டே இளையோன் இராமனிடத்தில்

மிகுந்த அன்பு பூண்டவன்' என்பது இதன் பொருள். இரண்டு மூன்று பிராயம் கடந்த பிறகே 'பால்ய வயது' என்று சொல்லப்படும். ஆனாலும்

"பால்யாத் ப்ரப்ருதி"

என்கிற இதற்குப் பொருள் கூறுகின்ற ஆசாரியர்கள், தொட்டிற்பருவமே பிடித்து என்று உரைத்தருளி உள்ளார்கள். அதாவது, சிசுப்பருவத்தையே பால்யமாகக் கொண்டார்களென்றபடி. தொட்டிற்பருவம் தொடங்கியே இலக்குமன் இராமனிடத்து மிகுந்த அன்பு பூண்டவனென்பது எங்ஙனம் தெரிந்ததென்னில்; சக்கரவர்த்திக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தவுடனே தொட்டிலிடும்நாளில், தனித்தனியே நான்கு தொட்டில்கள் இட்டு, பிள்ளைகளின் அவதாரக் கிரமத்தில் முதலிலே இராமனுக்குத் தொட்டிலிட்டு இரண்டாவதாகப் பரதனுக்குத் தொட்டிலிட்டு, மூன்றுவதாக லட்சுமணனுக்குத் தொட்டிலிட்டு, அத்தொட்டில்களிலே வரிசையாகப் பிள்ளைகளைக் கிடத்தினார்கள். அப்போது இலக்குமணனுடைய தொட்டில் இராமனது தொட்டிலுக்கு அடுத்திராமையினால் சிறிது தூரத்திலே கிடக்க நேர்ந்து, அதனைப் பொறுமல் இலக்குமன் வீல் வீலென்று கத்தியழுவன். அப்படியழுவதன் காரணத்தை யறிய கில்லாத தாய்மார் முதலானோர் ஈதென்கொட்டிற்றோ? பாம்பு கடித்ததோவென்று அதிசங்கித்துத் தொட்டிலைச் சோதனை செய்வர்கள். அங்குச் சிற்றெறும்புகூட இல்லாமைகண்டும் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அழுகை ஓயாமைகண்டும், வசிஷ்டபகவானிடம் ஓடி 'சுவாமிந்! லட்சுமண சிசு ஓயாமல் கத்தியழுகின்றது; சமாதான முறைகள் ஒன்றும் பலிக்கவில்லை; யாது காரணம்? கண்டுகூறுமின்' என்ன, அவர் வந்துபார்க்கையில் இலக்குமனுடைய தொட்டில் இராமனது தொட்டிலுக்கு அடுத்திராமல் தூரத்திலிருப்பதுதான் இதற்குக் காரணமாயிருக்க அடுக்குமென்றெண்ணி, 'இராமனது தொட்டிலுக்கு அடுத்தபக்கத்திலேயே இலட்சுமணனின் தொட்டிலைச் சேரவிடுங்கள்' என்று சொல்லிப்போனார். அப்படியே சேரவிட்டார்கள்; இலக்குமனுடைய அழுகை சிறிது ஓய்ந்தது; ஆனாலும் பூர்த்தியாக ஓயவில்லை. அதனால் மறுபடியும் வசிட்டமுனிவரிடம் ஓடி, 'தேவரீர் சொன்னபடியே செய்தோம்; இலக்குமனுடைய அழுகை சிறிது ஓய்ந்ததேயொழிய முற்றிலும் ஓய்ந்தபாடில்லை' என்று சொல்ல, 'அப்படியாகில் இலக்குமனுக்குத் தனித்தொட்டில் வேண்டா; இராமனது தொட்டிலிலேயே உடன்கிடத்துங்கள்' என்று முனிவர் கூற, அங்ஙனமே செய்தவாறே இலக்குமன் அழுகை ஓய்ந்து சிரித்துக்கொண்டேயிருக்க நேர்ந்ததாம். இவ்விசேடத்தையே, 'பால்யாத் ப்ரப்ருதி சுஸ்நிக்த' என்பதனால் வான்மீகர் காட்டியருளுகிறாரென்பர் பெரியோர். இப்படி சிசுக்களையும் ஈடுபடுத்தவல்ல அழகும் குணமும், மிக்க இளமையிலேயே வாய்ந்தவன் இராமன் என்பது இதனால் விளங்கிற்று.

விசுவாமித்திரர் வருகையின் காரணம்:

இனி, மேலே செல்லுவோம். விசுவாமித்திர முனிவர் சாமானியர் அல்லர்; அரும் பெரும் தவங்களை அவலீலையாகச் செய்துமுடித்தவர். அன்னவர், தாம் செய்ய நினைத்த ஒரு சிறு வேள்விக்கு இராமனைத் துணை வேண்டிவந்தாரென்பதும், தசரதமன்னவன் தான் சதுரங்க பலத்தோடுங்கூட வந்து காப்பதாகக் கூறச் செய்தேயும் 'நீ வரவேண்டா; உன் புதல்வனையே அனுப்பவேண்டும்' என்று நிர்ப்பந்தித்து இராமனையே கூட்டிக் கொண்டு போனாரென்பதும், ஆராயத்தக்க விஷயங்கள். விசுவாமித்திரர்க்குத் தமதுயாகம் குறையற நிறைவேற வேண்டுவதுதானே முக்கியம்; தசரதமன்னவனே நேராக வந்து நிறைவேற்றுவதாகச் சொன்னால் அதை அவர் தடுக்கவேண்டிய காரணமென்ன? என்று ஆராயுமளவில், இராமன் விசுவாமித்திர முனிவன் பின்னே செல்லுகிற வியாஜத்தினால் தனது சில திருக்குணங்களை வெளியிட நினைத்து, அதற்காகவே அம்முனிவனை வரவழைத்துத் தன்னையே அனுப்புமாறு நிர்ப்பந்திக்கச் செய்தனன். அப்படியே அம்முனிவனோடு செல்லுங்கால் வெளியிட்ட திருக்குணங்களில் இரண்டொன்று எடுத்துரைப்போம் இங்கு.

துயிலுணர்த்தும் சிறப்பு:

இராமனும் இலக்குமனும் சிறுபிள்ளைகளாகையாலே உறங்கிக் கிடக்க, பின்மாலையில் முனிவன் அச்சிறுவர்களைத் துயிலுணர்த்தித் திருப்பள்ளியெழுச்சி பாட வேண்டியதாயிற்று. அப்போது இருவரையும் எழுப்பவேண்டியிருந்தும், இராமபிரானொருவனையே எழுப்புவதாகச் சுலோகம் காண்கிறது.

"கௌசல்யா சுப்ரஜா ராம!
பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்தூல
கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்"

"மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்த இராமா! சந்தியா வந்தனம் முதலிய நித்தியகருமங்களைச் செய்ய வேணுமே, எழுந்திரு" என்று சொல்லி எழுப்புவதாக இந்த சுலோகம் அமைந்துள்ளது. நித்தியம், நைமித்திகம், காமியம், என்கிற எல்லாக் கருமங்களினாலும் ஆராதிக்கத் தகுந்தவனான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே, இராமனாக வந்து திருவவதரித்திருக்கிறானென்பதை யறியாதவர் அல்லர் முனிவர்; நன்கறிந்தவர். அவரவர்கள் இவனை நோக்கிக் கருமங்கள் செய்ய வேண்டுமே யொழிய, இவன்தான் ஒரு கருமமும் செய்யவேண்டியவனல்லன் என்பதை நன்குணர்ந்தவராயிருக்கச் செய்தேயும், "கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்—உத்திஷ்ட" என்று சொல்லி யெழுப்பியதனால் என்ன தெரியவருகிறது? பகவத் கீதையில் (3,22).

"நமே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம்
த்ரிஷு லோகேஷு கிஞ்சந
நாநவாப்த மவாப்தவ்யம்
வர்த்த ஏவ சகர்மணி"

என்று, 'நான் நித்திய கருமமொன்றும் செய்யவேண்டிய தில்லையாயினும் அதனை வழுவாது செய்துகொண்டே யிருக்கிறேன்' என்று சொல்லியிருப்பதானது, கேவலம் உக்திமாத்திரமன்று; உண்மையில் அனுட்டிப்பதேயென்று தன்னுடைய ஆசரணையினால் காட்டிவருவது தெரிகின்றது. பிராட்டியைப் பிரிந்து வருந்தியிருக்கையிலும் பொய்கைகளிற் சென்று சந்தியாவந்தனத்தைக் குறையறச்செய்தானென்று ஆங்காங்குக் காட்டி வருகின்றார் வான்மீகி முனிவர். ஓரிடம் காண்மின்; யுத்தகாண்டத்தில் (5,22ல்) சூரியன் அஸ்தமித்தானென்றும், அப்போது இராமன் பிராட்டியை நினைத்து மிகமிக வருந்திக்கிடந்தான் என்றும் சொல்லி, அடுத்த சுலோகத்தில் இளையபெருமாளால் தேறுதலடைந்து சந்தியாவந்தனம் செய்தான் என்றும் சொல்லிற்று. சாஸ்த்ரோக்த கருமங்களில் சிரத்தை யுடைமையாகிய குணம் இது:

## இராமனின் பெருங்குணம்:

மற்றொன்றும் கேண்மின்; விச்வாமித்திர முனிவரைநோக்கி இராமபிரான் கூறுகின்றான்:—

இமௌ ஸ்ம முநிசார்தூல
கிங்கரௌ ஸமுபஸ்திதௌ
ஆஜ்ஞாபய யதேஷ்டம்
வைசாசநம் கரவாவ கிம்

என்று. இதன் பொருளாவது; நானும் என் தம்பியும் நீர் இட்ட வேலைகளையெல்லாம் பணிவுடன் செய்வதற்காகவே வந்திருக்கிறோம். சிறிதும் தயங்காமல் எங்களுக்கு நீர் கட்டளையிடலாம்; எது வேணுமானாலும் செய்யக்காத்திருக்கிறோம்-என்பதாம். இராமன் ஸ்ரீ மகாவிஷ்ணு என்கிற தன்மையை மறைத்துக்கொண்டாலும், சக்கரவர்த்தியின் திருமகன் என்கிற தன்மைக்குக் கண்ணழிவில்லையே. அப்படி மகாராசகுமாரனா யிருந்துவைத்து, இழிதொழில் செய்வதற்கே உம்மிடம் வந்திருக்கிறோம் என்று கைகட்டி நின்று சொல்லுங் குணத்தை என்னென்பது!

## குகனிடம் தோழமை:

இனி அயோத்தியா காண்டத்திற்குச் செல்வோம்: "கூரணிந்த வேல்வலவன் குகனோடுங் கங்கை தன்னில் சீரணிந்த தோழமை கொண்டதும் ஓர் அடையாளம்" என்று அனுமன் சொல்லாகப் பெரியாழ்வார் பணிக்கும்படி, குகனென்னுமொரு வேடனோடு தோழமை கொண்ட குணம் என்னே! இதைப்பற்றித் திருமங்கையாழ்வார் பேசுமிடத்து,

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி, மற்று அவற்கு இன்னருள் சுரந்து
மாழைமான் மடநோக்கி உன்தோழி உம்பி
எம்பி என்று ஒழிந்திலை உகந்து
தோழன்நீ எனக்கு இங்கு ஒழிஎன்ற
சொற்கள் வந்து என்மனத்து இருந்திட'

என்று மனங்கனிந்து பேசுகிறார். சத்திரிய சாதியில் சூர்யகுலத்தில் இட்சுவாகு வமிசத்தில் திருவவதரித்தவனும், சக்கரவர்த்தியின் திருக்குமாரனும், சகல ஐச்வர்ய சம்பன்னனும், மகாபுத்திமானும், பகைவனிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குகனை நோக்குங்கால், இவன் இழிவான வேடச் சாதியன் என்றும், அதனால் பகுத்தறிவில்லாத அவிவேகி யென்றும், அச்சாதிக்கு இயல்பான கொடுமையினால் எல்லாவுயிர்களோடும் பகைமை கொள்பவன் என்றும், இகழ்ச்சி கொள்ள வேண்டியது பிராப்தமாய் இருந்தும், அங்ஙனம் இகழ்ச்சி கொள்ளாது தனது பெருமைக் குணங்களையும் பாராமல் இவனிடம்

கலந்து பரிமாறின. சீலகுணத்திற்குப் பாசுரம் இட்டுப் பேசப்போமோ? "குகனே! என் மனைவியான இந்த சீதை உன் தோழி; என் தம்பியான இந்த லட்சுமணன் உன் தம்பியே என்றும், நீ எனது உயிர்த் தோழன் என்றும், இதுவரை நாங்கள் உடன் பிறந்தோர் நால்வராயிருந்தோம்; இப்பொழுது உன்னுடன் ஐந்து பேராயினோம்" என்றும் ஒற்றுமைநயம் தோன்றக் கூறினதும், நெஞ்சையுருக்கும் நலமன்றோ?

### முனிவர்கள்பால் விநயம்:

இனி ஆரணியகாண்டத்திற்குச் செல்வோம்; இராமபிரானைக் காணவேண்டி முனிவர்கள் பலர் திரண்டு, இராமனது பர்ணசாலைக்கு வந்துசேர்ந்தபோது, இராமன் தெண்டனிட்டுக் கைகூப்பி நின்று கூறுகின்றான்—

"ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷாஹி மமாதுலா
யதீத்ருசைரஹம் விப்ரைருபஸ்தேயை ருபஸ்தித:"

என்று. முனிவர்களே! அடியேனை நீங்கள் மிகவும் மன்னிக்கவேணும். உங்களிருப்பிடங்களுக்கு நான் வந்து சேர்ந்து உங்களது யோகக்ஷேமங்களை விசாரிக்க வேண்டியிருக்க, என்னிருப்பிடந்தேடி நீங்கள் வரும்படியாக அந்தோ! அபசாரப் பட்டுவிட்டேனே! என்றான். இந்த விநயமும் இன்சொல்லும் பிறரொருவரால் அநுசரிக்கவும் முடியாதன்றோ.

இனி, கிட்காந்தா காண்டத்திற்குச் செல்லுவோம்.

### சுக்ரீவனிடம் பணிவு:

"லோகநாத, புரா பூத்வர்
சுக்ரீவம் நாதமிச்சதி"

என்றும்,

"சுக்ரீவம் சரணம் கத:"

என்றும் சொல்லும்படியாக, ஒருகுரங்கின் காலிலே குனிந்துநின்றதாகவொரு பெருங்குணம் காட்டப்பட்டது. இராவணனைக் கொல்வதற்குச் சுக்ரீவனைத் துணை கொண்டதாகவும், அதற்காகவே அவனைப் பணிந்ததாகவும், உலகம் நினைக்கும்படியாக வுள்ளது. வாலியிடத்தில் வாசாமகோசரமான பங்கம் அடைந்தஇராவணனை வதஞ்செய்வதற்கு, அந்த வாலியை அவலீலையாகக் கொல்லும் ஆற்றல் படைத்த இராமன் சுக்ரீவனைத் துணைகொண்டான் என்பது தகுதியற்ற பேச்சு. "இளையவர் கட்கருளுடையாய் இராகவனே!" என்று குலசேகராழ்வாரருளிச் செய்தபடி, தன்னுடைய தீனதயாளுத்துவத்தை விளங்கச் செய்வதற்கென்றே இராமன் சுக்ரீவனைத் தேடிச் சென்றனன் என்றது தத்துவம். அப்படி அவனுக்கு அருள் செய்யச் சென்றவிடத்துத் தன்னுடைய பெருமையைக் காட்டாது "சுக்ரீவம் சரணம் கத:" என்றும் சொல்லுமாறு பணிவு காட்டி நின்றது, குணங்களில் எல்லையான தன்றோ? ஆக இப்படிப்பட்ட பலபல திருக்குணங்களினால் பெருமைபெற்றவன் என்பதே, த்யுதிமாந் (ஒளியுடையவன்) என்றதற்கு உள்ளுறையாகும். (தொடரும்)

## செய்திச் சுருக்கம்

### கந்தர் சஷ்டிப் பெருவிழா :

சென்னைக்கு அணித்தேயுள்ள திருப்போரூரில், ஸ்ரீகந்தசுவாமி தெய்வத்தானத்தில், கந்தர் சஷ்டிப் பெருவிழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகள் பல நடைபெற்றன. 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M.A., M.O.L., அவர்கள் "அடியார்க்கு நல்ல பெருமாள்" என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசிவஞான சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்து, முன்னுரையும் முடிவுரையும் கூறி, அருளாசி வழங்கிச் சிறப்பித்தார்கள். (25—10—68).

# தஞ்சைப் பெரிய கோயில்

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ
அங்ஙனே அழகிதோ ! அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் திங்கள்
இலைகுலாம் பதணத்து இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்து இவர்க்கே.

—திருவிசைப்பா

நமது தமிழகத்தில் உள்ள எண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலைநலத்தினாலும், கட்டிட அமைப்புத் திறனாலும், வரலாற்றுப் புகழினாலும், மிகவும் தலைசிறந்தோங்குவது, தஞ்சைப் பெரிய கோயில். 'உலகத்திலேயே கோயில்கள் கட்டுதலில் ஈடும் எடுப்பும் அற்றுச் சிறந்து திகழ்பவர்கள் தமிழர்கள் ; இந்தியாவிலேயே மிகவும் சிறந்ததொரு பெருங்கோயிலாக எழில் மிக்கு விளங்குவது தஞ்சைப் பெரிய கோயில் ஆகும்' (1) என, அயல்நாட்டறிஞர்களும், இக்கோயிலின் எழில்மிக்க இனிய தோற்றத்தினைக் கண்டு, வியந்து புகழ்ந்து போற்றி மகிழ்ந்தின்புறுகின்றனர். தமிழர்களின் கட்டிடக்கலையின் உச்சநிலைச் சீர்த்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக எழில்மிக்கு விளங்குவது, தஞ்சைப் பெரிய கோயிலே (2) எனத் துணிந்து கூறலாம்.

1. "The Tamil races were perhaps the the greatest temple builders in the world; the great pagoda at Tanjore is by far the grandest temple in India."

—*Encyclopaedia Brittanicca.*

2. "The Tanjore temple is the most beautiful specimen of Tamil architecture, at its best...Temples became centres of religious and social life, and the Tanjore temple set the model to the whole of the chola country."

— *K. A. N. Sastri, The Cholas.*

தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாகத் திகழும் தஞ்சாவூர், சோழப் பேரரசு ஏற்படுவதற்கு முன்னரே, பெரிதும் சிறப்புற்றிருந்தது. இங்கேயுள்ள தஞ்சை மாமணிக் கோயில், பூதத்தாழ்வாராலும் (2251), திருமங்கை மன்னராலும் (953, 1090, 1576), மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் விளங்கிய திருநாவுக்கரசர் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' எனக் குறிப்பிட்டிருப்பதும், இந்நகரத்தின் பழமையைக் குறிக்கும் சான்றாகும்.

தஞ்சை மாநகரம், முத்தரையர் என்னும் குறுநில மன்னர்களின் ஆட்சியின் கீழ்க் கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை இருந்து வந்தது. இதனை முத்தரையர்களிடம் இருந்து கைப்பற்றிச் சோழர்களுக்குரிய தலைநகரமாகச் செய்தவன் 'தொண்ணூற்றாறு விழுப்புண் கொண்ட சோழன்' எனப் போற்றப் பெறும் விசயாலய சோழனே (கி. பி. 846—880) ஆவன். இச்செய்தி, திருவாலங்காட்டுச்செப்பேட்டினாலும், திருக்கோவலூர் வீரசோழபுரத்துக் கல்வெட்டினாலும் புலனாகின்றது. 'பாண்டியகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்' என இந்நகரம் கல்வெட்டுக்களிற் குறிப்பிடப் பெறுகின்றது.

சோழப் பேரரசின் ஆட்சியின்கீழ், 10-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரையிலும் ; பாண்டியர் ஒய்சளர் ஆகியோரது ஆட்சியின்கீழ் 13-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டு வரையிலும்; தஞ்சைமாநகரம் இருந்து வந்தது. கி. பி. 1535 முதல் 1672 வரையில், விசய நகர அரச மரபினர் இதனை ஆண்டு வந்தனர். கி. பி. 1674 முதல் 1885 வரை மகாராட்டிர மன்னர்கள் இதன்கண் அரசு

செலுத்தியிருந்தனர். 1855 ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரையில், இஃது ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

தஞ்சையிலுள்ள பெரியகோயில் என்னும் பிருகதீசுவரர் கோயிலைக் கட்டியவன், முதலாம் இராசராசன் (கி. பி. 985—1014) என்னும் புகழ்மிக்க பேரரசன் ஆவான். போர்த்திறனும் ஆட்சித்திறனும் மிக்க பெருவீரன் ஆகப் பிறங்கிய இவன் காலத்தில், சோழப் பேரரசு கடல்கடந்த பிற நாடுகளிலும் பரவி, மிக்க வலிவும் பொலிவும் பெற்றுச் சிறந்தோங்கியிருந்தது. இராசராசசோழன் சேரனை வென்றான்; பாண்டியனைப் புறங்கண்டான்; சிங்களரை அடக்கினான்; குடகுநாட்டைக் கவர்ந்தான்; கங்கபாடி கல்யாணி வேங்கிநாடு மாலத்தீவு ஆகியவைகளைக் கைப்பற்றினான்; இவனது இயற்பெயர் அருண்மொழி வர்மன் என்பது. முதற்பராந்தக சோழனைப் போலத் தில்லைக் கூத்தப்பிரானின் கோயிலுக்கு நிபந்தங்கள் அளித்து வழிபட்டமையின், தில்லைவாழ் அந்தணர் இவனது ஆட்சியின் 19-ஆவது ஆண்டில் இராசராசன், சிவபாத சேகரன் என்னும் பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தனர். பாண்டியர்களையும் சேரர்களையும் அடக்கி வெற்றி கொண்டதனால், இவனுக்குப் பாண்டிய குல அசனி, கேரள அந்தகன் என்னும் சிறப்புப் பெயர்களும் வழங்கும். மும்முடிச் சோழன், ஜெயங்கொண்டசோழன் என்பனவும் இராசராசனுக்கு உரிய சிறப்புப் பெயர்கள் ஆகும்.

இவனது தந்தையார் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' எனப்படும் இரண்டாம் பராந்தக சோழர் ஆவர். தாயார், வானவன்மாதேவி. பெரிய பாட்டனார், சிவஞான கண்டராதித்தர். பெரிய பாட்டியார், செம்பியன்மாதேவி. தமக்கையார், குந்தவைப் பிராட்டி. மைத்துனர், வல்லவரையர் வந்தியத்தேவர். மனைவியர், உலகமாதேவி திரைலோக்கியமாதேவி அபிமான வல்லி சோழமாதேவி பஞ்சவன்மாதேவி இலாடமாதேவி பிருதிவிமாதேவி என்போர். புதல்வன் 'கங்கை கொண்ட சோழன்' என வழங்கும் இராசேந்திர சோழன் (கி. பி. 1012—1044). புதல்வியர், மாதேவடிகள், அருமொழி நங்கை என்போர்.

இராசராசனது ஆட்சிக்கு உறுதுணையாக இருந்து பணிபுரிந்த உயர் அலுவலர்கள் பலர். அவர்களுள் இராசராச மூவேந்த வேளான், பராந்தகப் பல்லவரையன், மும்முடிச் சோழப் பிரமாதிராயன், கேரளாந்தக விழுப்பரையன், தென்னவன் மூவேந்த வேளான், உத்தம சோழப் பல்லவராயன் என்போர் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஒவ்வொருவகையில் திருப்பணி செய்துள்ளனர்.

தஞ்சைப் பெரியகோயிலை இராசராச சோழன், தனது 19-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1003), கட்டத் தொடங்கினான். ஆறு ஆண்டுகள் இக்கோயிலின் திருப்பணி தொடர்ந்து நடைபெற்று, அவனது 25-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1009) இக்கோயில் முழுவதும் செம்மையுறக் கட்டி முடிக்கப் பெற்றது.

"பாண்டிய குலாசனி வளநாட்டுத்
தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்
நாம் எடுப்பிதத திருக்கற்றளி
ஸ்ரீராசராசேச்சுவரம்"

எனவரும் கல்வெட்டுப் பகுதியினால், இப்பெரிய கோயிலின் பெயர் இராசராசேச்சரம் என்பது, இனிது உணரப்பெறுகின்றது. கோயிலின் முன்புறத்தை ஒருபெரும் அகழி சூழ்ந்துள்ளது. இக்கோயிலில் மூன்று திருவாயில்களையுடையது. முதற் கோபுரவாயில் 'கேரளாந்தகன் திருவாயில்' எனவும்; இரண்டாவது கோபுர வாயில் 'இராசராசன் திருவாயில்' எனவும் மூன்றாவது 'திருவணுக்கன் திருவாயில்' எனவும் வழங்கப்பெறும். திருவணுக்கன் திருவாயிலின் இருபுறமும் அமைந்துள்ள படிகளே, பண்டைக் காலத்திற் கருவறையின் உட்செல்லுதற்குரிய வழியாக இருந்தன. கோயில் எடுப்பித்தபோதே அமைந்த படிகள் இவை. ஆதலின் இராசராச சோழன் இறைவனை வழிபடச் செல்லும் போதெல்லாம், இப்படிகளின்மீது ஏறியே உட்சென்றிருப்பான். அவனது திருவடிகள் பதியப்பெற்ற புனிதமுடைய படிகள் இவை. 'விக்கிரமன் திருவாயில்' என்னும் வாயில் ஒன்றும் இங்கு உள்ளது.

திருவணுக்கன் திருவாயிலுக்கு எதிரே, இப்போது மகாமண்டபத்தின் முன்பாக அமைந்துள்ள நேர்வழிப் படிகள், அண்மைக்காலத்தில் போசரஜி கி.பி. (1797-1832)

அரசரால் அமைக்கப்பெற்றன. இக்கோயி லின் அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவைகளையும், கி. பி. 1801 ஆம் ஆண் டில், சரபோஜி மகாராசரே கட்டுவித்தார்.

இக்கோயில் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்ட பம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்ட பம் என்னும் ஆறு பகுதிகளையுடையது. கோயிலின் உள்ளேயுள்ள ஏழு வாயில் களிலும், 18 அடி உயரமும், 8 அடி அகல மும் உள்ள ஏழு துவார பாலகர்கள் அழகுறச் செய்து நிறுத்தப்பட்டுள்ளனர். கோயிலின் வெளிப்புற நீட்டளவு 793 அடி, குறுக்களவு 397 அடி. செங்கல் பரப்பப் பெற்றுள்ள உட்புறப் பரப்பு 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உடையது. கோயிலின் விமானத்திற்கு எதிரில் அமைந்துள்ள நந்தியின் திருவுருவம் 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும் உடையது. இஃது ஒரே கல்லிற் செதுக்கப்பெற்றது; மிகப் பெரியது. இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நந்தி களுள் முதலாவது, அநந்தப்பூர் மாவட்டம் இந்துப்பூர் வட்டம், லேபாட்சி என்னும் இடத்தில் விளங்கும் வீரபத்திர சுவாமியின் கோயிலில் இருப்பதாகும். அதனை அடுத்த இரண்டாவது பெரிய நந்தியாகத் திகழ் வது, இங்குள்ளதேயாகும். இதனைப் பாதுகாப்பதற்காக அமைந்துள்ள மண்ட பம், பிற்காலத்தில் இருந்த தஞ்சை நாயக்க அரசர்கள் கட்டியது.

இக்கோயிலின் அடிநிலை முதல் தூபி வரை, யாவும் கருங்கற்களாலேயே முழுவ தும் இயன்றதாகும். கோயிலின் கரு வறைக்கு மேலேயுள்ள அழகிய விமானம் சதுர வடிவமானது; 13 நிலைகள் கொண் டது. உச்சியில் சதுர வடிவமுள்ள பிரமரந் திரத் தளக்கல்லின்மேல் கலசமும், அதன் மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் நிறுவப் பெற்றுள்ளன. இச்சிறந்த விமானம் தட்சிணமேரு என வழங்கும். இது 216 அடி உயரமுள்ளது. இதன்மேல் உள்ள செப் புக்குடம் 3083 பலம் நிறையுடையது. அதன்மேற் போர்த்துள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு அளவுடையது. விமானத் தின் உச்சியில் வியத்தகு முறையில் ஏற்றப் பெற்றுள்ள பிரமந்திரத்தளம், முழுப் பெருங் கருங்கல்; அது 25 அடி சதுரம், 80 டன் நிறையுடையது. சதுரக் கல்லின் நான்கு மூலைகளிலும், முறையே இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித் தனியே 6 அடி நீளமும், 5 அடி அகலமும் கொண்டவை. திருக்கோயிலின் நாற் புறமும் உயர்ந்த மதில்களின்மேல், இப் போது எஞ்சியுள்ள நந்திகள் மட்டுமே 343 ஆகும்.

இராசராசசோழன், சிறந்த சிவபக்தன்; கலையுணர்வு படைத்தவன். ஆதலின் நடனம் சிற்பம் ஓவியம் முதலிய கலைகளை அவன் பெரிதும் ஆதரித்தான். தில்லைக் கூத்தப்பிரானின் நடனக்கலைக்குரிய 108 கரணவகைகளைக், கோயிலின் இரண்டாம் தளத்தின் உட்பாகத்து அடிவரிசையில், சிற்பவடிங்களாக அமைக்கச் செய்துள் ளான். கருவறையைச் சுற்றியுள்ள அர்த்த மண்டபத்தில் இராசராசன் காலத்தில் தீட்டப்பெற்ற அழகோவியங்கள், அண் மையில் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன. விமானத்தில் பிள்ளையார் திருமால் பிச்சா டனர் தென்முகக்கடவுள் மார்க்கண்டேயர் நடராசர் இலிங்கோற்பவர் அர்த்தநாரீசு வரர் கல்யாணசுந்தரர் மகிஷாசுரமர்த்தனி ஆகியோர் திருவுருவங்கள், கவின்மிகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இக்கோயிலில் உள்ள பெருமானுக்கு இராசராசேசுவரர், தட்சிணமேருவிடங்கர், பிருகதீசுவரர், பெருவுடையார் எனப் பல பெயர்கள் வழங்கும். அம்பிகையின் கோயில் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனே ரின்மை கொண்டான்' என்னும் அரசரால் கட்டப்பெற்றது. உலகமுழுதுடைய நாச் சியார், உமாபரமேசுவரியார், திருக்காமக் கோட்டம் உடையநாச்சியார், பிருகதாம் பாள், பெரிய நாயகி என அம்பிகைக்குப் பலபெயர்கள் வழங்கும்.

இக்கோயிலின் திருச்சுற்று மாளிகை யைக் கட்டியவர், ஸ்ரீகிருஷ்ணன் இராம னை மும்முடிச்சோழன் பிரமாதிராயர் என்பவர். பிராகாரத்தில் உள்ளனவற்றுள் சண்டேசுவரர் கோயில் ஒன்றே, பண்டைக் காலத்தில் இராசராசசோழனற் கட்டப் பெற்றது. ஏனையவை பிற்காலத்தில் ஏற் பட்டவை. பிராகாரத்தில் உள்ள பிள் ளையார் கோயில், சரபோஜி அரசர் கி. பி. 1803ஆம் ஆண்டில் திருப்பணி செய்து கட்டுவித்தது. கோயிலின் வடமேற்குப் பிராகாரத்தில் உள்ள முருகன் கோயில், தஞ்சை நாயக்க அரசர்கள் அமைத்தது. இதன்கண் உள்ள ஆறுமுகப் பெருமானின் திருவுருவம், சிற்பக் கலைத்திறன் மிக்கது.

மயிலும், முருகனின் வடிவமும், திருவாசியும் உட்பட, ஒரே சிலையில் அமைந்தது. யானையும் குதிரைகளும் பூட்டிய தேரின் வடிவத்தில், இக்கோயில் அழகுற இனிதமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் உள்ள துவாரபாலகர்களின் இரு திருவுருவங்களும், வேலை நயப்பாடுமிகவும் வாய்ந்தது. மேலைப்பிராகாரத்தில் வேம்பும் மந்தாரையும் நிழல் செய்ய விளங்கும் கருவூரார் சந்நிதி மிகவும் பழமையுடையதேயாயினும் அண்மையில் 50 ஆண்டுகட்கு முன்னே தான் செவ்விதிற் கட்டப்பட்டதாகும். இராசராசனின் குருவாக இருந்தவரும், திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் சிலவற்றைப்பாடியவரும் ஆகிய கருவூர்த்தேவர் என்னும் சித்தர் பெருமான், இதன்கண் எழுந்தருளியுள்ளார். கோயிலின் உட்பிராகாரத்தில் வடகிழக்கில் உள்ள 'ஆடல்வல்லான்' கோயிலும் பிற்காலத்ததே. அதற்கு அடுத்திருந்த தேரைத் தீர்த்தம் என்பது மூடப்பெற்று, ஒரு கிணற்றளவில் அமைக்கப்பட்டதாகச் சரபோஜி அரசர் கல்வெட்டொன்று கூறுகின்றது.


இராசராசன் இப்பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள், மிகப் பலவாகும். இக்கோயிலுக்கு வேண்டிய அமைப்புகளுள் ஒன்றும் குறைவுபடாமல் நிரம்பச் செய்வதில், அப்பேரரசன் பெரிதும் கருத்தூன்றி யிருந்தான். தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த பொருள்கள் அனைத்தையும், இக்கோயிலுக்கே அளித்தான். ஏராளமான விளைநிலன்களும், விலையுயர்ந்த அணிகலன்களும், பொற்கலன்களும், அவனால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்டன. தேவாரத் திருப்பதிகம் பாடுவதற்காக மட்டும் 48 ஓதுவார்கள் நியமிக்கப்பெற்றிருந்தனர். கோயிற் பணிகளைச் செய்ய, இசையிலும் நடனத்திலும் தேர்ச்சி பெற்ற 400 தளிப் பெண்டுகள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருவித்துக் கோயிலின் அருகே குடியேற்றுவிக்கப் பெற்றனர். அவர்கட்குத் தனித்தனியே வீடுகள் கட்டிக்கொடுத்தும், 100 கலம் நெல் விளையக்கூடிய ஒவ்வொரு நிலம் அளித்தும், தக்க வசதிகள் பலவும் செய்யப்பட்டன. இவர்களுள் இசை பயிற்றுவிக்கும் காந்தர்வர்கள் என்போர், 70 பேர் இருந்தனர். மற்றும் கொட்டி மத்தளக்காரர் பக்கவாத்தியர் வீணை வாசிப்போர், முரலியம் வங்கியம் பாடவியம் உடுக்கை முத்திரைச்சங்கு முதலிய இசைக்கருவிகளை முழக்குவோர், பற்பலர் இருந்தனர். உவச்சு சகடை கரடிகை என்னும் பறை வகைகளும் இருந்தன. பண்டாரகர் கணக்கர் மெய்காப்பார் பரிசாரகம்புரிவார் திருவிளக்கிடுவார் மாலை தொடுப்பார் வண்ணம் இடுவார் சோதிடர் தச்சர் தட்டார் கன்னார் குயவர் நாவிதர் வண்ணார் முதலிய பலவகைத் தொழிலாளர்களும், இக் கோயிலுக்கென மிகப் பலர் அமைந்திருந்தனர்.

இக்கோயிலில் காலை நண்பகல் இரவு என்னும் மூன்று வேளைகளிலும் வழிபாடு நடைபெற்றது. சண்பகமொட்டு ஏலவரிசி இலாமச்சம் ஆகியவைகளை ஊறவைத்த நீரால், திருமஞ்சனம் ஆட்டப்பெற்றது. பழவரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது தயிரமுது அடைக்காயமுது கறியமுது பருப்பமுது முதலியன பலவும், நிவேதனம் செய்யப்பட்டன. உப்பு முதல் கற்பூரம் வரையில் கோயிலுக்கு வேண்டிய எல்லாப் படித்தரங்களும், ஒரு குறைவும் இன்றி நிரம்பக் கிடைக்கும்படி, நுண்ணிதின் எண்ணித் தக்க பல ஒழுங்குகள் செய்யப்பெற்று விளங்கின. இராசராசன் பிறந்த சதய நாள் விழா, மாதந்தோறும் சிறப்பாக நடைபெற்றது. கார்த்திகைத் தீபத் திருவிழா நன்கினிது நிகழ்ந்தது. வைகாசி மாதத்தில் பெரிய விழா 9 நாட்கள் நடத்தப்பட்டது. திருவாரூர்க்கோயிலைப் பின்பற்றிப் பின்னர், இக்கோயிலின் ஆண்டுப் பெரிய விழா, சித்திரை மாதத்தில் 18 நாட்கள் நடைபெறுவதாயிற்று. நாடகமாராயன், சாக்கைக் கூத்தன், கானம்படி, வாத்தியமாராயன் முதலிய கலைஞர்களும், இக்கோயிலிற்பணியாற்றி வந்தனர். அவர்களால் "இராசராசேசுவர நாடகம்" நடிக்கப் பெற்று வந்தது. பிற்காலத்தில் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய "சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்" சித்



CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்.




ஸ்ரீ வேலாயுத சுவாமி, சிவகிரி, ஈரோடு வட்டம்.

அன்பளிப்பு :
திரு. நா. ஜனார்த்தனம்,
ஓவிய ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி, சிவகிரி.

திரை விழாவின்போது நிகழ்ந்ததெனத் தெரிகின்றது.

இங்ஙனம் வரலாற்றுச் சிறப்பும், கலைச் சிறப்பும், தெய்விகச் சிறப்பும் மிக்கதாக விளங்கும் தஞ்சைப் பெரியகோயில், அருளாளர்களின் பாடல்பெற்ற சிறப்பும் உடையதாகத் திகழ்கின்றது. சைவத்திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவின்கண், கருவூர்த்தேவர் பதினொரு பாடல்களால் இக்கோயிலினைப் புகழ்ந்து துதித்துள்ளார். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் விளங்கிய அருணகிரிநாதர், பாடிய மூன்று திருப்புகழ்ப் பாடல்களும் இக்கோயிலைப் புகழ்ந்து போற்றியுள்ளன இங்ஙனம் தமிழ்மக்களின் கலைநாகரிகப் பண்பாட்டு ஒளிநிலையமாகத் திகழும் தஞ்சைப் பெரிய கோயிலையும், அதனை எடுப்பித்த இராசராசசோழப் பெருவேந்தனையும், நாம் பெரிதும் போற்றிச் சிறப்புறுவோமாக!

— ஆசிரியர்.

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ?
விஞ்சுறு மாறுன தடிசேர
விம்பம தாய்அருள் அருளாயோ!
நஞ்சமு தாஉணும் அரனார்தம்
நன்கும ரா!உமை அருள்பாலா!
தஞ்சென வாம்அடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே!

— அருணகிரிநாதர்.



திருநாகைக் காரோணத்தில் நிகழ்ந்த ஆடிப் பூர விழாவில் கலந்துகொண்ட
**தஞ்சைத் துணை ஆணையர் முதலிய பெருமக்கள். 28—7—68**

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

துஷ்யந்தன் : யமுனைக்கும் கங்கைக்கும் நடுவேயுள்ள நகரம் பிரதிஷ்டானபுரம். துஷ்யந்தன் அதனைத் தலைநகராகக் கொண்டு அறநெறியுடன் அரசுபுரிந்தான். அவனால் உலகம் மகிழ்ச்சி மிகுந்திருந்தது.

இம்மன்னன் குதிரை யானை முதலிய சேனைகள் புடைசூழக் கத்தி, வேல் கதை முதலிய படைக்கலங்களை ஏந்திய வீரர்களுடன் வேட்டையாடும் பொருட்டு அடர்ந்த கானகத்துக்குப் புறப்பட்டான். சங்கம் துந்துபி முதலிய ஒலிகளும், வீரர்களின் முழக்கமும், தேர் குதிரை முதலிய வாகனங்கள் ஓடுகின்றபோது உண்டாகிய ஒலிகளும், கடல் போல் எழுந்தன. நகரத்தில் உள்ள பெண்கள் உயர்ந்த மாளிகைகளின்மேல் நின்று மன்னவனை இமை கொட்டாது பார்த்தார்கள். இந்திரனுக்கு நிகரான அந்த அரசன்மீது மலர்களைச் சொரிந்தார்கள். பிராம்மணர்கள் மங்கள வாழ்த்துக் கூறினார்கள்.

வேந்தன் கருடனுக்கு நிகரான தேர்மீது சென்று அநேக கொடிய விலங்குகள் நிறைந்ததும் வானளாவிய மரங்களால் இருள் சூழ்ந்ததுமான காட்டில் அங்கும் இங்குமாக ஓடித்திரிந்து புலி சிங்கம் முதலிய விலங்குகளைக் கொன்று குவித்தான். வேட்டை வீரர்கள் களைத்து நீர் விடாய் கொண்டு தவித்தார்கள். ஒரு மானைத் தொடர்ந்து துஷ்யந்தன் தனியே சென்று களைப்புற்றான்.

அங்கே மிக இனிமையான ஒரு சோலையைக் கண்டான். அந்தச் சோலையில் குயில்களும் வண்டுகளும் இனிது ஒலி செய்து கொண்டிருந்தன. பூவாமலும் காய்க்காமலும் ஒருமரமுமில்லை. மலர்களின் நறுமணம், மெல்லிய காற்றால் கமழ்ந்து கொண்டிருந்தது. மிக்க வனப்பும் சாந்தியும் அமைந்த இந்த இனிய வனத்தை மன்னவன் கண்டு மனம் மகிழ்ந்தான். மாலினி என்ற நதிக்கரையில் அந்த அழகான சோலை யமைந்திருந்தது. அதில் கொடிய விலங்குகள் கொடுமையின்றிச் சாந்தமாக விளையாடின. அதில் பல முனிவர்களின் இருக்கைகளும் யாகத்தீயும் மான்தோல் புலித்தோல் ஆசனங்களும் திகழ்வதைக் கண்டான். கண்ணுவ முனிவருடைய அந்த ஆச்ரமத்தைக் கண்ணுற்ற மன்னன் மூவாசையுமற்ற முனிவர்களது தவச்சாலையென்று பயபக்தியுடன் தன் சேனை யானை முதலிய பரிவாரங்களைச் சோலைக்கு வெளியே நிறுத்திவிட்டு உள் நுழைந்தான். பிரமதேவருக்கு நிகரான உத்தம முனீந்திரரைக் காண வேண்டும் என்ற ஆவலால் பசிதாகத்தையும் மறந்து மகிழ்ச்சியுடன் சென்றான். தன் மணிமகுடத்தையும் வில் வாள் முதலிய ஆயுதங்களையும் அகற்றிவிட்டு மெல்லச் சென்றான்.

அங்கு வேத உபநிடதங்களில் வல்லவர்களும் உறுதியான நியமம் உள்ளவர்களும் மனத்தையும் பொறி புலன்களையும் அடக்கியவர்களும், வேதத்தின் ஆறு அங்கங்களை நுட்பமாக அறிந்தவர்களும், முத்தி நெறியைக் கடைப்பிடித்தவர்களும், பரபட்சத்தை மறுத்து சுபட்சத்தை நிறுவ வல்லவர்களும், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம், சொற்கள் வந்த காரணங்கள் ஆகிய இவைகளைத் தெரிந்தவர்களும், காலம் அறிவதில் வல்லவர்களும், ஒவ்வொன்றுக்கும் காரண காரியங்களை அறிந்தவர்களும், பறவைகளின் ஒலிகளின் கருத்தையறிந்தவர்களும் ஆகிய முனிவர்கள் அநேகர், ஆங்கே ஒவ்வொரு பகுதிகளில் இருந்து வேதங்களை இனியசுரத்துடன் ஒலித்துக்கொண்டும், உலகையே மறந்து பரம்பொருளை நினைந்து விழித்த கண் குருடராக இருப்பதைக் கண்டான். அவ்வரசன் அங்குள்ள முனிவர்களுடைய

ஆசார நியமங்களைக் கண்டு அதிசயம் அடைந்தான். பிரம்ம லோகத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டான்.

பற்பல கொடிப்பந்தர்களும், பல யாக வே திகைகளும் ஆச்ரமங்களும் சூழ, இடையில் மிக்க இனிமையான கண்ணுவருடைய தவச்சாலை விளங்கியது.

தன்னந்தனியே அந்த பர்ணசாலையில் நுழைந்தான். ஒரு புதிய காலடியின் ஒலியைக் கேட்டு ஆச்ரமத்துக்குள் இருந்த சகுந்தலை வெளியே வந்தாள். அவள் இலக்குமியின் மறு அவதாரம்போல் விளங்கினாள். ஒழுக்கமும் ஆசாரமும் உள்ள அவள் அழகின் கருவூலமாகக் காட்சியளித்தாள். அம்மாதரசியைக் கண்டு துஷ்யந்தன் திடுக்கிட்டான். அதிசயம் அடைந்தான். கண்களை இமை கொட்டாது பார்த்தான். பலமுறை பார்த்தும் அவனுடைய ஆவல் அடங்கவில்லை. தூய பிரம்மசாரியாகிய கண்ணுவமுனிவருடைய இப்புனிதமான தவச்சாலையில் இப்படி அழகே ஒரு உருவமாக விளங்கும் இந்த இளம் பெண் உறையக் காரணம் யாது? இவள் இரதி தேவியோ? சசிமகளோ? என்றெல்லாம் ஐயுற்றான்.

சகுந்தலை சற்று நாணத்துடன் அவனைக் கண்டு அவனுடைய அரசலட்சணங்களையும் ஏற்றத்தையும் தோற்றத்தையும் பார்த்து, பூதலம் முழுவதும் ஒருகுடைக்கீழ் ஆண்டு தனிச் செங்கோல் நடத்தும் சந்திரகுலத்துத் தோன்றல் துஷ்யந்தன் என்று ஊகித்து உணர்ந்தாள். வந்த மன்னனை வரவேற்புச் செய்வது கடமையென்றுங் கருதினாள்.

'வாருங்கள்; உங்கட்கு நல்வரவு! இங்கேயே இருங்கள்' என்று தேன் கூட நாணத்தக்க இனிய மொழிகூறி ஒரு தர்ப்பாசனந்தந்து உள்ளே செல்லாமலும் எதிரில் நில்லாமலும், பூங்கொடிக்கு அருகே சிறிது மறைந்து நின்றாள்.

அப் பெண்ணரசியின் அடக்கத்தையும் பண்பினையும் பார்த்த பார்த்திபன் மேலும் வியப்புற்றான். அவன் உள்ளம் அழலிடைப் பட்ட மெழுகுபோல் உருகியது. மதுவுண்ட வண்டுபோல் மயங்கினான்.

'மாதர்குல மாணிக்கமே! நான் இலிலன் என்ற சக்ரவர்த்தியின் புதல்வன். என் பேர் துஷ்யந்தன். கண்ணுவ முனிவரைக் காணவந்தேன். அவர் எங்கே போயிருக்கின்றார்? தூய்மையும் வாய்மையும் படைத்த பரமஞானியாகிய முனிவருடைய தவச்சாலையில் இருக்கின்ற நீ யார்? சொல்' என்று கேட்டான்.

''வேந்தர் பெருமானே! வணக்கம். என் பிதா கண்ணுவர்; அவர் மாலினி நதிக்குச் சந்தியாவந்தனஞ் செய்யப் போயிருக்கிறார். என் பேர் சகுந்தலை. சற்று நேரம் இருந்தால் என் தந்தையைத் தரிசிக்கலாம்.''

''வனிதையர் திலகமே! எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கின்றது. கண்ணுவரோ மாதரை மனத்தாலுந் தீண்டாத பிரம்மச்சாரி. தவ ஒழுக்கம் பூண்டவர். அவர் உனக்குப் பிதாவா? உன்னைக் கண்டவுடன் என் மனம் உன்பால் கட்டுண்டது. என் மனம் தவறான வழியில் செல்லாது. கண்ணுவர் அந்தணர். அவருடைய மகள் நீ என்றால் அந்தண மாதை என் மனம் விரும்பாது. ஒரு போதும் நியதியினின்றும் வழுவாத என் உள்ளம் உன்னை விரும்புகின்றபடியால் நீ அவருடைய மகளாக இருக்க முடியாது. உண்மையைச் சொல்.''

''மன்னர் மன்னவரே! முன் ஒரு சமயம் என்னைப்பற்றி ஒரு முனிவர் என் பிதாவான கண்ணுவரைக் கேட்டார். அப்போது என் பிதா கூறியதைக் கூறுகின்றேன்.

ஒரு சமயம் விசுவாமித்திர முனிவர் கடுந்தவம் புரிந்தார். தேவர்கூட்டங்களுக்கெல்லாம் தலைவனாகிய இந்திரன் அவருடைய தவத்தைக்கண்டு அஞ்சினான். தன் பதவி விலகிவிடுமோ என்று நடுங்கிய இந்திரன் மேனகையைப் பார்த்து ''அழகுள்ளவளே! விசுவாமித்திரருடைய தவம் உக்கிரமானது, நீ சென்று அவருடைய தவத்தைத் தடுத்து மயங்கச் செய்'' என்றான்.

மேனகை அவனை வணங்கிக் கூறுவாள்: ''தேவர் கோமானே! மிகப் பெரிய தவமுள்ள விசுவாமித்திரரைக்கண்டு நீரே நடுங்குகின்றீரே! நான் அவரை எப்படி நெருங்குவேன்? அவர் சீற்றம் உடையவர். தவத்தினால் ஏற்றமும் படைத்தவர். அவர் அரச மரபிற்பிறந்து தவத்தால் அந்தண

ரர்க ஆனவர். திரிசங்குவுக்குச் சுவர்க் கந்தந்தவர். அநுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்தராடம்:என்ற ஐந்து நட்சத் திரங்களைத் தெற்கே உண்டாக்கினவர். அவருடைய கோபாக்கினி என்னை எரித் திடுமே? அவருடைய தவத்துக்கு உலகமே நடுங்குகிறதென்ருல் பெண்ணுகிய நான் நடுங்காமல் இருக்க முடியுமா? அவர் உலகங்களை எரிக்கும் பேராற்றல் உடை யவர். உலகத்தையே வேருகப் படைக்கும் ஆற்றல் படைத்தவர். மகாமேரு மலையைப் பந்தாடுவார். இமயமும் அக்கினியும் வாலகில்யர்களும் தேவர்களும் அவரைக் கண்டு அஞ்சுகின்ருர்களே? அவரைக் கண்ணெடுத்துக் காணும் ஆற்றல் எனக்கு ஏது? நீர் எனக்கு அருள்செய்யும் என் ருள்.

இந்திரன் ''மேனகையே! நீ மெல்லச் செல். உனக்கு உதவியாகத் தென்றலை யும் மன்மதனையும் அனுப்புகின்றேன்'' என்று தேற்றியனுப்பினுன். மேனகை விசுவாமித்திரர் தவஞ்செய்யும் இடத்திற்கு வந்தாள். அவள் மனம் நடுங்கியது. வணங்கினுள். அப்போது இந்திரன் ஏவ லால் தென்றல் காற்று அவளுடைய ஆடையை விலக்கியது. மேனகை வெட் கப்பட்டுக் காற்றை நிந்தித்து ஆடையை எடுக்க முயன்ருள். அவளுடைய மாற் றுயர்ந்த பொன்போன்றமேனியின் அழ கைக்கண்ட முனிவர் மயக்கமுற்ருர். அவ ருடைய தவம் நழுவியது. உள்ளம் உரு கியது. அவாபெருகியது. அவளைத் தழு விஞர். வெகு காலம் அவளுடன் சேர்ந்து விளையாடினுர். பற்பல காலம் அகன்றது. நதியில் செல்லும்போது அவர் தவம் அழிந்ததனுல் கால் நீரில் நனைந்து ஒலி யுண்டாயிற்று. விண்வழியே உலாவும் அவர் இப்போது மண்வழியே நடக்கத் தொடங்கினுர். தவவலிமை குன்றியதைக் கண்ட மேனகை மனம் மகிழ்ந்தாள். விச் வாமித்திரருடன் கூடி அவள் கருக் கொண்டு ஒரு அழகிய பெண்ணைப் பெற் ருள். வந்தவேலை முடிந்துவிட்டதாக நினைத்து அப்பெண்மகவை மாலினி நதிக் கரையில் வைத்துவிட்டு இந்திரவுலகஞ் சென்றுவிட்டாள். பறவைகள் கருணையால் நிழல் கொடுத்துக் குழந்தையைக் காப் பாற்றின. அங்கே நீராட வந்த கண்ணு வரைக் கண்டு, பறைவகள் வணங்கி ''இவளை நீர் காப்பாற்றும். இவள் உமது நண்பராகியவிசுவாமித்திரருடையபுதல்வி'' என்று கூறின. பறவைகளின் பாஷை களை யெல்லாம் அறிந்த கண்ணுவ முனி வர் அப் பெண்மகவைக் கருணையுடன் எடுத்து வளர்த்தார். சகுந்தலை என்று பெயர் சூட்டினுர். சகுந்தம் என்ற பறவை களால் காப்பாற்றப்பட்டவள் என்று, என் பேருக்குப் பொருள். விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்தவள். என் வளர்ப் புப் பிதா கண்ணுவர். இது என் சரிதை என்ருள்.

இதனைக் கேட்ட மன்னவன் மட்டற்ற மகிழ்ச்சியுற்ருன். மேன்மேலும் அவன் உள்ளத்தில் காதல் வெள்ளம் ஊற்றெடுத் துக் கரைபுரண்டு திரைசுருண்டு ஓடியது.

கல்யாணியே! விசுவாமித்திரர் சூரிய குலத்து மன்னர். நான் சந்திர குலத்து மன்னன். சூரிய குலம் எங்கட்கு சம்பந்த முடையது. நீ என் அன்புக்கு உரியவள். உன்னை நான் மனைவியாக வரிக்கின்றேன். விலையில்லாத நவரத்தின மாலைகளும் பொன்னுடைகளையுந் தருகின்றேன். நீ என்னைக் கணவனுக ஏற்றுக்கொள்'' என் ருன்.

சகுந்தலை ''வேந்தே! என்னை மன்னிக்க வேண்டும். நான் என் பிதாவுக்குக் கட்டுப் பட்டவள். அவளுடைய அனுமதியின்றி யான் எதையும் செய்வதில்லை. நீர் சற்று நேரம் இரும். அவர் வந்த பின் அவரிடம் என்னைப் பெற்றுக்கொள்ளும். ஆற்றங் கரையில் அனுதையாக இருந்த என்னை எடுத்து இத்தனைகாலம் ஆதரவு காட்டித் தாயினும் சாலப்பரிவுடன் வளர்த்த என் தந்தையின் கட்டளையின்றி நான் உம்மை யடைவது அறம் ஆகாது. அந்தண ருடையகோபத்துக்கு ஆளாகக்கூடாது'' என்ருள்.

துஷ்யந்தன், ''மானே! உன் பிதா பரம சாது. சந்திரகுலத்தோன்றலாகிய என்னை நீ யடைவது பற்றிப் பெருமகிழ்ச்சியடை வார். திருமணம் எட்டுவகை என்று அற நூல் கூறுகின்றது. பிராம்மம், தைவம், ஆரிஷம், பிராஜாபத்யம், ஆசுரம், காந் தர்வம், இராக்கதம், பைசாசம் என்பவை ஆகும்.

(தொடரும்)